508

C. Viradaraja Pillay

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto

https://archive.org/details/gc-sh10-0015

உ கணபதி துணை.

சௌந்தரியலகரி.

வீரை

கவிராசபண்டிதர்

அருளிச்செய்தது.

இது

சைவஎல்லப்பநாவலர்

அருளிச்செய்தவுரையுடன்
யாழ்ப்பாணத்திற்
சைவப்பிரகாசவித்தியாசாலைக்
கதிபதியாகிய-நல்லூர்-

ஆறுமுகநாவலரால்

பரிசோதிக்கப்பட்டு,
சதுரங்கபட்டணம்

அண்ணாமலைமுதலி
யாரவர்களால்

தமது
சரஸ்வதீவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
சௌமிய௵ கார்த்திகை௴.

nov-dec. 1849

உ கணபதி துணை.

சிவமயம்.

சௌந்தரியலகரி.

மூலமும்-உரையும்.

முகவுரை.

"தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழி பெயர்ப் - பெனத்தகு நூல்பாப் பீரிரண் டென்ப" என்பது கொண்டு தேவியுடைய சரித்திரத்தையும் அவயவத்தையும் எடுத்து வடமொழியினால் முற்காலத்தில் சொல்லப் பட்ட பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ் மொழியில் இறக்கிச் சொல்லப்படும் பனுவல் இது ஆதலாலும், தமிழ்வழங்கும் எல்லையளவும் நடத்தலாலும், கற்போர் நாவிற்கு இனிய மொழிபடச் செய்தமையாலும், இகபரம் இரண்டினும் நல்வழிப்படுத்தும்

என்பதனாலும், உரை எழுதவேண்டி, பிற்காலத்தில் சொல்லப்பட்ட பனுவல் இது என்பது கருதி, இதற்கு முற்காலத்தினும் பிற்காலத்தினும் கூறிய இலக்கண இலக்கியங்களுள் சில எடுத்துக்காட்டி, யான் அறிந்த அளவினாலே எழுதினேன். ஆதலால், இவ்வாறு எழுதிய உரைகொண்டும், தேவியுடைய சரித்திரங்களைச்சொல்லும் பிறநூல் கொண்டும், அந்தணர்முதலிய அறிவுடையோர் சொல்லும் உபதேசம் கொண்டும், இதன் விரிவெல்லாம் தெளிந்துகொள்க.

உ சிவமயம்.

பாயிரம்.

(அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

மொழிந்தமறை நூலியற்று முகபடாம
ணிந்துமுது ஞான தானம்—பொழிந்துத
ன திணைமணியென் றிருசுடரும் புனைகளிற்
றைப் போற்றல் செய்வாம்—வழிந்துபெரு
ம் புனல்பரந்து வடவரையிற் றுலகேழு மே
ழு மொக்க—வழிந்திடினு மழியாத வபிரா
மி பாடல்வள மளிக்க வென்றே ... . *

(இதன் பொருள்.)

கடல்களெல்லாம் தத்தம் எல்லைகடந்து மகா
பிரளயசலமாகப் பரந்து வடமேருகிரியம்
இறுதலையடைந்து அம்மேருவால் நிலைபெ
ற்ற கீழேழுலகும் மேலேழுலகும் அழிந்தி
டினும் அழியாத அபிராமியுடைய பனுவ
லாக யான்சொல்லும் பாடலுக்கு வளந்தரு
க என்று, சிவனால்சொல்லப்பட்ட வேதமாகி
ய நூலினால் இயற்றப்படும் முகபடாத்தை
அணிந்து முற்றுப்பெற்ற ஞானமாகிய மத
த்தைப்பொழிந்து சந்திரசூரியராகிய இரு
சுடரையும் தனது இரண்டுமணியாகப் புனை
ந்த யானையைப் போற்றல்செய்வாம். என்ற
வாறு. ❀ வேதநூலால் இயற்றிய முகபடா

த்தை அணிந்து ஞானமதத்தைப் பொழிந்து சந்திரசூரியரை மணியாகப் புனைந்த களிறு எனவே, விநாயகன் என்பதாயிற்று.—முகமானது-வேதமொழி யடுக்கால் துதிக்கப்படும் துதிமொழியைப்பொருந்திய வதனால், அது முகபடாமாக உருவகஞ்செய்யப்பட்டது.—உலகு என்னும் முதற்பொருளுக்குக் கடல் மேரு முதலாயின சினைப்பொருளாதலில், "சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்,, என்பதுகொண்டு புனல்பரந்து வடவரையிற்று என்று கருத்தாவைக் கொண்டு முடியும் வினையெச்சங்கள்-சினைவினையாக நின்று அழிந்திடினும் என்ற முதல் வினையைக் கொண்டு முடிந்தன.—உம்மை-சிறப்பு.—மேலேழுலகமாவன- பூலோகம், புவலோகம், சுவலோகம், மகாலோகம், சனலோகம், தபோலோகம், சத்தியலோகம், என இவை.—கீழேழுலகமாவன-அதலம், விதலம், சுதலம், நிதலம், ரசாதலம், மகாதலம், பாதாளம், என இவை.—இதனுள்- முகபடாமும் மதமும் மணியும் யானைக்கு இயைபுடையவாக உருவகஞ்செய்தலால், இயைபுருவகம் என்னும் அலங்காரம் காண்க.

[இது விநாயகவணக்கம் கூறியது.] (க)

இத்தனை நா ணியிருக்க வாயிருக்க வியலி
ருக்க வருள்பா டாமன்—மத்தனையா ளுங்
கொடியை யிப்போதென் வருத்துகின்ற வா
றென் பீரேற்—பித்தனையா ரேவல்கொள்
வார் பித்தொழிந்தா லுரியவர்க ளடிமை
யோலைக்—கொத்தனையா ரேவல்கொள்ளார்
கொள்ளும்போ தெவனாலே குழப்பலாமே.

(இ-ள்.) இத்தனை நாளும் மக்களினது வடிவம் எடுத்து நீ இருக்க உனக்கு உறுப்பாகிய வாயும் இருக்கஅவ்வாயில் தோன்றும்இயற்றமிழும் இருக்க மத்தனை ஆளும் கொடி போல்வாளை நினைந்து அவளுடைய அருளைப்பாடாமல் இப்பொழுது வருத்துகின்றவாறு என்கருதி என்று என்னைப்பார்த்துச்சொல்வீராயில்; பித்தனை யார் ஏவற்றொழிலுக்கு உரியவனாக்கிக் கொள்வார். பித்து அவனிடத்து ஒழிந்தால், உரிமையாக வுடையவர்கள் அடிமைகொள்ளும் ஓலைக்கூட்டத்தை யுடையவனை எவர் ஏவல்கொள்ளார். கொள்ளும் பொழுது எவனாலே விலக்கல் செய்யலாம். ஒருவராலும் விலக்கல் செய்யக்கூடாது. எ-று. * எவனாலே என்பதற்கு யாதுகாரணத்தினாலே என்று பொருள் உரைப்பினு

ம், ஆம்.—அடிமைபோலே-சாதனைவோலே —
ஏகாரம் - ஈற்றசை.—உலகின்மேல் வைத்து
ரைத்த இதனைச்சுருதி-இவ்வாறுபோல யானு
ம் பித்தையுடையேன் ஆதலின் அவள் ஏவல்
கொள்ளாமல் இருந்தாள் பின்பு பித்து ஒழி
ந்தேன் ஆதலின் ஏவற்கு உரியனுக்கிக் கொ
ண்டாள் இவ்வாறு கொள்வதனை எவனுலே
விலக்கல்செய்யலாம் விலக்கல்செய்யக்கூடா
து என்பது வருவிக்கப்பட்டமையால், இத
னுள் ஒட்டு என்னும் அலங்காரம் காண்க.
அன்றியும் "ஒருமையிற் பன்மையும் பன்மை
யி னொருமையு-மோரிடம் பிறவிடந் தழுவ
லு முளவே,, என்பது கொண்டு தன்னையை
ப் படர்க்கையாகக் கூறியதெனினும், பொ
ருந்தும். [இது இப்பனுவல் செய்தற்குக்
காரணம் கூறியது] (௨)

யாமளை தன் பெரும்புகழை யாதிமறை
நாலின்வடித் தெடுத்த நூலை—நாமகடன்
பாடலிதென் றரனுர்க்கு நவிலவவர் நகை
செய் தன்றே—பாமகளை யருகழைத்துப்
பருப்பதத்திற் பொறித்திருந்த பரிசு காட்டு
ஞ், சேமதிதிப் பாடலையென் புன்கவியாற்
கொள்வதவ டிறமை யன்றே .... *

(இ-ள்.) யாமளை என்னும் பெயரை யு

டையாளது பெரிய புகழை எல்லா நூல்களுக்கும் ஆதியாக உடைய வேதம் நான்கினுள்ளும் வடித்துச் சாரமாக எடுத்த நூலை-நாவின்மகளானவள் தனது பாடல் இதுவென்று சிவஞானவர்க்குப் படித்துக்காட்டச் சிவஞானவர் நகைசெய்து அப்பொழுது அப்பாவின்மகளை அருகே அழைத்துக் கைலாயகிரியில் எழுதப்பட்டிருந்த முறைமையினை அவட்குக் காட்டாநின்ற சேமஞ்செய்துவைத்த நிதிபோன்ற பாடலை-எனது பொல்லாக்கவிதையால் கொள்வது-அவள்திறமையே. என்னுடைய திறமையல்ல. எ-று. ஃ கைலாயகிரியில் எழுதியபாடல்- நாமகள் கலைமகளாதலின், இவளிதையத்தில் தோன்றிற்று. அதலைச் சிவனுக்கு உவப்பு உண்டாமென்று படித்தாள் என்க.—மறைநூலின் வடித்தெடுத்தநூலை எனப் பாடம் ஓதுவாரும் உளர். தன்-சாரியை.—அன்று-அசை.—"இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி-பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே,, என்பது கொண்டு அரன் என்னும் பெயரின் முன் ஆர் என்பது பொருந்தி அரனார் என நின்றது. அது உயர்திணைப் பன்மைகொண்டு முடிக்கப்படும். [இது அவையடக்கங் கூறியது.] (௫)

அரன்கயிலைப் புறத்தெழுதப் படுநூலை யருந்தவத்துப் புட்ப தந்தன்—பாந்தவடவரையழுத்த வதைக்கவுடபாதருளம் பதித்துமுற்றுந்—தரம்பெறுசொல் லமுதெனப்பின் சங்கரமாமுனிக்கருள'வந்த மேகஞ்—சுரந்துலகில் வாடுமுயிர்ப் பயிர் தழைப்பச்சொரிந்ததெனச் சொல்வர் நல்லோர்......*

(இ-ள்.) அரனது கைலாயகிரியி னிடத்து எழுதப்பட்டிருக்கின்ற நூலை அரியதவத்தையுடைய புட்பதந்த விருடியானவன் கண்டுணர்ந்து மேலே பாந்திருக்கின்ற மேருகிரியில் பொறிப்ப அந்தநூலைக் கௌடபாத விருடியானவன் உள்ளத்தில் தரித்துப் பின் இந்தநூல் முழுதும் தகுதிபெற்ற சொல்லாகிய அமிர்தமென்று உட்கொள்ளும் படிக்குச் சங்கராசாரியமுனிக்கு அருளிச்செய்ய அந்தச் சங்கராசாரியமுனியாகிய மேகம்அருள் சுரந்து உலகில்பிறப்பு இறப்பு முதலிய துன்பங்களாகிய வெயிலினால் வாடும் உயிராகிய பயிர்கள் தழைப்ப வடமொழிக் கவியாகிய மாரியைச் சொரிந்தது என்றுசொல்வர் நல்லறிவுடையோர். எ-று. ※"பிறைதவழு மெழிலேருன்றப் பிறங்குகதிர் வெண்

கோட்டாற் - செறிகதிர்செய் தடங்குடுமிச் செம்பொன்மால் வரைவாய்ப்ப -மறைபுகழுஞ் சவுந்தரிய லகரியினை வகுத்தெழுதிய, விறல்செழுமு வேழமுகன் விரைமலர்த்தா ளிணைதொழுவாம," என்று விநாயகனை இப்பனுவலை மேருகிரியில் எழுதினன் என்பாரும் உளர். இவர்வடநூலால் புட்பதந்தவிருடி எழுதினனென்பது உடன்பட்டு இவ்வாறு கூறினர்.—உயிர் என்றது-மக்களை.—அந்த என்பது விரித்தல் விகாரம். மரூஉமொழியெனினும், அமையம். "அந்தநான் முகனையுந்தி பூத்தோன்," என்றார் பிறரும்.—இதனுள்-சிறப்பித்து உருவகஞ்செய்தமையால், சிறப்புருவகம் என்னும் அலங்காரம் காண்க. [இது முன் இப்பனுவலை வடமொழியால் செய்தவரை வியந்து கூறியது.] (௪)

(எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

இன்ன தன்மைய நூலினைக்கவி ராச ரா
சவ ரோதய—மன்ன னம்பிர மாத ராயன்வ
டித்த ருப்பொருள் கூறவே—கன்ன லஞ்சி
லை வேளெனுங்கவி ராச பண்டிதன் வீரை
யான்—சொன்ன யப்பெறு காவி யக்கவி
சொல்ல வென்றுநெ டங்குவான்.......*

(இ-ள்.) கவிவேந்தர்க்கும் கவிவேந்தரா யிருப்பார் வணங்க வரத்தினால் உதயஞ்செய்த கவிவேந்தனாகிய நம்முடைய பிரமாதராயனென்னும் பெயரையுடையான் மேற்கூறப்பட்ட தன்மையையுடைய வடநூலின் எடுத்துச் சொல்லுதற்கு அரிய பொருள்கள் எல்லாம் வடித்துக் கூற, வடிவினால் அழகிய கருப்புச்சிலையையுடைய வேளென்று சொல்லப்படும் கவிராச பண்டிதனென்னும் சிறப்புப்பெயரை யுடையான் வீரையென்னும் ஊரையுடையான் நயம்பெற்ற சொல்லால் தொடுக்கப்பட்ட காவியத்துக்கு உரித்தாகிய தமிழ்க்கவிதையைச் சொல்ல வேண்டுமென்று ஆரம்பிப்பான். எ-று. ❊ வடமொழிச்சந்தியாகலால், ரகாரம் மொழிக்கு முதலாயிற்று. [இது இத்தமிழ் கூறினார் இன்னாரென்று பாயிரம் கூறுதற்கு உரியார் கூறியது.] (ரு)

வடமொழியெ னும்பழைய விரிகடல்பிறந்திறைவர் மனையிடையி ருந்து சிலையே—
லிடமொடுத வழ்ந்துதன திடுபெயர்ச வுந்தரிய லகரியென நின்று வளர்மா—தடலரசு முன்பினுள பலமதப்ர பந்தமெனு மடு

பகைதுரந்தென் மணிநா—நடமிடுபெ ருங்கவிதை மதகரியொடும்புவியை நகரிவலம் வந்த திருவே....................*

(இ-ள்.) வடமொழியாகிய பழைய விரிந்த கடலினிடத்துப் பிறந்து, சிவனுடைய மனையாகிய கைலாயத்தில் எழுதப்பட் டிருந்து, பின்பு அவனுடைய வில்லாகிய மேருவின்மேல் விரிவோடு தவழ்ந்து, தனது இடுபெயர் சௌந்தரிய லகரியென்று சொல்லநின்று, வளர்ந்த அழகையுடைய தேவியாகிய வெற்றியரசு முன்பாக உலகத்தில் உள்ள பலமதங்களுடைய பிரபந்தமென்னும் அடுதற்கு உரிய பகையைத் துரந்து, அழகையுடைய எனது நாவில் நடிக்கின்ற பெரிய கவிதையாகிய மதயானைமேல் ஏறி, இப்புவியை நகரியாக வலம்வந்தது இச்சரித்திரம். எ-று. ※ மாது-பண்பாகுபெயர்.—தேவியுடைய சரித்திரம் கருத்தா ஆதலின் அதற்கு ஏற்ற உருவகஞ்செய்யக் கருதினமையால், என்மணிநா நடமிடு பெருங்கவிதைமதகரி என்றது தன்னைப்புகழ்தல் அன்றென்க. "பூமலி யசோகின் புனைநிழ லமர்ந்த- நான்முகற் றொழுதுநன் கியம்புவ னெழுத்தே,,

என்றார் பிறரும்.—ப்ரபந்தம் என வடமொழி தமிழ்மொழியாகத் திரியாது கூறியது முடுகுசந்தம் நோக்கி. "சக்ரவாளத்திளம் பேடைகாஞ்ஞாகாள்" என்றார் மேலோரும்.—இங்கே இந்நூலுக்குப் பெயர் சௌந்தரிய லகரியென்று சொல்லப்பட்டதாயினும், சிவமென்னும் கவிமுதல் நீநந்துமென்னும் கவியளவும் தேவியின் இன்பப்பெருக்கைச் சொல்லுதலால்-ஆனந்த லகரியென்றும், அப்பால் அவளழகின் பெருக்கைச் சொல்லுதலால்- சௌந்தரிய லகரியென்றும், வழங்குமென்றறிக. லகரி என்பது பெருக்கு. இதனுள்-பிறந்து இருந்து தவழ்ந்து நின்று பகைதுரந்து மதகரிமேலேறி வலம்வந்தது என்பதனால்-தொழில் பற்றியதன்மை என்னும் அலங்காரமும், ஒன்றை உருவகித்தும் ஒன்றை உருவகியாமலும் உரைத்தமையால்- வியனிலையுருவகம் என்னும் அலங்காரமும், காண்க. [இது தேவியுடைய சரித்திரத்தின் திறம் கூறியது.] (௩)

பாயிரமுற்றிற்று.

ஆனந்தலகரி.

(எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

சிவமெ னும்பொருளு மாதி சத்தியொ
டு சேரி னெத்தொழிலும் வல்லதா—மிவள்
பிரிந்திடினி யங்கு தற்குமரி தரிதெ னும
றையி னைக்குமா—னவபெ ரும்புவன மெவ்
வ கைத்தொழின டத்தி யாவரும்வ ழுத்து
தா—ளவனி யின்கணொரு தவமி லார்பணி
ய லாவதோபரவ லாவதோ.........*

(இ-ள்.) சிவமென்று சொல்லப்படும் மெய்ப்பொருளும்-ஆதிசத்தியோடு சேரில், எத்தொழிலும் நடத்த வல்லதாம். இச்சத்தி பிரிந்திடில் அப்பொருள் அசைதற்கும் அரியது அரியது என்று வேதங்கள் முழங்காநிற்கும். ஆதலால், ஒன்பது வியூகமாக இருக்கின்ற பெரிய புவனத்தைப் படைத்தல் காத்தல் அழித்தல் முதலாய எவ்வகைப்பட்ட தொழிலையும் நடத்துகின்ற யாவரும் துதிக்கும் அவளுடைய பாதத்தை இவ்வுலகினிடத்து அநேகந்தவம் செய்தவர்களன்றி ஒருதவமும் செய்யாதவர்கள் மெய்யினால் வணங்கக்கூடுமோ. வாக்கினால் புகழ்தல் செய்யக் கூடுமோ. கூடாது. எ-று. ※ இதனால் அவளையன்றி எவ்வகைப்பட்ட உயிர்கட்கு

ம் ஓர்செயல் இல்லை என்பது பெற்றும்.— சந்திரகிரணமும் சந்திரகாந்தமும் சேரும் பொழுது நீர் தோன்றியும்-பிரியும்பொழு து நீர் ஒழிந்தும்-இருப்பதுபோல, மெய்ப் பொருள் சத்தியோடு சேரில் உலகத்தைப் படைத்தல் முதலாகிய தொழில்கள் உளவா யும்-பிரியில் அப்பொருள் அசைவின்றி இரு ப்பதிஞல் அத்தொழில்கள் இலவாயும்- இரு க்கும், ஆதலால் இவ்வாறுகூறிஞர். வாமகே சுரதந்திரத்தில் சத்திகோணம் ஐந்துடனே சிவகோணம் நாலும் கூடுவது முத்தொழி லும் உண்டாதற்குக் காரணம் என்று சொல் லப்பட்டிருப்பதிஞலும்,இப்பொருள் கொ ள்க. ஆண் பெண் கூடி உலகத்தில் தொழில் நடப்பதற்கும் இதுவே காரணம்.— எத் தொழிலும் வல்லவாம் என்பது பாடமாயி ன், பண்மை மெய்ப்பொருள்மேல் ஏருது. தொழில்மேல் ஏற்றினும், இயங்குதற்கு ம ரிதரிது என்பதஞலும் - உம்மைகளிஞலும் இதற்கு முற்பனுவலாகிய கிரந்தப் பொரு ட்கு.மாறுபடுதலாலும்-பொருந்தாது என் பதுநோக்கி, அது பாடம் அன்றென்க.— நவ வியூகமாவன-காலவியூகம், குலவியூகம், நாமவியூகம், ஞானவியூகம், சித்தவியூகம்,

நாதவியூகம், விந்து வியூகம், கலாவியூகம், சிவவியூகம், என இவை. இவற்றுள் நிமிடம் முதல் கற்ப மளவும் காலவியூகம். ஆதலால், சூரிய சந்திராதிகள் எல்லாம் அடங்கின. அவ்வாறு நவவியூகங்களுள்ளும் உலகமெல்லாம் அடங்கும்.—வியூகம்-கூட்டம்.—ஆல்- அசை.—பொருளும் என்பதன் உம்மை- உயர்வுசிறப்பு.— இயங்குதற்கும் என்பதன் உம்மை-இழிவுசிறப்பு.—எத்தொழிலும் யாவரும் என்பவற்றின் உம்மைகள் - முற்றும்மை. ஓகாரங்கள் இரண்டும்-எதிர்மறை. [இது சத்தியையன்றிச் சிவத்துக்கு ஓர்செயல் இல்லை எனக் கூறியது.] (க)

பாத தாமரையி னுண்டு கட்பரம வணுவி னிற்பலவி யற்றினல்—வேத நான்முகன் விதிக்க வேறுபடு விரித லப்புவன மடையமான்—மூத ராவடி வெடுத்த னந்தமுது கணப ணுடவி பரிப்பமே— ஞாத னூர்பொடி படுத்து நீறணியி னுமு ளாத்தெனவள் பான்மையே...................... *

(இ-ள்.) தேவியுடைய பாதார விந்தத்தில் பொருந்திய நுண்ணிய துகளாகிய பரமாணுவைக்கொண்டு பலவகை இயற்றுக்க

னினால் வேதங்களையுடைய நான்முகன் வேறுபட்டிருக்கின்ற விரிந்த இடத்தையுடைய புவனம் அடங்கலும் படைக்க, அப்புவனங்கள் யாவையும் திருமாலானவன் பெரிய பாம்பின் வடிவு எடுத்து அனேகம் பெரிய படக்கூட்டமாகிய அடவியினால் தாங்க, அதற்குமேல் உருத்திரனானவர் அவற்றைப்பொடிபடுத்து விபூதியாக மெய்யில் பூசிக்கொள்ளுவானெனின், நாம் உரைத்ததனால் அவள் சரித்திரம் யாது அடங்கிற்று. ஆதலால் அடங்காது. எ-று. ❋ இதனால் அவள் பாதாரவிந்தத்தையே கருதுதல் வேண்டும் என்பது பெற்றாம்.—அனந்தம் என்பது-பன்மைப்பட நின்றது.—அணுவினாலே புவனங்கள் விதிக்கப்பட்டன என்றே ஆகமங்கள் துணிந்தன.—ஆலம் வித்தினால் பெரிய ஆலமரம் உண்டாக்குவதுபோல அணுக்களினால் புவனங்களை நான்முகன் உண்டாக்குவன்.— ஒருலகத்தின்கண் உள்ள உயிர்கள் ஒருலகத்தின்கண் இன்மையானும், உணவு முதலாயின வேறுபட்டமையானும், இடம் வேறுபட்டமையானும், வேறுபடு புவனம் என்றும், காக்குந் தொழிலுடையவன் திருமால் ஆதலால், மான்மூதராவடிவெடுத்தனந்த

முதுகணபதுடவி பரிப்ப என்றும், கூறி ஞர். [இது தேவியுடைய பாததூளியே மு த்தொழிற்கும் காரணம் எனக் கூறியது.]

அறிவி லர்க்கிதய திமிர மீருமள வற்ற வாதவ ரளப்பிலா—வெறிக திர்ப்ரபை கு ழைத்தி ழைத்தனைய தீவி யாமளை நினைப் பிலார்—செறிம திக்கிணரி னொழுகு தேன ருவி தெறுக லிக்கருண மணிக்குழாம்— பிறவி மைக்கடல் விழாதெ டுப்பதொரு பெருவ ராகவெண் மருப்பரோ ....*

இ-ள். யாமளையானவள்- அறிவில்லாதவ ரிக்கு அவருடைய நெஞ்சத்திலே உள்ள அந் தகாரத்தை அறுக்கின்ற அனேகஞ் சூரியரு டைய எண்ணிறந்த எறிக்கின்ற கதிரினுடை ய காந்திகளை ஒன்றுபடக் குழைத்துச் செ ய்ததுபோன்ற தீபமாய் விளங்காநிற்கிருள். தாமதகுணத்துடனே கூடியிருக்கின்றவரு டைய மடிக்கும் உள்ளத்துக்குப் பூங்கொ த்திலே நின்று ஒழுகும் தேன்பெருக்காய் இருக்கிருள்.ஒருவரை நெருக்கும் வறுமைக் கு அவ்வாறுமைதீர விரும்பியவைகள் எல்லா ம்கொடுக்கும் சிந்தாமணிக் கூட்டமாய் இ ருக்கிருள்.ஒருவரைப் பிறவியாகிய இருட் கு

டலிலிடத்து விழாது எடுப்பதற்குத் திருமால் அவதாரஞ்செய்த ஒப்பற்ற பெரிய வராகத்தினுடைய வெள்ளிய கோடாக இருக்கிறாள். எ-று. ❋ இதனால் அவளையன்றி ஒரு நன்மை அடைவதில்லை என்பது பெற்றும்.—தாமதகுணத்தினுடனே கூடி இவளை நினையாதிருக்கின்றவர்களை ஆட்கொள்ளவேண்டி அவர்கள் உள்ளத்துக்குப் பூங்கொத்திலே நின்று ஒழுகும் தேன்பெருக்காய் இருக்கின்ற படியினாலே - நினைப்பிலார் செறிமதிக்கிணரி னொழுகுதேனருவி என்றும், ஒருகாலத்தில் பூமி கடலுள் தாழ்ந்து போதலினால் திருமால் பன்றியினுருவம் எடுத்துத் தன்னுடைய கொம்பினால் அதனை எந்தி நிறுத்தினது போலப் பிறவியாகிய கடலின் நின்றும் கரையேற்றுதற்கு - பெருவராக வெண்மருப்பு என்றும், உருவகஞ்செய்தார்.—தீவு-மண்டலம்.—ஆரோ-அசை.—இதனுள்-யாமளை என்னும் ஒருபொருளைப் பலபொருளாக உருவகஞ் செய்தமையால்-அற்புத வுருவகமும், அவ்வொரு பொருளைப் பலவிடத்தும் நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள்தர உரைத்தமையால் - தீவகமும், தோன்றவே, அற்புத வுருவக தீவகம்

என்னும் அலங்காரம் காண்க. [இது நன்மைகளெல்லாம் தருவதற்குத் தேவியே காரணம் எனக் கூறியது.] (௩)

தேவெனப்புகழ வதினிமிர்ந்தூறிகர் செப்பு வாரபய வரதமாம்—பாவ கத்தபினய யத்தொடுற்றகை பரப்பி யென்பய மொறுக்குமே—யாவருக்குமஃ தரிது நின்பத மிரப்ப யாவையு மளிக்குமான்—மூவருக்குமொரு தாவ ரப்பொருளென் மூலமே தழைபு ஞாலமே........ ....*

இ-ள். அயன் அரி அரன் என்னும் மூவருக்கும் உற்பவிக்கும் காரணப் பொருளொன்று சொல்லப்பட்ட வேரானது வளரும் ஓர் பூமியானவளே. உன்னையல்லாத தெய்வங்களையும் தெய்வமென்று புகழ அதனால் இறுமாந்து உனக்குத் தாமும் நிகரொன்றுசொல்லும் அத்தெய்வங்களுடைய அபயமும் வரதமுமாகிய பாவகத்தினால் அபிநயத்தோடு உற்ற கைகளானவை-அவ்வாறு விரித்து யாது பயத்தைப் போக்கும். உன்னையல்லாத யாவர்க்கும் பயத்தைப் போக்குதற்கு அரிது. அவை அப்படியாக, நின்னுடைய பாதங்களே-ஒருவரால் இரக்கப்படுவன யாவை

யும் கொடுக்கும். எ-று. ❖ இதனாலும் உன்னையன்றி ஓர் நன்மை அடைவது இல்லை என்பது பெற்றாம்.—நிகர்செப்புவாருடைய கை எனக்கூட்டுக.—பயம் என்றது-அபய வரதத்துக்கு ஏற்பப்-பகையினால் வரும் அச்சமும், வறுமையினால் வரும் அச்சமும், ஆம்.—இரப்பு என்றது-பகையினால் வரும் இரப்பும், வறுமையினால் வரும் இரப்பும், ஆம்.—உற்பவிக்கும் காரணப் பொருள் என்று சொல்லப்பட்ட வேர் - முக்குணங்கள். அது வளரும் ஓர் பூமியானவள் என்க.—ஏகாரம்-பிரிநிலை.—தாவரப்பொருளின்மூலமே தழையுஞாலமே என்று பாடமாயின், உற்பவிக்கும் காரணப்பொருளினுடைய வேரானவளே விரிந்திருக்கும் உலகின்வடிவாய் இருக்கின்றவளே எனப் பொருளுரைக்க.—ஆல்-அசை.—[இது தேவியுடைய பாதமே இச்சித்ததெல்லாம் கொடுக்கும் எனக்கூறியது.] (ச)

தொடுக ரச்சிலைதொ டப்பொ ருமலர் சுருப்பு நாணிடுவ தைத்துகோ—லடுப டைத்தலைவ ணர்வ சந்தமலை தென்ற றேருருவ மருவமா—முடுகு கொற்றமத னொருவ னிப்

புவன முற்றும் வெற்றிகொள முடிவிலா—
நெடுமலர்க்கணருள் சிறித ளித்தனைகொ
ளிலி யேகரக பாலியே....... ....*

இ-ள். நீலநிறத்தை உடையவளே. கரத்தி லே கபாலத்தை உடையவளே. அம்பு தொடுக்குங் கையிற் பிடித்த வில்லானது-கையினால் தொடுதற்கும் பொறாத மலர். அதற்கு வண்டே-நாண். எப்வதும்-ஐந்தம்பே. அடுந்தொழிலை யுடைய படைத்தலைவனானவர் வசந்தகாலம். போரிற் செலுத்துகின்ற தேர்-மெல்ல இயங்குகின்ற தென்றற்காற்று. உருவமும் - அருவமே. இவ்வுறுப்புக்களையுடைய யாவரையும் முடுகுகின்ற வீரத்தைப்பொருந்திய காமனும்-வேறோர் துணையில்லாத ஒருவனே. இப்படி நொய்வாயிருக்கின்றவன் இப்புவன முழுதும் வெற்றிகொள்ளும் படிக்கு,நெடிய மலர் போலுங் கண்ணினின்று ஒழியாத அருளிற் சிறிது அவனுக்குக் கொடுத்தனையோ எனக்கு அறியப் படுவதாய் இருக்கவில்லை. நீ சொல்வாயாக. எ-று. இதனால் நின்னருளன்றி ஒருவர்க்கும் வலி இல்லை என்பது பெற்றும்.—நீசொல்வாயாக என்பது எஞ்சிநின்றது.—

கருப்புச் சிலை மறையைப் பூமாலை சுற்றியிருக்கப் படுதலால், ஒற்றுமை நயம் பற்றி-மலர் சிலை எனப் பட்டது.—விகாரத்தால் சுரும்பு சுருப்பு எனவாயிற்று.—"உருவக வுவமையிற் றிணைசினை முதல்கள் - பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே,, என்பது கொண்டு படைத் தலைவனார் என்னும் உயர்திணைப்பெயர் வசந்தகாலம் என அஃறிணைப் பெயராயிற்று.—ஐந்தம்பாவன - தாமரை-சூதம்-அசோகம்-முல்லை-நீலம் - இவை.—கொல்-ஐயம்.—அருளில் சிறிது அளித்தனை ஆகலால் உனது பெருமையே பெருமை என்று பொருளுரைத்து - கொல் என்பதனை அசையாக்கினும், பொருந்தும்.— ஒருவனுக்குக் கேடுதானே ஆக்கம் என்றாற்போல அருவந்தானே உருவம் என்றார்.— "குணந்தொழின் முதலிய குறைபடு தன்மையின்-மேம்பட வொருபொருள் விளம்புதல் விசேடம்,, என்பது கொண்டு மதன் என்னும் ஒருபொருள் உறுப்புகளினால் குறைபட்டும் அப்பொருள் மேம்படுவதாக உரைத்தமையால், இதனுள்-உறுப்புக்குறை விசேடம் என்னும் அலங்காரம் காண்க. "யானை யிரதம்-பரியா ளிவையில்லைத்-தானு மனங்கன் றனுக்க

ரும்பு-தேனூர் - மலரய்பா வென்று வடுப்ப
டுத்தான் மார-னுலசங்கள் ஏழென்று மொரு
ங்கு,, இஃது அவ்வலங்காரத்துக்குப் பிறர்
காட்டிய பாட்டு. இதனுனும்; அறிக. [இது
தேவியருளின் செய்கை கூறியது.] (௫)

மாயன் வணங்கிடுன் மால்வடி. வங்கொள
வாடு மரன்றுயர் போதாதோ—தூய மத
ன்றொழ வாண்வடி வம்புணர் தோகைகள்
வண்டயி றேனேபோன்—மேய வழுங்குமு
ருபம தென்சொல மேலிது கண்டவர் வா
ழ்வாரோ—நீபதி ரஞ்சகி மோசன வஞ்சகி
நீசெய்வ தொன்றல மாதாவே........ *

(இ-ள்.) தாயே. திருமாலானவன்-உன்னை
ப் பூசித்து வணங்கிய வதனால்-பண்டு மயக்
கத்தைச் செய்யும் உன்னுடைய பெண்வடி
வைக் கொள்ள, அப்பொழுது சிவன் வாடுந்
துயரம் அமையாதோ. தூய்மையுடைய கா
மனானவன் உன்னைப் பூசித்துத் தொழ, அவ
னுக்கு ஆண்வடிவத்தினால் அவனோடு புண
ரும் இரதியுடைய கண்களான வண்டுகள் உ
ண்கின்ற பூந்தேன்போல உன்னும்படிக்கு
நீ அப்பொழுது கொடுக்கின்ற அழகின் பெ

ருமையை எவ்வாறு உரைப்பேன். சிவனும் இரதியும் இவ்வாருயினர் என்றல்,இவரன்றி இவ்விருவகை வடிவையுங் கண்டவர்கள் உயிருடன் இருந்து வாழ்வாரோ. ஆகலால் நீ மிகவும் பிரியம் பண்ணுகின்றவள். மோகனத்தினுலே வஞ்சிக்கின்றவள். நீ செய்வது ஒரு செயலல்ல. என்றவாறு. ❊ இதனால் உன்னைப் பூசித்தவர்கள் அடையப்படாதவரமெல்லாம் அடையலாம் என்பது பெற்றும்.—செய என்னும் வினை எச்சத்தைத் தன்மையொருமை வினைமுற்றுக்குக — பூவில்லும்-பூவம்பும் - சைத்தியம் சௌரப்பியம் மாந்திரியம் என்கின்ற முக்குணங்களோடு கூடிவருகின்ற தென்றற்றேரும் - அமுதகிரணங்களையுடைய திங்கட்குடையும்-பூஞ்சோலையாகிய பாசறையும்- உடையவனுதலால்- தூயமதன் என்றும், சிவனுல் வரம்பெற்ற ஓரிருடி அச்சிவனைக் கொல்லக் கருதிச் செல்லும்பொழுது திருமாலானவன் தேவியுடைய வடிவை எடுத்து அவ்விருடியை வஞ்சித்துக் கொன்றான் அதனை அறிந்து அவ்வடிவைக் காட்டுவாயாக என்று சிவன் அத்திருமாலைக் கண்டு சொல்ல, மீண்டுந் தேவியினுடைய வடிவங்கொண்ட படியினுலே சி

வன் விரகத்தை யடைந்தான் என்பது முற்கதை யாகலான்; வாடுமரன் றுயர்போதாதோ என்றும்,கூறினர்.—மேய்தல் - உண்ணுதல்.—அது என்பது - பகுதிப்பொருள் விகுதி.—ஓகாரங்கள் இரண்டும்-எதிர்மறை. இதனுள்- உருவத்திற்குத் தேனையும் கண்ணிற்கு வண்டையும் உவமையாக்கிய வதனானும்- வண்டு உண்பதைக் கண் உண்பதற்கு உவமையாக்கிய வதனானும் - பண்புந்தொழிலும் பற்றிய வுவமை என்னும் அலங்காரமும், மோகனவஞ்சகி என்று இகழ்வதுபோலப் புகழ்ந்தமையால்-புகழாப் புகழ்ச்சி யலங்காரமும்,காண்க. [இது தேவியை வந்தித்துப் பெற்றோர் பயன் கூறியது.] (கூ)

மேகலை பொங்க மதாசல கும்ப மெனுமுலை கண்டிடை சோராநீர்—மாகவ ளங்கெழு நாணிறை யம்புலி வாண்முக மம்புவிமேலடார்போ—தேகநெ டுங்கழை பாசமொடங்குச மேர்பெற வந்தருள் காபாலி— நீகம லந்திகழ் தாள்வரு டென்றர னீர்மையின் விஞ்சிய கோமாதே....... ... .*

(இ-ள்.) கபாலத்தையுடையவளே! அரனது நீர்மையினும் மிகுந்த ஒளியையுடைய

மாதே! கமலம்போல் விளங்குகின்ற என்னுடைய தாள்களை அடிமைத்தொழிலை உடையானென்னும் உரிமையால் நீ வருடு என்று, என்முன் - மத்தத்தை யுடைய யானையினது மத்தகந்தானே என்று முலையைக்கருதி அச்சமுற்று மருங்கு நுடங்க அதன்மேல் கிடக்கின்ற மேகலை அசைய நீருண்ட மேகங்கள் வளம்பொருந்துகின்ற நாளில் பதினாறு கலையும் நிறைந்த அம்புலிபோலும் ஒளி பொருந்திய முகத்தோடு கூடி இதழ்பொருந்திய பூவம்பும் ஒப்பற்ற நெடிய கருப்புவில்லும் பாசமும் அங்குசமும் நாலுகையினிடத்தும் அழகுபெற-வந்தருள்வாயாக. எ-று. ※ இதனால் நீ என்முன் வரின் எல்லா இன்பங்களையும் அடைவேன் என்பது பெற்றும்.—கோமாது என்பதற்குத் தெய்வமகளிர்க்கெல்லாம் இராச மாதே என்று பொருள் உரைப்பினும், அமையும்.—என்னுடைய தாளை வருடு என்று என்முன் இவ்வண்ணம் வந்தருள் எனக் கூட்டுக.—மதத்தையுடைய அசலம் எனவே, யானை என்பதாயிற்று.—"சொற்றிரி யினும் பொரு டிரியா வினைக்குறை.,, என்பது கொண்டு சோரா என்னும் வினை யெச்சத்தைச் சோர வ

னக் கொள்க.— நீர்மாகவளங்கெழுநாணி றையம்புலி என்றது சரற்காலத்துச் சந்தி ரனை. அஃது ஒளி விளங்கி இருக்கும்.—அம் பும் வில்லும் பாசமும் அங்குசமும் சொ ல்லவே, நாலு கைகள் என்பது-வருவிக்கப் பட்டது.—இதனுள் அம்பும் வில்லும் நிர லே நிறுத்தி-முறையே போது கழை எனப் பொருள் கொண்டமையால், நிரனிறை என்னும் அலங்காரம் காண்க. [இது தேவி யை நோக்கி என்முன் வந்தருள் எனக் கூறியது.] (எ)

ஆரமு தின்கடல் வேலி செழுந்தரு வாய்மணி பம்பிய தீவூடே—பார கடம்படர் கானி லருங்கொடை பாய்மணி மண்டப வீடூடே— கோர சிவன்பர மேசனுண் மஞ்சமொர் கூர்பரி யங்கமெ ழுமேலே—சீரடரும்பர ஞான முறுங்களி தேவ ரருந்துவர் பூமாதே ....*

இ-ள். ஆயிரம் இதழையுடைய தாமரைப்பூவிலே இருக்கின்ற மாதே. அரிய அமுதத்தினை யுடைய கடலின் நடுவே செழுமையை யுடைய கற்பகதருக் கூட்டங்கள்-வேலியாக, அதன் நடுவே மணிகள் நெருங்கிய ஓர் தீப

ம். அதன் நடுவே பருத்த அணையை யுடைய கடப்ப மரங்கள் செறிந்த வனம். அதன் நடுவே அரிய கொடையை யுடைய கிரணங்கள் பத்திபாய்கின்ற சிந்தாமணிகளால் செய்ததோர் மண்டபமாகிய வீடு. அதன் நடுவே கோரத்தை யுடைய சிவனனவன் மேற்கவித்திருக்கின்ற உனது மஞ்சம். அதன் நடுவே பரமேசுரனவன் உனது கட்டிலென்று அதன் மேலே மேற்பட்ட ஞானத்தினல் நீ யோகநித்திரையாக இன்புறுநின்ற செல்வம் செறியும் மகிழ்ச்சியை அரிய தவத்தை யுடையவர் அனுபவிப்பர்-எ-று.

❋ இதனல் இவ்வாறு உணரப்பெறும் உவமை என்பது பெற்றும் —இதனுள் செல்வத்தின் உயர்ச்சியை மிகுத்துச் சொன்னமையால்-உதாத்தம் என்னும் அலங்காரமும், நிரலே நிறுத்திப் பொருள் கொண்டமையால்-நிரனிறை என்னும் அலங்காரமும், காண்க. [இது தேவி யோக நித்திரை கொள்ளு ந் தானம் கூறியது.] (அ)

(எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

மூலமணி பூரகத்தோ டிலிங்க மார்பு முதுகளம்விற் புருவநடு மொழிவ தாறு—ஞாலமுமென் புனலுமனற் பிழம்புங் காலு நா

தரூஉறு பெருவெளியு மனமுமாக—மேலணு
கிக் குளபதத்தைப் பின்னிட்டப்பாண் மேம
ண் கமலத் தாயிரந்தொட் டறுணபீடத்—
தாலவிடம் பருகியதன் மகிழ்நரோடு மா
னந்தமுறும் பொருளை யறிய லாமே....*

இ-ள். மூலாதாரமும் மணிபூரகமும் இலிங்கத்தானமாகிய சுவாதிட்டானமும் மார்பிடமாகிய அனகதமும் பெருமையையுடைய கழுத்தாகிய விசுத்தியும் விற்போன்ற புருவநடுவாகிய ஆக்கினையும் என மொழியப்படுவதான ஆறுதாரமும் - முறையே பூமியும் மெல்லிய புனலும் அனற்செறிவும் காற்றும் ஓசையுற்றிருக்கின்ற பெரிய ஆகாயமும் மனமுமாய் இருக்க, அப்படியிருக்கின்ற ஆறுதாரங்களை மூலாதாரத்திலும் இருந்து பேதித்து மேற்சென்று இவற்றைப் பின்னிட்டு ஆறுதாரத்துக்கு மேலாய் இருக்கின்ற ஆயிரமிதழை யுடைய மெல்லிய கமலமாகிய சிவந்த பீடத்திலே பாம்பின் விடத்தை உண்ட தன்னுடைய கணவராகிய சதாசிவனுனவருடனே கூடி மகிழ்ச்சியைப் பெறும் பொருளாகிய குண்டலிசத்தியை அவ்விடத்திலே யோகத்தினல்-அறியலாம்-எ-று.

҉ இதனால் அதனை அறிவதே வீடு என்பது பெற்றாம்.—ஆலம்- ஆகுபெயர்.—தாமரைக்கிழங்கு போன்றிருக்கும் மூலாதாரத்தைப் பற்றிப் புழையோடு பொருந்திய இடை பிங்கலை சுழுமுனை என மூன்று நாடி எழுந்து நிற்கும். அவற்றுள் இடையும் பிங்கலையும்-நாசி யிருபக்கமாக வந்து நிற்கும். சுழுமுனை - ஆறாதாரமாகிய ஆறுகமலத்தையும் கோத்துக்கொண்டு அவற்றின் மேல் ஆயிர விதழ்க் கமலத்தை நுனியிலே கொண்டு நிற்கும். அச்சுழுமுனை நாடியினூடே அனேகங் காந்திகளுடனே பாம்பின் வடிவாய் இருக்கின்ற குண்டலிசத்தி உடலை வளைத்து மூலாதாரத்தின்மேலே படத்தை வைத்துக்கொண்டு யோக நித்திரைசெய்யும். அதனால் இம்மூன்று நாடியையும் மலமூத்திரங்கள் அன்னம் முதலானவை வாயுவைப் பூரிக்கவொட்டாமல் நெருக்காதபடிக்கு அயற்றை நீங்கச்செய்து வாயுவைப் பூரித்தால் ஒடுங்கிய நாடி தாமரைநாளம்போல நிமிரும். இப்படிச் செய்துவரும் யோகப்பயிற்சியால் அபானத்துவார வழி காற்றுச் செல்லாமல் இடக்காற் குதியைக் குதத்தில் ஊன்றி வலக்காற் குதியை இலிங்கத்தானத்

தில் ஊன்றி ஆதனமாக இருந்து இடை பி
ங்கலை என்னும் நாசித்துவாரம் இரண்டினு
ள் ஒன்றை அடைத்து ஒரு துவாரத்தால்
வாயுவைப் பூரகஞ்செய்யுமளவில் அதனிடை
நிரம்பி மூலாதாரத்தை முட்டிப் பின்பு
மற்ற நாடி வழியே செல்லும். அதுவும்
நிரம்பப் பூரிக்குமளவில் அவ்வாயு மீண்டு
மூலாதாரத்தை முட்டிச் சுழுமுனைநாடி வ
ழியே செல்லும். அதுவும் நிரம்பப் பூரித்
து அவ்வாயுவைக் கும்பிக்குமளவில், சுவாதி
ட்டானத்தில் இருக்கின்ற அக்கினி மூண்டு
சுடர் விடும். அப்பொழுது மூலாதாரத்தி
லே தலை வைத்துக்கொண்டு இருக்கின்ற கு
ண்டலி சத்தி அவ்வெப்பத்தினாலே மேல்
நோக்கிச் சுழுமுனைநாடியின் வழியே ஆறு
தாரத்தையும் கடந்து ஆயிர மிதழை யுடை
ய தாமரையில் இருக்கின்ற சதாசிவனுடனே
சையோகமாம். அதனால் இவ்வாறு கூறினார்.
இதற்குச் சகாயம் - வாயுவும், அக்கினியும்,
ஆம். —பூதம் ஐந்தும் தன்மாத்திரை ஐந்
தும் ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்தி
ரியம் ஐந்தும் மனமும் ஆகத் தத்துவம் இ
ருபத்தொன்று. இவற்றோடு மாயை சுத்த
வித்தை மகேசுரன் சதாசிவன் இவர்களைக்

கூட்ட, இருபத்தைந்தாம். இதனுள் இருப த்தொரு தத்துவமும் மாயையுடனே பொ ருந்துகையினாலே, இவை பிரகிருதி என்ன ட்படும். மகேசுரன் எப்பாற்படுமெனில், அவனும் மாயை யுடனே கூடுகையினாலே அவனையும் கூட்டி இருபத்துமூன்று தத்து வமும் பிரகிருதி எனவாம். மாயை யாது டனே கூடிற்று அவ்வளவும் பிரகிருதி என் று சொல்லப்படும். இருபத்து நாலாந் தத் துவ மாகிய சுத்தவித்தை இருபத்தைந்தாந் தத்துவ மாகிய சதாசிவனுடன் கூடிய கூட் டம்-இருபத்தாறுந் தத்துவ மாம். அதுவே பரமான் மா. சிவமெனும்பொருளு மாதி சத்தியொடுசேரி னெத்தொழிலும் வல்லதா மிவள்பிரிந்திடினியங்குதற்குமரிதரிதெ னுமறை யிசைக்கும் என்றதும் இது - தனி த்திருந்தால் காரியம் இல்லை. கூடியவதனாற் காரியம் உண்டு ஆனபடியினாலே, சுத்தவித் தையும் சதாசிவனும் கூடிய கூட்டந்தானே ஒரு தத்துவம் எனப்பட்டது. ஆதலால் அக் குண்டலி சத்தியாகிய சுத்தவித்தை சதாசிவ னுடனே புணரும் புணர்ச்சியை அறிவதே வீடாயிற்று.—குளபதம் என்பது - ஆறுதா ரம் —மூலாதாரம்- குதத்துக்கும் இலிங்கத்

றக்கும் நடு—மணிபூரகம்-உந்தியினிடம்—மற்ற நாலாதாரத்தின் இடமும் இக்கவியிலுலே அறியப்படும்.—மூலாதாரத்தைச் சொன்ன பின்பு சுவாதிட்டானத்தைச் சொல்லாது மணிபூரகத்தைச் சொல்லிப் பின்பு சுவாதிட்டானத்தைச் சொன்னது - தோன்றுங் காரியமுறைமை பற்றி.—இதனுள் நிரனிறை என்னும் அலங்காரம் காண்க. [இது குண்டலிசத்தி தான் இருக்குந் தானம் விட்டுச் செல்லுமாறு கூறியது. (௬)

(அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

தாளிணைக் கமல மூறித் தருமமிழ் துட லமிழ்க—மீளவப் பதங்கள் யாவும் விட்டுமுற் பழைய மூலம்—வாளரா வென்ன வாகம் வளைத்துயர் பணத்தி ஞேடு—நாறுமைக் கயற்கண் டுஞ்சு ஞானவா னந்த மின்னே..*

இ-ள். சிரத்திலே ஆயிரம் இதழுடனே கூடியிருக்கும் தாமரையின் நடுவே விற்றிருக்கின்ற ஞானமகிழ்ச்சியையுடைய மின்போன்ற குண்டலிசத்தி - தன்னுடைய இரண்டு பாதகமலங்களினும் உள்ளிருந்து ஊறிப் புறப்படும் அமுதம் உள்ளன்னத்தின்

வழியே நாறுனியைச் செலுத்திப் பருகுத லால் உடலிலே பரந்து எழுபத்தீராயிரம் நா டிகளையும் நனைப்ப, அதின் பின்பு கும்பி த்தவாயுவை ரேசிப்ப அதனால் மீண்டு அவ் விடங்களையெல்லாம் அடைவிலே விட்டுக் கீழ் இறங்கித் தான் முன் இருந்த பழைய மூலாதாரத்திலே ஒளியையுடைய பாம்பெ ன்ன உடல் வளைத்து மேற்கொண்டிருக்கி ன்ற படத்தை யுடையதாய் நாடோறும் மையை யுடைய கயல்போன்ற கண்ணினால் யோக நித்திரை செய்யாநிற்கும்-என்றவாறு ❁ இதனால் அப்படித் துஞ்சுஞ் சத்தியைக் காண்பதே காட்சி என்பது பெற்றாம்.—இவ்வாறு உடம்பில் அமுதம் பரக்கும் பொ ழுது அளவிறந்த இன்பமும் அண்டத்திலே உள்ளவையும் அனேகங் காட்சியும் பிண்ட த்திலே தோன்றும்.—உலகத்தில் பாம்பு அ ளையிற் புகுந்த பொழுது உடல் வளைத்து உடம்பின்மேல் படத்தை வைக்கும். அது பாம்புக்கு உள்ள தொழில். அது போலக் குண்டலிசத்தியும் உடல் வளைத்து உடம்பி ன்மேல் படம் வைக்கும்—குண்டலி யுடை ய மகுடே வடிவையே நோக்கித் தாளிணைக் கமலம் என்றும், கடற்கண் என்றும், கூறி

ளோர்.—சகாரம்- ஈற்றசை. அன்றியும் மின்னே என்பதனை விளியாக்கி மின்போன்றவளே மேற்கூறிய குண்டலிசத்தி துஞ்சும் என்று பொருள் உரைப்பினும், பொருந்தும். இதனால் தன்மை என்னும் அலங்காரம் காண்க. [இது குண்டலிசத்தி தான் இருக்குந் தானத்தை மீண்டு அடையுமாறு கூறியது.]

(எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

சிவகோண முற்பகர்வ தொருநாலு சத்
திநெறி செறிகோண மத்தொடொரு மருவு
கோ—ணவகோண முட்படுவ தெழுமூ வி
ரட்டியொரு நவில்கோண முற்றதுவும் வல
யமா—யிவரா நிரைத்ததள மிருநாலு மெ
ட்டிணையு மெழிலாய வட்டமொடு சதுர
மா—யுவமான மற்றதனி தனிமூ வகைக்க
ணுமெ னுமையாத முற்றசிறு வரைகளே.

இ- ள். முன் சொல்லப்படுவதாகிய சிவகோணம் நான்கும் சத்திகோணம் ஐந்தும் ஆகிய இவ்வொன்பது கோணத்தினுள்ளும் உண்டாவது நாற்பத்து முக்கோணம். இப்படி நாற்பத்து முக்கோணமாக உற்றதுவும் அதற்குமேல் வட்டமாக எழுதி நிரைத்த எட்டிதழும் அதற்குமேல் வட்டமாக எழுதி நி

ைாத்த பதினறிதழும் அதற்குமேல் அழகு பொருந்திய மூன்று வட்டத்தினிடமும் அதற்குமேல் மூன்று சதுரத்திினிடமும் என்னுடைய உமை பாதம் பொருந்திய இரேகைகள். எ-று. ※ இதனால் இவ்விரேகைகளையுடைய சக்கரத்தைப் பூசிக்கவேண்டும் என்பது பெற்றாம்.—சத்திநெறி செறிகோண யத்தொடொரு மருவுகோண் என்பது-சத்தியினுடைய முறைமை பொருந்திய கோணம் அந்நான்குகோணத்துடன் கூடிய ஒருகோணமெனவாம். எனவே ஐந்து கோணம் எனவாயிற்று.—எழுமூ விரட்டியொரு தவில்கோணம் என்பது - எழுமூவிரட்டியுடன் கூடப் புகல்கின்ற ஒருகோணம் எனவாம். எனவே நாற்பத்துமுக்கோணம் எனவாயிற்று —வட்டமொடு சதுரமாயுவமான மற்றதனி தனிமூ வகைக்கணும் என்பது-வட்டத்துடன் சதுரமாய் ஒப்பற்ற தனிதனிமூவகையினிடமும் எனவாம்- எனவே மூன்று வட்டத்தினிடமும் மூன்று சதுரத்தினிடமும் எனவாயிற்று·—வலயமாய் என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக —கோண் - விகாரம். "விண்பாலியோகெய்தி வீடுவர்" என்றார் மேலோரும்.—வலயமாய் என்பதனுள்

ஆய் என்றும் வினையெச்சத்தை ஆக என
க் கொள்க.—அது என்றுஞ் சுட்டுப்பெயர்
விகாரத்தால் அத்து என வந்தது. "இத்
தை மெய்யெனக் கருதி நின்றிட்டோர்க்கிடற் கழி
த்தலைப் படுவேனே" என்றார் மேலோரும்.—
சிவகோணம் நான்கும் கீழ்நோக்கியும் சத்
திகோணம் ஐந்தும் மேல்நோக்கியும் தம்
முள் புணரவே முக்கோணமும் அதனைச்
சூழ்ந்த எண்கோணமும் எண்கோணத்தைச்
சூழ்ந்த பதின்கோணமும் பதின்கோணத்
தைச் சூழ்ந்த மற்றொரு பதின்கோணமும்
அவற்றைச் சூழ்ந்த பதினாற்கோணமும் ஆக
நாற்பத்து முக்கோணம் ஆகின்றபடியினா
லே கௌளமதத்துக்குச் சிவகோணம் நா
ன்கும் சத்திகோணம் ஐந்தும் என்பதனை
யே வேண்டி அவற்றால் வருங் கோணங்க
ளைப் பதினெட்டு வன்மமும் இருபத்து நா
லு சந்தியும் ஆகவே கொள்ளப்படுதலால்
முற்பகர்வது என்றும், நவகோண முட்படு
வது என்றும், கூறினார்—சமய மதத்துக்
கே நாற்பத்து முக்கோணம் என வேண்டு
வது—வன்மமாவது-மூன்றிரேகை சந்தித்
தது.—சந்தியாவது இரண்டிரேகை சந்தி
த்தது.—நான்கு புறத்தும் வாயில் விட்ட

மூன்று சதுரம் இட்டு அதன் நடுவே மூ
ன்று வட்டம் இட்டு அதன் நடுவே சூழப்
பதினறிதழ் இட்டு அதன் நடுவே சூழ எட்
டிதழ் இட்டு அதன் நடுவே ஒருவட்டம் இ
ட்டு அதன் நடுவே ஒன்பதிரேகை ஒன்றுக்
கொன்று அளவு பெற எழுதித் துடைக்கும்
இரேகை அளவு அறிந்து துடைக்க. துடை
த்தபின் ஒன்பதிரேகையும் ஞாயிறு திங்கள்
செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனி
இராகு கேது என ஒன்பது கோளின்பெய
ரும் முறையே பெறும். அவற்றுள்-ஞாயிற்
றைச் சனியுடனும் திங்களைக் கேதுவுடனு
ம் செவ்வாயை வட்டத்துடனும் புதனை இ
ராகுவுடனுங் கேதுவைப் புதனுடனும்
இராகுவை ஞாயிற்றுடனும் சனியை வட்
டத்துடனும் வெள்ளியைத் திங்களுடனும்
வியாழத்தைச் செவ்வாயுடனும் கூட்ட, நா
ற்பத்துமூன்று கோணமாய் இருக்கும். இ
ம்முறையே எழுதுவது - சங்காரக்கிரமம்
எனவாம். ஓர்முக்கோணமும் அதற்கு மே
ல் எண்கோணமும் அதற்குமேல் பதின்
கோணமும் அதற்குமேல் மற்றொரு
பதின் கோணமும் அதற்குமேல் பதினற்
கோணமும் அதற்குமேல் வட்டமும் எட்

டிதழும் அதற்குமேல் பதினறிதழும் அதற்குமேல் மூன்றுவட்டமும் அதற்குமேல் மூன்றுசதுரமும் ஆக முறையே எழுதுவது - சிருட்டிக்கிரமம் எனவாம்.—விந்துவை முக்கோணத்தில் எழுதுவது - கௌளமதம் என்றும், முக்கோணத்தின் கீழாக ஓர்சதுரம் இருக்கும் அதன் நடுவே விந்துவை எழுதுவது-சமயமதம் என்றும், கூறுவர். விந்துச் சிவன் வடிவும், முக்கோணம் சத்திவடிவும்,ஆம்.—இவ்வாறு எழுதிய விந்துவும் முக்கோணமும் - சந்திரகண்டம் என்றும், எண்கோணமும் இரண்டு பத்துக் கோணமும் பதினான்குகோணமும் - அக்கினிகண்டம் என்றும், அதற்குமேல் இருக்கின்ற நால்வகையும்- சூரியகண்டம் என்றும், பெயர்பெறுதலின்; இது திரிபுரசக்கரம் என்று சொல்லப்படும். ஆதலால் மகாதேவிக்குத் திரிபுரசுந்தரி எனப் பெயராயிற்று.—இச்சக்கரத்தின் வகைமை மேல்வரும் பசுபதித னீதிகொண்டு என்னுங் கவியுரையில் உணர்க. [இது தேவி இருக்குஞ் சக்கரத்தைக் கூறியது.] (௰௧)

கலிநிலைத் துறை.

ஆதி சுந்தரி வடிவினை யயன்முதற் புல

வோ—ரோது கண்டள விடுவது தமையிக
ழிமையோர்—மாத ரிங்கிவண் மகிழ்நரோ
டுறைகுவ மெனிமேனோர்—பேதை கொங்கை
கள் பெறுகுவ மெனமறு குவரால் .... *

இ-ள். எப்பொருட்கும் ஆதியாகிய திரிபுரசுந்தரியை நோக்கித் தம்மைத் தாங்களே இகழும் இமையோர் குலத்தில் பிறந்த மாதரானவர்-இவ்விடத்திலே இருக்கின்ற இவளுடைய கணவரோடு சாயுச்சியத்தைத் தவத்தினால் அடைய யாம் பெறுவோமாயின் ஒப்பற்ற இம்மடமையுடையாள் கொங்கைகளை அணையப் பெறுகுவம் அவ்வாறன்றியிலே அணைதற்குக் கிட்டா என்று மனம் மறுகுவர். ஆகலால் அவளுடைய திருமேனி நான்முகன் நாராயணன் இந்திரன் முதலாய புலவோர் யாது கண்டு அளவிடுவது. அதன் பெருமையை அளவிடமாட்டார்கள். எ-று. ※ இதனால் உணர்விற்கேயன்றிக் கண்ணிற்கும் இன்பந் தருபவள் என்பது பெற்றும்.—அழகினால் மிக்க தெய்வமகளிரும் இவ்வாறு எண்ணிய சாமுத்திரிகா லக்கணங்களினாலும் நுண்ணிய அழகினாலும் ஒளியினாலும் உருவம் அதிசயத்

ஷைதத் தருகின்றமையால்-எது கண்டளவிடு வது என்றும், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்பன மகளிருடைய நற்குணங்கள் ஆதலால்-பேதை என்றும், கூறினர்.—தெய்வமகளிராவார்-இந்திராணி, அரம்பை, உருவசி, திலோத்தமை, மேனகை, இவர்கள் முதலாயினார்.—இதனுள் பெண்வடிவிற்குப் பெண்வடிவையுடையார் ஆசைப்படுதலால், குணவதிசயம் என்னும் அலங்காரம் காண்க. [இது தேவியுடைய திருவழகை வியந்து கூறியது.] (ர௭)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அறக்கிழவன் மனிதன்விர கில்லாக் கொச்சை யழகிருந்த வூரிலிருந் தறியா னேனு—முறக்கருணை கொழிக்குமுன தமுத வாரி யூடனுகி னவனையர மகளி ரெல்லா-நறைக்குழலுஞ் சரிந்திடவுந் தரீயஞ் சோர நாணழிய வளைசிதற வுடுத்த வாடை—புறத்துவிழ மயலொடும்பின் றொடர்வ ரொல்ஙாற் பொற்கொடிநின் புதுமையெவர் புகழ வல்லார் ... ... ※

இ-ள். ஒருவன் நெடுங்காலம் மூப்பையுடைய கிழவன். தெய்வருமல்லன். மனிதன், அறிவுமன்றிக் காமவிரகில்லாத கொச்சைய

ன். அதுவுமன்றி அழகிருந்த ஊரிலிருந்தறி யாதவனுயினும், மிகக் கருணைகொழிக்கும் உனது அமுதவாரியினிடத்து அடைந்தால் அவனைத் தெய்வமாதரெல்லாம் கற்பகமலர் நாற்றத்தையுடையகுழலும் சரிந்திட முலை மேல்தாங்கப்பட்ட உத்தரீயம் சோர நாண ம் அழியக் கையினில் அணிந்த வளைகள் கழ ன்று பலவிடத்தும் விழ உடுத்த ஆடை இ டையைவிட்டுப் புறமே அகல மயலோடும் பின்னே தொடர்வரென்று ஆகமங்கள் சொ ல்லுமென்றால், பொன்னுலாகிய கொடிபோ ன்றவளே-நீ செய்கின்ற அதிசயமான காரிய ங்களை உலகத்தில் யாவர் புகழ வல்லார்-ஒரு வரும் புகழமாட்டார்.எ-று.※இதனால் உன் கருணைக்குரியராவாரோ எழிலுடையார் எ ன்பது பெற்றும்.— தெய்வ மகளிர் மய லோடும் பின்றொடர்வர் எனவே, மானிட மகளிர் படுங்காதலைச் சொல்ல முடியா து என்பதாயிற்று.— அவனுக்கு மிகுந்த இழிவினைப் பொருத்த வேண்டிக் கொச் சை என்னும் மொழிபடக் கூறினர்.— உம் மைகள் இரண்டும்-இழிவு சிறப்பு— இதனு ள் உறுப்புக்குறைவிசேடம் என்னும் அலங் காரம் காண்க [இது தேவியுடைய கருணை

வையியந்து கூறியது.] (மரு)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பணைபார் புனற்கனலி வளிவான் மனத்
திலறு பதினெலொழித்ததுமு னடைவிலே-
யிணைநா லொழித்ததிரு கதிரோற வுற்றது
மூ விணைபோய தெட்டினொடு கதிர்களு—
லணையா றிணைத்ததுறு கதிர்நா லடுத்தத
னளவா யிலக்கமறு வகையினு—லுணரா
வுணைத்தகதிர் களின்மே லிருக்குமெனது
மையாத செக்கர்விரி கமலமே ....*

இ-ள். பணைத்த பாரும் புனலும் நெரு ப்பும் காற்றும் ஆகாயமும் மனமும் என் று சொல்லப்பட்ட இவ்வாறுதாரத்தினிட த்து முறையே அறுபதென்னு மெண்ணை வைத்து அவ்வெண்ணிலே நான்கு ஒழிக் கப்பட்டதாகிய ஐம்பத்தாறு கிரணமும் முன்வைத்தொழித்தபடியே அறுபதென்னு மெண்ணில் எட்டு ஒழிக்கப் பட்டதாகிய ஐம்பத்திரண்டு கிரணமும் அறுபதென்னு மெண்ணில் இரண்டு கூட்டப்பட்டதாகிய அ றுபத்திரண்டுகிரணமும் அறுபதென்னு மெ ண்ணில் ஆறு ஒழிக்கப்பட்டதாகிய ஐம்பத்

திறுது கிரணமும் அறுபதென்றுமெண்ணில் பன்னிரண்டு கூட்டப்பட்டதாகிய எழுபத்திரண்டு கிரணமும் அறுபதென்றுமெண்ணில் ஒளிமிகுந்த கிரணம் நான்கு கூட்டப்பட்டதாகிய அறுபத்துநாலுகிரணமும் அதனதனளவாக இங்ஙனஞ் சொல்லிய அறுவகையிறுல் உணர்ந் துரைத்த கிரணங்களின்மேலாயிருக்கும் என்னுடைய உமையினது பாதமாகிய சிவப்பையுடைய விரிந்த கமலம். எ-று. ❋இதனுல் இப்படி யிருக்கின்ற பாதாரவிந்தத்தையே தரிசிக்கவேண்டும் என்பது பெற்றும்.—எட்டிறெடு கதிர்களை லணைடா நிரைத்தது என்பது எட்டுக்கதிர்களோடு நான்குகதிரை அணைத்து நிரைத்ததெனக் கொள்ளப்படும்.—இதனிற்போந்தபொருள் மூலாதாரத்தில் ஐம்பத்தாறும் மணிபூரகத்தில் ஐம்பத்திரண்டும் சுவாதிட்டானத்தில் அறுபத்திரண்டும் அநாகதத்தில் ஐம்பத்துநான்கும் விசுத்தியில் எழுபத்திரண்டும் ஆக்கினையில் அறுபத்துநான்குமாகிய முந்நூற்றறுபது கிரணங்களின்மேலே உமையுடையபாதம் இருக்கும்என்பதாம்.—மூலாதாரமும் சுவாதிட்டானமும்-அக்கினி கண்டம்என்றும், உருத்திரகிரந்திஎன்றும்,ஆ

ம். மணிபூரகமும் அநாகதமும் - சூரியகண்டம் என்றும், விட்டுணுகிரந்தி என்றும், ஆம் — விசுத்தியும் ஆக்கினையும் சந்திரகண்டம் என்றும், பிரமகிரந்தி என்றும், ஆம். — சுவாதிட்டானத்தில் அக்கினி இருப்பதனால் உருத்திர கிரந்தி என்றும், அநாகதத்தில் சூரியன் இருப்பதனால் விட்டுணுகிரந்தி என்றும், ஆக்கினையில் சந்திரன் இருப்பதனால் பிரமகிரந்தி என்றும், சொல்லப்பட்டன. — கிரந்தியாவன சுழுமுனைநாடியின் மூன்றுகட்டிருக்கும். அவை. — குண்டலிசத்தி இக்கட்டைக் கடக்குந்தோறும் ஒவ்வோரவத்தையாக மூன்றவத்தையுண்டாம். இவ்வகையுடைய ஆறு தாரத்தினுள் சுவாதிட்டானத்திலே இருக்கிற அக்கினியின் சுவாலைகள் நூற்றெட்டினுள் கீழ்முகமாக மூலாதாரத்திலே ஐம்பத்தாறும் மேன்முகமாக மணிபூரகத்திலே ஐம்பத்திரண்டும் சென்றிருக்கும். அநாகதத்திலே இருக்கிற சூரியகிரணங்கள் நூற்றுப்பதினாறினுள் கீழ்முகமாக மணிபூரகத்தைக் கடந்து சுவாதிட்டானத்திலே அறுபத்திரண்டு சென்றிருக்க இதயத்தானமாகிய அவ்வநாகதத்திலே ஒழிந்த ஐம்பத்துநான்கும் இருக்கும். ஆக்கினையிலே இருக்கிற சந்திர

கலைகள் நூற்றுமுப்பத்தாறினுள் கீழ்முக மாக விசுத்தியிலே எழுபத்திரண்டு சென்றி ருக்க அவ்வாக்கினையிலே ஒழிந்த அறுபத் துநான்கும் இருக்கும். இம்முச்சுடரின் கிர ணங்களை ஆறுதாரமும் அடைந்திருப்பதினா ல் அதனதன் கிரணமெனவாயின. ஒருபொ ருளின்குணம் ஒருபொருளினுடையதாமோ வெனில், சூரியனுடைய காந்தி மேகத்தினி டத்தில் பத்திபாய அதனை மேகத்தினிறமெ ன்றும் இந்திரவில்லி னிறமென்றுஞ் சொல் லப்படுதலால், ஆமென்க. — இக்கிரணங்க ளெல்லாவற்றையுங் கடந்து மேற்பட்டிருக் கிறபடியினாலே, கதிர்களின்மேலிருக்குமெ ன துமை பாதம் என்றார். —என்னை அடி மைக்கொள்ளும் பாதம் என்பதுபெற, என துஎன்பதுடன் உமையைக் கூட்டாமல் பா தத்தைக் கூட்டுக—அளவாய்என்னும் வினை யெச்சம்-அளவாக எனவாம். — இதனுள் நிரனிறை என்னும் அலங்காரம் காண்க. [இது சடாதாரத்தின் கிரணங்கள்மேல் தே வி பாதாரவிந்தம் இருக்கும் எனக் கூறி யது.] (மச)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உனதுசரற் காலமதி யனைய மெய்யுமு

டல் குழைத்த பிறைச்சடையுங் கரங்க ணான்
கு—மனவரத முறுமபய வரத ஞான வருட்
பளிங்கு வடமொடுபுத் தகமு மாக—நினை
கிலர்முன் வழுத்திலர்பின் வணங்கா ரொங்கு
னிறைத்தபசுந் தேனுமடு பாலுந் தூய—
கனியுமென மதுரம்விளைந் தொழுகு பா
டற் கவிதைமொழி வதுகயிலைக் கடவுள்
வாழ்வே........................*

இ-ள். கைலையிலே இருக்கின்ற கடவுளு
டைய செல்வமாயிருக்கின்றவளே-சரற்கால
த்திலே விளங்குகின்ற மதிபோன்ற உன்னு
டைய மெய்யும் உடலையுள்வளைத்த பிறையை
அணிந்த சடையும் கரங்கள் நான்கினும் நா
டோறும்உற்ற அபயமும் வரதமும் ஞானவ
ருளைத் தருகின்ற படிகமாலையும் புத்தகமும்
முன்னிற்பதாக முன் மனத்தினால் நினையார்
பின் வாக்கினால் வழுத்தார் அதன்பின் மெய்
யினால் வணங்கார் இப்படிப்படிப்பட்டவர்
நிறைத்த பசுந்தேனும் குறுகக்காய்ந்த பா
லும் தூயவாழைப்பழமும் கலந்தால் ஒத்த
மதுரம் விளைந்து ஒழுகும் பாடலாகிய கவி
தையை நாவினால் மொழிவது எவ்வாறு.மொ
ழியமாட்டார். எ-று. ※ இவ்வாறு செய்வா

ராயின் இப்படிப்பட்ட கவிதையை உலகமெ ந்தும் பொழியர் என்பதாயிற்று.—கனியை முந்திரிகைப் பழமெனினும், பொருந்தும். நாலுகையினும் அபயமும் வரதமும் படிக மாலையும் புத்தகமும் ஆகத் தியானிப்பது மேல்வரும் இரண்டுகவிக்கும் ஒக்கும்—இத ற்கு வாக்குச்சித்திதந்திரம்என்று பெயர் சொ ல்லப்படும். [இது மதுரகவி பாட வேண் ணேர் தியானிக்கும் இயல்பு கூறியது.] (டுரு)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வாரின்ப முலைபடலை டடந்தைகவி நாவ ளர் மனக்கமல வனமலரநீ—டேரின்ப வி ரமெயி றறைக்கும்ப்ர பைச்செய்ய செவ் விதிற முணருமுரவோர்— தாரின்ப நற வொழுகு சுருளோதி யிருள்விரவு தகளநிற வாணி கலைதேர்—பேரின்ப மதுரவலை யெ றியமுத கவிதைகொடு பேருலகை மகிழ்வி ப்டோ .... *

இ-ள். கவிகளை நாவினற் சொல்லவல்லா ருடையமனமாகிய கமலவனம் அலரும்படி நீண்ட தேரிலே மகிழ்ச்சியை அடைந்திருக் கின்ற இளஞாயிற்றினுடைய வெயில்போ ல விரிக்குங் காந்தியை யுடைய கச்சினுட்

இன்பத்தைப் பெற்றிருக்கின்ற மூலையாகிய மலையைச் சுமந்த மடந்தையின் அழகுதருகின்ற சிவந்த நிறத்தை உணரும் அறிவுடையோர் மாலையிலேநின்று மதுரத்தை உடைய தேன் ஒழுகுகின்ற சுருண்ட குழலாகிய இருள் கலந்திருக்கின்ற வெண்மை நிறத்தையுடைய நாமகள் கூறிய கலையிலே தேர்ந்தறிகின்ற பேரின்பச்சுவையாகிய திரை எறியும் அமுத கவிதையாகிய வெள்ளத்தைக்கொண்டு பெரிய உலகத்தில் உள்ளாரை மகிழ்விப்பர் எ-று. ❋ கமலவனம் அலரும்படி விரிக்குங் காந்தியையுடைய மடந்தையினது சிவந்த நிறத்தை உணரும் அறிவுடையோர் எனக் கூட்டுக.—ஒதுயிருள்விரவு என்பதற்குக் குழலிடத்து இருள்கலந்த என்று பொருளுரைப்பினும், பொருந்தும்.—நீடேரின்பவிளவெயில் எனவே - இளஞாயிறும், பேரின்ப மதுரவலையென்று ஏகதேசவுருவகஞ்செய்தமையால் - வெள்ளமும், வருவிக்கப்பட்டன.— இப்படி அருண நிறத்தை யுடையவளாகத் தியானிக்குமளவில் பாசம் அங்குசம் கருப்புவில் பூங்கணை வரதம் அபயம் புத்தகம் படிகமாலை இவைகளினாலே விளங்குகின்ற எட்டுக்கைக

ளுடனே தியானிக்கவேண்டும் என்று உரைக்கும் நூலும் உள.—கவிநாவலர்-வியாசர் முதலானோர். அவர்கள் பலர் ஆதலால், கமலவனம் என்றார்.—இதற்குக் காமராசகூடதந்திரம் என்று பெயர் சொல்லப்படும். [இது இன்பச்சுவை பெறுங் கவிதை பாட வேண்டினோர் தியானிக்கும் இயல்பு கூறியது.] (யசு)

இந்துசிலை யைப்பிளந் துண்ணிறம் வகுத்தனைய வெழில்வசனி யாதி மடவா—ரந்தவிணை நால்வர்புடை சூழமலை மங்கைதன தருணவடி வுணர வறிவோர்—கொந்தவிழ விரிதவள மலர்மங்கை முககமல கோலபரி மளக விதையாற்—செந்தமிழின் வடகலையின் முதுமொழிக் காவியத் தெளிபாடல் செய்யு மவரோ ... . *

இ-ள். சந்திரகாந்தத்தை உடைத்து உண்ணிறத்தை எடுத்து வகுத்தாற் போன்ற அழகு பொருந்திய வடிவையுடைய வசனியாதியாகிய மடவார் எண்மரும் பக்கத்திலே சூழ்ந்திருக்க மலையரையன் பெற்ற மங்கையினது அருணவுருவினை உணர அறிவோர் மனம் உள்ளிருந்து புறப்பட அலர்கின்ற வெண்மையையுடைய தாமரைம

லரிலே இருக்கின்ற வாக்கின்செல்வியுடைய முகமாகிய கமலத்திலே இருக்கும் அழகும் பரிமளமும் உடைய கவிதையினாலே செந்தமிழினும் வடகலையினும் முதுமொழியைப் பொருந்திய காவியமாகிய தெளிந்த பாடலைச் செய்யுமவர். எ-று. ☼ உணரவறிவோர் செய்யுமவர் எனக் கூட்டுக.—வசனி முதல் எண்மரும் தேவியைப்போல நாலுகையினும் அபயமும் வரதமும் படிகமாலையும் புத்தகமும் உடையவர்களாகத் தியானிக்க வேண்டியவதனால், உணரவறிவோர் என்றார்.—தேவியையும் வசனி முதல் எண்மரையும் பாசம் அங்குசம் கருப்புவில் பூங்கணை வரதம் அபயம் புத்தகம் படிகமாலை இவைகளினாலே விளங்குகின்ற எட்டுக்கைகளுடனே தியானிக்கவேண்டும் என்று உரைக்கும் நூலும் உள.—எண்மராவார்-வசனி, காமேஸ்வரி, மோகினி, விமலை, அருணை, சயினி, சர்வேஸ்வரி, கௌளினி, என இவர்கள்.—இவர்கள் வடிவமாய் இருக்கின்ற எழுத்தாவன - ஐம்பத்தோரெழுத்தில் கூட்டெழுத்தாகிய கடைஎழுத்தொன்றுந் தள்ளி முறையே பதினாறு ஐந்து நான்கு ஐந்து இவை.—இவ்வ

கையை யுடைய எண்மரையும் முக்கோண த்தைச் சூழ்ந்த எண்கோணங்களினும் சூழ ப்பட்டிருக்கின்றவர்களாகத் தியானிக்க.— இதற்குச் சத்திகூட தந்திரம் என்று பெ யர் சொல்லப்படும். [இது காவியஞ் செ ய்யவேண்டினோர் தியானிக்கும் இயல்பு கூ றியது] (யஎ)

உனதுநிற மெனு மிளைய கதிரரவி வெ யின் முழுகு மூலகடைய வெனநினைகு வோர்—விளைகொழுமு கொலைமறலி யனை யவிழி யுருவசிமுன் விரவுமர மகளிர் வி ழைவோ—ரனவரத மெனதமுது பொழி கவியு முனதருளு மெனதுடலு முயிரு முயிர்சூழ்—மனமுமதி லுணர்வும்வரு க ளியுமென நினைவுருக மலையரைய னுதவு மயிலே.............................*

இ-ள். மலையரசன் பெற்ற மயில்போ ன்றவளே! நாடோறும் அமுது பொழிகின் ற எனது கவியும் கவியின் பொருளாகிய உனது அருளும் எனது உடலும் உடலுட் பொருந்திய உயிரும் உயிரினுல் சூழப்பட் ட மனமும் மனத்துடன்கூடிய அறிவும் அ வ்வறிவுடன் கலந்த மகிழ்ச்சியும் ஆகிய இ வை ஒன்றினுடன் ஒன்று எப்படிக் கலந்தி

றுக்கின்றன அப்படியென நினைவு பரவசப்பட்டு உருகும்படி உனது நிறமென்று சொல்லப்பட்ட கதிரை உடைய இளைய இரவியினது வெயிலிலே மூழ்கும் முழுகுமென நினைவோர் - கொலைத்தொழிலோடு கூடிய மறலியனைய விழியையுடைய உருவசி முதலாகப் பொருந்துகின்ற தெய்வமகளிரால் விரும்பப்படுவர். எ-று. ❋ நினைவு பரவசப் பட்டு உருகும்படி நினைவோர் எனக் கூட்டுக.—தெய்வமகளிரால் விரும்பப் படுவர் எனவே மானிடமகளிரும் நாகமகளிரும் விரும்புதலைச் சொல்ல முடியாது என்பதாயிற்று.—முழுகுதல் உள்ளும் புறமும் அக்காந்தியினால் நிரம்பப் பட்டிருத்தல்.—இதற்குச் சமரிடதந்திரம் என்று பெயர் சொல்லப்படும். [இது மகளிர் வசியம் வேண்டினோர் தியானிகரும் இயல்பு கூறியது.] (௰அ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆதி விந்துவை முகமென விணைமுலை
யீழிரண்டதன் வடிவென வருகுதாழ்—
கோத றுஞ்சுட ரொழவழ கொழுகுத்திரி கோ
ணமொன்றென் வுனதெழி லிரதிதோய்—
காத லன்கலை தமதிட நினைபவர் காணும

ங்கையர் கலைகொள லரியதோ—வோதி வி
ந்கிரு சுடர்முலை யனையவு லோக மங்கை
யை மயல்செய்வர் கமலையே..... ....*

இ-ள். ஆயிரம் இதழைப் பொருந்திய கமலத்தை உடையவளே. ஓர் பெண்ணினுடைய முகத்தை எப்பொருட்கும் ஆதியாய் இருக்கின்ற விந்து எனவும், அதன்கீழே இரண்டு முலையும் அவ்விந்துவின் வடிவு இரண்டு எனவும், அவற்றின் அருகு தாழ்ந்த குற்றம் நீங்குஞ் சுடர் மேலெழ அழகு ஒழுகும் முக்கோணம் ஒன்று இருப்பது எனவும், இரதியைக் கூடுகின்ற காதலனாகிய நீ கொடுத்த எழிலை உடைய மன்மதன் கலையோடு தம்மிடத்திலே நினைபவர் தாம் காணும் மங்கையர் உடுத்த கலையைக் கொள்ளுதல் அரியதோ. தெளிந்து சொல்லின், இவ்விடத்தில் இருந்து இருசுடரும் முலைபோலப் பொருந்தப்பெற்ற உலகமாகிய மங்கையை மோகஞ் செய்வர். எ-று. ※

இவ்விடத்தில் இருந்து உலகமாகிய மங்கையை மோகஞ் செய்வர் எனவே, மூவுலகினுள்ள மங்கையரையும் மோகஞ் செய்வர் என்பதாயிற்று.—அல்குலைத் திரிகோணமாக நினைய வேண்டி அருகுதாழ்கோதறுஞ்சுட

ரொழவழகொழுகுதிரிகோணமொன்றென
என்றார்.— நீ கொடுத்த எழிலையுடைய ம
ன்மதன் என்பது முன் கூறிய மாயன்
வணங்கி என்னுங் கவியுட் காண்க.—மன்
மதகலையாவது-காம வடிவாய் இருக்கின்ற
எழுத்து. அது கிலீங்காரம். அதனை முக்
கோணத்தின் நடுவே அருண வடிவாகத் தி
யானிக்க வேண்டும். அன்றியும் அதனை மூ
வகையிடத்தும் அருணவடிவாகத் தியானி
க்க வேண்டும் என்று உரைக்கும் நூலும்
உள.— இதற்கு மன்மதகலாபப்பிரயோ
கம் என்று பெயர் சொல்லப்படும். [இது
மகளிரை மோகிப்பிக்கவேண்டினோர் தியா
னிக்கும் இயல்பு கூறியது.] (௰௯)

ஆட லம்பிகை யிமகர சிலைவடி வாளு
நெஞ்சினுள் வழிவுறு கிரணமே— லோடி
யெங்கணு முடல்பெரு கமிழ்தென வூடெ
மூம்ப்ரபை தமதிட முணர்கு வோர்— நா
ட வுங்கொடு விடமொரு கலுழனை நாடும்
வெங்கொலை யரவென புறியுமேன்—மூட
ருஞ்சுரம் விழிபொழி யமுகினின் மூழ்க
வென்பொடு மழலுடல் குளிருமே .... *

இ-ள். ஆனந்த நிருத்தத்தை உடைய அ
ம்பிகையினது சந்திரகாந்தம் போலும் வ

டிவையும் அவ்வடிவினின்றும் வழிவுறுகின்ற கிரண வழியே ஓடி உடலினின்றும் எவ்விடமும் பெருகும் அமுதமென உள்ளிருந்து இயங்கும் ஒளியையும் வேறொன்றிடத்து நினையாமல் தயமிடமாகத் தாம் ஆளும் நெஞ்சினுள்ளே நினைவோர் நோக்கவும, ஒருவனை மயக்கும் கொடிய விடமானது ஒப்பற்ற கருடனைக் கண்ட வெய்ய கொலைத் தொழிலையுடைய பாம்புபோல மறிந்துபோம். அதுவுமன்றி ஒருவன்மேலே மூடிக்கொண்டிருக்கின்ற அரிய சுரமானது அவருடைய பார்வையிற் பொழியும் அமுத தாரையினால் நனைக்கப்பட, அச்சுரத்தால் எலும்பொடு பற்றியழலும் உடல்-குளிர்ச்சியை அடையும். எ-று. ✡ பிறர் அடைந்த விடமுஞ் சுரமும் போக்குவார் எனவே அவையிரண்டுந் தம்மை வந்தடையா என்பதாயிற்று. — நியாளிக்குமிடத்து வேறுபடாமல் தம்வயத்ததாய் இருத்தலால் - ஆளுநெஞ்சு என்றும், சந்திரகிரணங்களைப்போல இங்ஙனஞ் சொல்லப்பட்ட கிரணங்கள் அமுதமயமாய் இருப்பதினால் - உடல்பெருகமிழ்தெனவுடெமும்ப்ரபை என்றும், கூறினர்.—அருஞ்சுரம்-

விடுதற்கு அரிய சுரம்.—உம்மைகள் இரண்டும்-சிறப்பு. ஒரும்மையைத் தசையழுதலன்றி என்பொடும் அழலும் உடல் எனப் பொருள்தரும் எச்சமாக்கினும், அமையும்.—இதற்குக் காருடப் பிரயோகம் என்று பெயர்சொல்லப்படும். [இது விடமும் சுரமும் தீர்க்கவேண்டினோர் தியானிக்கும் இயல்புகூறியது.] (உ௰)

ஆன மின்கொடி போலுமென் முண்டகமாறின்மண்டலமூவகையின்கணோர், பானுவம்புலிதீயினிறங்கிளர் பான்மைகொண்டிதழாயிரகஞ்சநீள், கானிலுன்களிஞானமுறுங்கலை காழ்மலங்களின் மூவகை பொன்றியே, போன சிந்தையின் மாயை பொழிந்தவர் போதமின்புறுமாதியொடந்தமே. ௲

இ-ள். வேதத்திறுடைய ஆதியும் அந்தமுமாக இருக்கின்றவளே. மெல்லியகமலங்கள் ஆறினையும் உடைய மூவகைமண்டலத்தினிடத்தும் இருக்கின்ற சூரியன் சந்திரன் அக்கினியாகிய முச்சுடரினுடைய ஒப்பற்ற நிறம் கிளைக்கின்ற அழகிதாகிய மின்கொடி போலும் பான்மைகொண்டு அவற்றின் மேலாக இருக்கும் ஆயிரமிதழை உடைய கமலமாகிய வனத்திற் சதாசிவனோடுகூடி மகிழ்ச்

சி உற்றிருக்கின்ற உன்னுடைய ஞானகலை யை வைசம்பற்றி இருக்கும் மூவகைமலங்க ளோடு கெட்டுப்போனசிந்தையினாலே மன மாயையை நீங்கினவருடைய அறிவு பேரின் பத்தை அடையும். எ-று. ☼ இதனால் அவ ரே அறிவுடையோர் என்பது பெற்றாம்.-மூ வகைமலம் கெடவே, அவற்றால் அடங்கிய சிந்தையும் கெட்டுப்போம். அதனாலே மன மாயைநீங்கினவர் என விசேடித்துக்கூறப்ப ட்டார்.—மின்கொடி-மெய் நடக்கத்துக்கு உவமை.—ஆறாதாரச்சக்கரமும் முண்டக வடிவாக இருத்தலால், முண்டகம் என ஆயி ன.—ஆறாதாரங்களில் இருக்கின்ற முறை யே தீபானு அம்புலிஎன்றுகூறாமல், முறை பிறழக்கூறியது செய்யுளோசைபற்றிஎன்க. அனேகம் இதழாதலால்-கான்எனவும், ஆறு கமலத்துக்கும் மேலாக இருத்தலால்-நீள்கா ன், எனவும், சொல்லப்பட்டது —ஓர் இந்திர வில்லும் பலநிறமுடையதுபோலக் குண்ட லிசத்தியும் பலநிறம் உடையவளாய் இருப் பள். அதனால் முச்சுடர்க்குங் காந்தி உண் டாயிற்று. அப்படி இருக்கக் கண்ணாற்காண ப்படுஞ்சுடராகலால், காரியத்தைக் காரண மாகக்கூறினார்.—கலை-சொரூபம். [இது ச

மாதியும் திட்டையும் உடையோர் தரிசிக்கும் இயல்புகூறியது.] (உக)

பேருறுங்கயிலாசன் மகன்பெறு பேரனன்புறு பேரனெனுஞ் சொலர்ல், வாரமன்பொடுபார்வைவழங்கெனவாய்திறந்திடவோடிவழங்கினுய், வேரிமூண்டகன்மான்மகுடங்களின் வீசரும்பரவை தீபமுவந்ததாள், சேருநன்பெருவாழ்வும்வழங்குவை தேடருஞ்சிவமாயமதங்கியே. *

இ-ள். தேடுதற்கு அரிய சிவனுடைய மாயமதங்கியே. கைலாசத்தில் வீற்றிருக்கின்ற உன்னுடைய கணவரது பெயரைப்பெறுங் கைலாசனென்னும் ஒருவனுடையமகன்பெற்ற பேரனவன் அன்புறுகின்றபேரன் இவன் என்று என்னை யாவருஞ்சொல்லுஞ் சொல்லினுல், நமக்கும் அடியான் என்னும்வாரம்பற்றிய அன்புகொண்டு உன்னுடையகடைக்கண்பார்வையை வழங்குஎன்று யான்சொல்லும்படிக்குக்கருதி வாய்திறந்திடுமளவில் அதுகண்டு ஓடிவந்து அதனை வழங்கினுய். அஃதன்றி அச்சொல்முழுதுஞ் சொன்னுல் தேன்பொருந்தியிருக்கும் தாமரையை உடைய நான்முகனும் நாராயணனும் வணங்குகின்ற மகுடங்களிலேநின்று வீசப்பட்ட

அரியகாந்திகளாகிய நீபாலத்தியை உவந்த உன்னுடைய தாளிலேசேர்கின்ற சாயுச்சியமாகிய நல்ல பெருவாழ்வையும் கொடுப்பாய். எ-று. ※ தாள்சேருநன் பெருவாழ்வும் வழங்குவை எனவே, அருத்தாபத்தியால் சொன்முழுதுஞ் சொன்னால் என்பதுபெறப்பட்டது.—தம்முடைய பாட்டனுடைய பாட்டன் கைலாசன் என்பதுபற்றிப் பரம்பரம் அடியார்க்கும்அடியான்என்பதுபொருந்த இவ்வாறுகூறினர்.—பேரன்-பேரை உடையவன். அது ஒருவன் தன்னுடைய மகனை வேறுபேரிட்டு அழைப்பினும் தன்றந்தை பேர் இடுதற்கு உரியன் எனவாம்.—ஓடிவழங்குதல்-தன்மேல் பனுவல்செய்தற்கு வாக்குக்கொடுத்தல் முதலாயின.—உம்மை-எச்சம். சிறப்புஎனினும், பொருந்தும். மதங்கி - மாதங்கனுடையமகள். சங்கீதவித்தைவல்லவள் எனினும், ஆம். [இது தேவி விரைந்துவரங்கொடுத்தல்கூறியது] (௨௨)

ஆதிசங்கரர் பாதியுடம்பினி தானுமம்பிகைபாதியும்விஞ்சுமோ, நீதியன்றென நாயகர்பங்கையு நீகவர்ந்தனையாலவமொங்குளார், சோதிசெங்கதிர்மேனிநிறைந்தது தாயகணகருமூவகைகொங்கையோ, வீதிரண்டுடல்

கூறுமிளம்பிறையேர்பொழிந்தது நீண்முடியெங்குமே. *

இ-ள் எப்பொருட்கும் ஆதியாகிய சங்கரருடைய பாதி உடம்பை இனிதாகக்கவர்ந்து ஆளுகின்ற அம்பிகையே. மற்றப்பாதி உடலுங்கவராமல் மிகுந்திருக்குமோ. இது நீதியல்ல என்று சங்கராகிய நாயகருடைய பாதி உடலையும் நீயேகவர்ந்தாய். அதற்குக் காரணம்-சிவந்த கதிரை உடைய சோதி உண்மேனியாகநிறைந்தது. தாய்மையை உடைய கண்களும் மூவகையே. கொங்கையும் இரண்டே. உடல்வளைந்திருக்கின்ற இளம்பிறை - நீண்டமுடியெங்கும் அழகுபொழிந்தது. ஆகலால் அவர் எவ்விடத்து உளராய் இருப்பர். எ-று. ※ இதனால் நின்செயலை யாவராயினுங் கடக்கமாட்டார் என்பதுபெற்றும்.—சங்கரர்க்கு அருணவண்ணமும் மூன்றுகண்களும் முடியில் இளம்பிறையும் உண்டு என்றுசொல்லப்படும். அவற்றைத்தேவி உடையவளாய் இருத்தலின், நாயகர் பங்கையும் நீ கவர்ந்தனை என்றார். அன்றித் தேவிக்கு அருணவண்ணமும் மூன்றுகண்களும் முடியில் இளம்பிறையும் உண்டு என்று சொல்லப்படும். அவற்றைச்சங்கரர்உடை

யவராய் இருத்தலின், தேவியுடைய உடலை நாயகர் கவர்ந்தார்என்று சொல்லின் அமைமை யாதோ என வினவுவாரைநோக்கிக், கொங்கை இரண்டுள என வேண்டிற்று. அதுகொண்டு இவளே கவர்ந்தாள் என்க.—மேனி-சொரூபம்.—ஆலும் ஒவும் அதனை அடுத்த உம்மும் - இடைச்சொல்.—மற்றும் ஒரோகாரம்-எதிர்மறை. [உத்தரகௌளர் சத்தியில் சிவமடங்கிற்று என்று சத்தியைஉபாசிப்பார்கள். அதுபற்றி இஃது அத்தபாகமாய் இராமல் வேறிருக்குந்தேவியைச் சிறப்பித்துக்கூறியது.] (உரு)

ஆதிமுண்டகன் மால்சிவ னண்டர்ம கேசனந்த சதாசிவ னைந்துபேர், மேதகுந்தொழில்போலவனைந்தருள் வீறுமங்கத ஞாறலுமுண்டென, யாதுமின்றியு மேனியொடெங்கணு மாயை தந்தது ஞான மிரக்குமோர், நீதியுந்திரு வேடுருவங்கொடு நீசொலிங்கித வேவல்புரிந்ததே. ✻

இ-ள். அழகை உடையவளே. ஆதியாகிய கமலத்தை உடைய நான்முகன் திருமால் சிவன் தெய்வங்களுக்கெல்லாம் மகேசன் அந்தமாகிய சதாசிவன் என்னும் இப்பெயர் பெற்ற ஐவருடைய மேம்பாட்டுத்தகுதியை

ப்பெருந் தொழில்போல முறையே உலகங் களைவிதித்தருளுகின்ற விறும் விதித்தகா லந்தொடங்கிப் பரம்பரமாக உண்டு என்று சொல்லும்படிக்கு அவ்வுலகங்கள் தழையக் காத்தலும் யாதொருபொருளும் இல்லாமல் அழித்தலும் சீவான்மாவினுடைய சொரூ பத்தையும் பரமான்மாவையும் அறியாதப டிக்கு மயக்கஞ்செய்யும் திரோபாவமும் அறிவினாற் பிரமன் முதல் நால்வர்க்கும் அ னுக்கிரகிக்கும் ஒப்பற்ற நீதியும் உன்னுடை ய புருவங்கொண்டு நீ சொல்லும் இங்கித ஏவலானது செய்தது. எ-று. ❊ இதனுல் செய்யுந் தொழிற்கெல்லாம் நீயே காரணம் என்பதுபெற்றும்.—வாய்ச்சொல்லினுல் நி கழும் ஏவல்போலப் புருவநெறிப்பினுலும் நிகழும் ஏவலாகலால், புருவக்கொடு நீசொ லிங்கிதவேவல் என்றார்.—ஏவல் என்னும் வி னைப்பெயரொழுவாய் புரிந்தது என்னும் வி னைமுற்றுப் பயனிலைகொண்டுமுடிந்தது.— ஆதிமுண்டகன் என்றும் அந்தசதாசிவன் என்றுங் கூறியது தொழில்பற்றி எனக.— இதனுள் - நிரனிறை என்னும் அலங்காரம் காண்க. [இது தேவி புருவத்தினுல் ஏவும் ஏவலைவியந்துகூறியது.] (உச)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மூவருக்குமுதற்பிறப்புநின் முக்குணக்க டலென்றமூன், சேவடிக்கணிருப்பர் சென்னி குவித்தசெங்கைபிரிக்கிலார், பூவெடுத்த வர் சென்னிவைத்திடு போதமுற்றவ ரம்மை நின், காவலர்ப்பொதி தாளில்வைக்கவு மூவ ர்சென்னிகளிக்குமே. *

இ-ள். தாயே. தாங்களாகிய அயன் அரி அரன் என்னும் மூவர்க்கும் முதற்பிறப்பு டைய காரணம் உன்னுடைய முக்குணமா கிய கடல் என்று உனக்கு முன்னுகச் சேய டியின்கீழே முடிமேற்குவித்த சிவந்தகைக ளைப்பிரியாதவர்களாய் இருப்பர். ஆதலால் பூவினை எடுத்துத் தனித்தனி மூவர்முடிமே ல் வைத்து அருச்சனை செய்யும் அறிவுடை யோரானவர் அதனைவிட்டுப் பாரிசாதவன த்தில் உள்ள அலரினுல்பொதியப்பட்ட உன் னுடைய தாளில் பூவினைவைத்து அருச்சனை செய்ய, அம்மூவர் முடியும் இன்பத்தை அ டையும். எ-று. ※ இதனுல் உன்னைப்பூசிப் பதன்றிப் பின்னும் ஓர்தெய்வத்தைப் பூசிக் கவேண்டா என்பது பெற்றும்.—மூவர்செ ன்னிகளிக்கும் எனவே மூவரால் தரப்படும் வரத்தையும் தேவியால்தரப்படும் வரத்தை

யும் தேவியுடைய பாதத்தில் அருச்சிப் போர் பெறுவர் எனல் ஆயிற்று.—பிறப்பு என்பது- பிறக்குங் காரணத்தை உணர்த்தி னமையின், ஆகுபெயர்.— மூக்குணமாவன- இராசதம், தாமதம், சாத்துவிகம், என இவை. இராசதம்-சிவப்பு. அதனால் தோன்றினன்- அயன். தாமதம்-கறுப்பு. அதனால் தோன்றி னன்-அரன். அவன் பிரளயகால ருத்திரன். சாத்துவிகம்-வெளுப்பு. அதனால் தோன்றி னன்-அரி. அவன் வைகுண்டவாசி. இவ்வா றன்றிச் சாத்துவிகத்தில் உண்டானன் அரன் தாமதத்தில் உண்டானன் அரி என்பாரும் உளர்.—தேவி மாணிக்கமயமாய் விளங்கு கின்ற கட்டிலின்மேல் இருக்கும்பொழுது சாம்பூனதமென்னும் பொன்னால் மும்மூ ர்த்திகளும் மூன்றுகாலாகத் தாங்கும்படி செய்த முக்காற்பீடம் எடுத்துவந்து தெய் வமகளிரானவர் பாதந்தாங்கவைப்பர். அத னால் முன்சேவடிக்கணிருப்பர் என்றார்.— இதனுள் உதாத்தம் என்னும் அலங்காரம் தோன்றுகின்றது. [இது தேவியுடையபா தபூசையின் சிறப்பினைக்கூறியது.] (உரு)

வேதரஞ்சகன் மால்புரந்தரன் வேகசன்ன டகுபேரனு, டாதியெண்டிசை பாலர்பொ

ன்றவு மாதியந்தமி லாததோர், நாதர்பொ ன்றில ரோதுன்மங்கல நாணுறுந்திற மாத லா, னிதனைந்தது யோகமம்பிகை நீலியெ ன்பதுபாவமே. *

இ-ள். அம்பிகையே. வேதத்தை இரக்ஷிக்கச்செய்பவனாகிய நான்முகன் திருமால் என்னும் இவர்களும் அல்லாமல் புரந்தரன் கடுப்பை உடைய் இயமன் குபேரனொடு இவர்களாதியாகிய எண்திக்குபாலரும் மகாபிரளயங் கற்பமுதலாகிய காலங்களில் இறந்துபோகவும், தோற்றமும் முடிவும் தமக்கில்லாதனவாக நாதர் இறந்திலர். அதற்குக் காரணம் யாது. உன்னுடைய கழுத்தின்மங்கல நாண் நீங்காமல் உறப்பெறுந்திறனே. ஆதலால் நீ அவர்க்கு வதுவைசெய்யப்படுங் கூட்டமேகூட்டம். அப்படியிருக்க, உன்னை உலகத்தார் நீலி என்று சொல்லுவது பாவமாக இருந்தது. எ-று. ❋ இதனால் உனக்கு ஆட்பட்டவர்க்கும் இடையூறு இல்லையென்பது பெற்றும்.—உன்மங்கலநாணுறுந் திறன் எனவே உனக்கு நாசம் இல்லை என்றவாறாயிற்று.— "வினைமுற்றேவினையெச்சமாகலுங், குறிப்புமுற்றீரெச்சமாகலுமுளவே," என்பதுகொண்டுஇலாதது என்னும் எதிர்ம

றைவினைக்குறிப்புமுற்றை வினையெச்சமாக க்கொள்க — ஆதியந்தமிலாயமலோர் நாதர் என்றுபாடம் ஓதுவாரும் உளர்.—நீலி என்பது-நீலநிறத்தை உடையவளுக்கும் மனத்தின்கண் வைரத்தை உடையவளுக்கும்பெயராதலால், வைரம் உத்தமிக்குப்பொருந்தாது என்பது பற்றி நீலியென்பது பாவமே என்றார்—ஓர்-அசை.—இதனுள் நாதர்பொன்றுதிருத்தற்கு மங்கல நாணுறுந் திறனே காரணமென ஏது எடுத்து உரைத்தமையால், ஏது என்னும் அலங்காரம் காண்க. [இது தேவிஉடையமங்கலநாண்சிறப்புக்கூறியது.

மொழிவதுன்செப முத்திரை பாணியின் முயல்வதெக்குநடப்பனகோயில்சூழ், தொழிலருந்துவ முற்றுமுணுசுதி துயில்வணங்கல் களிப்பணயாவுநீ, யொழிவறுங்களி யென் செயல்யாவையு முனதுநன்சப ரிச்செயலாகவே, யழிவறும்பதம் வைத்தருள்பேரொளி யளிவிளைந்துகளிப்பெழுநாதமே. *

இ-ள். பெரிய ஒளியை உடைய கருணை விளையப்பட்டு உவகைமிகுந்த நாதமாய் இருக்கின்றவளே. யான் வாயினால் சொல்லுஞ் சொல்லெல்லாம் உன்னுடைய மந்திரமாகவும், யான்கையினால்செய்யுந்தொழில்எல்லா

ம்உன்னுடையமுத்திரையாகவும்,யான்எவ்வி டத்தும் நடக்கும் தொழிலெல்லாம் உன்னு டைய கோயில் வலம்வருந் தொழிலாகவும், யான் உண்பனவெல்லாம் உனக்குச்செய்யும் ஆகுதியாகவும், யான் துயிலுந் துயிலெல்லா ம் உன்னைமுடியினால்வணங்கும்வணக்கமாக வும், யான் யாதொன்றினால் மகிழ்வனவெல் லாம் நீ என்னெஞ்சைவிட்டு நீங்காமையினா ல் உண்டாகிய மகிழ்ச்சியாகவும், இங்ஙனஞ் சொல்லப்பட்ட தொழிலன்றிச் செய்யும் என்னுடையதொழில்யாவையும் உன்னுடை ய நல்லபூசைக்கு உரிய செயலாகவும், சேர் ந்த அடியார் இறுதல் ஒழிதற்குக்காரணமா கிய உன்னுடைய பாதங்களை என் தலைமேல் வைத்தருள். எ-று. ❋ உதரமேகுண்டமும் உதராக்கினியே ஓமாக்கினியும் எனக்கருதி, அருந்துவமுற்றமுன்னாகுதி என்றார். — ஏகாரம் - தேற்றம்.—செய்யுளீற்றினன்றி மொழியீற்றினும்வரும் ஆதலால் - ஈற்றசை யெனினும், அமையும்.—முத்திரை-நவமுத் திரை. அவையாவன - சங்க்ஷோபம், திராவண ம்,வசியம்,உன்மாதம்,மகாங்குசம்,கேசரி,பீ சம்,யோனி,திரிகண்டம், என இவை.—இத னுள் ஆர்வந்தோன்றஉரைத்தமையால்,ஆர்வ

மொழி என்னும் அலங்காரம் காண்க. உரு வக வலங்காரமும்பொருந்தியிருந்தது. [இது தேவியைப்பார்த்து என்னை அளித்தல்வேண் டுமெனக்கூறியது.] (உ எ)

கலித்திலைத்துறை.

பிரமனிந்திரன் முற்பிறதேவர்க ளுண்ணெ லா, நரைபெருந்திரை யற்றநல் லாரமுதே கொலா, மொருவர்தங்கிலர் நின்சிவ னுண்வி டம்வாழ்வன்மா, திருபெருங்குழை யிட்ட பொன்ஞேலையின்வாசியே. *

இ-ள். மாதே. பிரமன் இந்திரன் முதலி யவர்களும் இவரல்லாத பிறதேவர்களும் உ ண்ணும் உணவெல்லாம் நரையும் பெரியதி ரையும் போக்குதற்குக்காரணமாகிய நல்ல அரிய அமுதமேயாம். அப்படி இருந்தும் இவர்களுள் ஒருவராயினும் இறவாமல் இரு ந்தவர்கள் இல்லை. உன்னுடைய கணவனாகிய சிவன் உண்ட உணவுவிடமாயிருந்தும், ஒருக் காலும் இறவாமல்வாழ்வன். அதற்குக்கார ணம் உன்னுடைய இரண்டுபெரிய காதிலும் இட்ட பொன்ஞேலையின் நன்மையே.எ-று.
* இதனாலும் உனக்கு ஆட்பட்டவர்க்கும் இடையூறு இல்லை என்பது பெற்றும்.—நா சமில்லைஎன்பது-இதுகொண்டும் அறியப்

பட்டது.—கணவனை இழந்தோர் காதணி வாங்கப்படுவர் அதனால் இவளுடைய காதணிவாங்கப்படுவதன்மையின், அதனைக் காரணமாக்கிச் சிவன் இறவாமல் இருத்தலைக் காரியமாகக்கூறினார்.—ஓலைச்சுருள்போன்றிருத்தலால், பொன்னோலையெனப்பட்டது.—பெருமை இரண்டினுள்-முன்னது-மிகுதி பற்றியும், பின்னது-வளர்ச்சிபற்றியும், வந்தன.-ஆரமுது - கிடைத்தற்கு அரிய அமுது.—ஏகாரங்கள் இரண்டும் - தேற்றம் —கொல்-அசை.—இதனுள் ஏது என்னும் அலங்காரங்காண்க. [இது தேவியுடைய தோட்டின் சிறப்பினைக்கூறியது.] (உஅ)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முதுமறைசொலிளவனிதை யயனொடரி
குலிசனுனைமுறைபணியு நெறியினிடையே,
பதறியுனதருகுவரு மரனையெதிர்கொளவுன
து பரிசனமுனடிவளமையா, விதுபிரமன்
மகுடமரிமகுடமிதுகுலிசன்முடி யிதுகடி
னமிடறுமிருதாள்,கதியமரவமரவழிவிலகிவ
ரவரவெமது கடவுளெனுமொழிதழைகவே.

இ-ள். பழைய மறைகள் புகழ்கின்ற எக்காலமும் இளமையோடுகூடியவனிதையே. அயனும் அரியும் குலிசமென்னும் ஆயுதத்

தையுடைய இந்திரனும் விதிவழுவாமல் உன்னெதிர்பணிந்து கிடக்கும் வழியின் நடுவாககாதலினால் உன் இல்லத்தைநோக்கிவரும் அரனை விரைந்து நீ எதிர்கொள்ள, உன்னுடைய அடியின் வளமையால் இது பிரமனுடைய மகுடம் இது அரியினுடைய மகுடம் இது குலிசனுடைய மகுடம் இம்மகுடங்கள் கடினம் அதனால் இருதாள் இடறும் விரைந்து நடக்குங்கதி அமர்க அமர்க இடறுமல் வழிவிலகி வருகவருக எம்முடைய தெய்வமே என்று உன்னுடைய ஏவல் செய்தற்கு உரிய தெய்வமகளிர் சொல்லும் மொழிகளானவை-வளர்க. எ-று. ❋ இதனால் அம்மொழிகள் என் செவிப்படச், செய்தபாவமெல்லாம் நீங்கும் என்பது பெற்றும்.—"வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" என்பதுகொண்டு அமர அமர வர வர என்னும் வினையெச்சங்களை வியங்கோண்முற்றாகக்கொள்க.—கணவனைக்கண்டால் விரைந்தெழுந்துவருதல் உத்தமிக்கு இயல்பாதலால் - பதறியெதிர்கொள என்றும், சிவப்பும் அழகும் மென்மையும் உடைய அடியாகலால்-உன்னடிவளமையால் என்றும், கூறினர்.-முறைபணிதல்-அட்டாங்கம் பஞ்சாங்கம் எ

ன்னும் விதிப்படி பணிதல்.—இதனுள்உதார்த்தட்டஎன்னும்அலங்காரம் காண்க. [இது எவல்செய்வோர் சொல்லும் மங்கல மொழியை எடுத்துக்கூறியது.] (உகூ)

பசுபதிதனிதிகொண் டறுபத்துநாலுபல கலைஞானமுங்கருணையால், வகுவற நெடும்புவனமாயையின்மயக்கியதன்வழிவருபெரும் பயனெலா, மிசைபெறவிளைத்ததும்பின்னு மூனதேவலாலிணையிலுன தாகமமெலாம், விசைபெறவிளைத்தெயையு மிதுதரவளித்த துவும் வியலையுனதுரிமையலவோ. *

இ-ள். உள்ளும் புறமும் அழுக்கின்மையை உடையவளே. பசுபதியானவன் தன்னுடையபுத்திகொண்டு அறுபத்துநான்காகிய பலகலைஞானத்தையும் வடுவற நெடியபுவனத்தின்கண் தனதுகருணையினால் மாயைகொண்டு விர்வச்செய்து அக்கலையினிடமாக வரும் பெரியபயன்களெல்லாம் புகழ்பெறும்படிசெய்ததும், அதுவுமன்றிப்பின்னும் உன்னுடைய ஏவலினால் அவ்வறுபத்துநான்கு கலையினிடமாக வரும்பயன்கள் எல்லாம் விரைவில்பெறும்படி ஒப்பில்லாதஉனது கலையை உண்டாக்கி அப்பயன்களுமன்றி எவ்வகைப்பட்ட பயனையும் இக்கலைதானே தரக்

கொடுத்ததும், உன்னை அப்பசுபதியானவன் மனைவியாகப்பெற்ற உரிமையினால் அல்லவோ. எ-று. ※ இதனால் உன்னையன்றி ஓர் சித்திபெறுவதில்லை என்பது பெற்றாம். எல்லாமென்பது அறுபத்துநான்குகலையினிடமாகவரும் பயனெல்லாம் என நின்றது.- பசுபதியினுடைய அனுக்கிரகம் மாயைக்குக்காரணம். மாயைகலைகளை விரவச்செய்தற்குக்காரணம். அதனால்-கருணையால் வசிவற நெடும்புவன மாயையின் மயக்கி என்றும், அறுபத்துநான்கு கலையினால்வரும் பயன் இம்மைக்கன்றி மறுமைக்கில்லை-இஃது இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தருதலால்-இணையிலுன்தாகமமெலாமிசைபெற விளைத்தெவையுமிதுதரவளித்ததுவும் என்றும், கூறினார்.—வசிவு - வடு—"வசிந்து வாங்கு நிமிர்தோள்,, என்றார் பிறரும்.—ஓகாரம்-எதிர்மறை. அறுபத்துநான்குகலைகளாவன, மாயாசம்பிரதம், தத்துவசம்பிரதம், யோகினிசாலம், மாலினிவித்தை,மகாசம்மோகனம், மனோபேதம், தந்திரபேதம், குய்யதந்திரம், கலாவாதம், கலாசாரம், குண்டிகாமதம், அஞ்சனவித்தை,பாதுகை, பானபாத்திரம், பரகாயப்பிரவேசம், இரச

வாதம், இவைமுதலாயின. இவற்றுள் - மாயாசம்பிரதம் - ஓரிடத்திலூர்போல வனம்போல மலைபோல நதிபோலத் தோற்றுவித்தல். தத்துவசம்பிரதம் - ஒருபூதத்தில் ஒருபூதம் தோற்றுவித்தல் இதனை மகேந்திரசாலமென்றுஞ் சொல்வர். யோகினிசாலம்-மயானத்தில் உபாசித்து யோகினிகளைக் காண்பிப்பது. மாலினிவித்தை- சமுத்திரங் கடக்கச்செய்வது. மகாசம்மோகனம் - விழித்திருக்கின்றவர்களை மெய்மறந்து நித்திரைகொள்ளச்செய்வது. மனோபேதம்-மனத்தைப்பேதிக்கச்செய்வது. தந்திரபேதம்-ஓரிடத்தும்வெளிப்படாத மந்திரத்தை வெளிப்படச்செய்வது. குய்யதந்திரம்- வெளிப்பட்டதை மறைப்பிப்பது. கலாவாதம்-மன்மதவித்தை. கலாசாரம்-வருணத்தை அதிகப்படுத்துவது. குண்டிகாமதம்- குளிகையினாலே இளமை அடைவது. அஞ்சனவித்தை - மறைபட்டபொருளைக்காண்பிப்பது. பாதுகை-செருப்பைத்தொட்டு நினைக்கில் நினைத்த இடத்தில் விடுவது. பானபாத்திரம்-ஒருகரகத்தில் நினைத்தபானமெல்லாம் தருவது. பரகாயப்பிரவேசம் - பிராணனில்லாத உடம்பிலே புகுவது. இரசவாதம் - உ

லோகத்தைப் பேதிக்கச்செய்வது. இவ்வாறே அறுபத்துநான்குகலைகளையும் அறிக.— ஆகமமாவது-ஸ்ரீவித்தை. அதுமந்திரமும் சக்கரமும் என இருவகைப்படும். மந்திரம் இனிமேல்வருங் கவியுட்காண்க. சக்கரம் முன் சிவகோணமென்னுங் கவியுட்கூறினோம். அஃது அர்ச்சனைசெய்யும் முறைமையாவன- மேருப்பிரத்தாரம், கைலாசப்பிரத்தாரம், பூப்பிரத்தாரம், என மூவகையாம். சோடசநித்ததேவதைகள்தாமே சக்கரத்தினுடைய அங்கமாக வியாபித்திருப்பது மேருப்பிரத்தாரமென்று வசிட்டசங்கிதையிலே தேவியைநோக்கிச் சிவனாலே சொல்லப்பட்டிருக்கின்றது. சோடசநித்ததேவதைகள் அக்கர உருவமாக இருப்பதனால் அவ்வக்கரங்கள்தாமே சக்கரத்தினுடைய அங்கமாக வியாபித்திருப்பது கைலாசப்பிரத்தாரமென்று சனந்த சங்கிதையிலே இருடிகளைநோக்கிச் சனந்தராலே சொல்லப்பட்டிருக்கின்றது. வசினிமுதல் எண்மரும் நித்ததேவதைகள் பதினறுவரும் யோகினிகள் பன்னிருவரும் ஆகருஷிணிகள் நால்வரும்பாசமும்அங்குசமுமென்று சொல்லப்படும் தேவதைகள் சக்கரத்தினுடைய அங்கமாக வியாபித்திருப்ப

து பூப்பிரத்தாரமென்று சனற்குமாரசங்கிதையிலே சனற்குமாரராற் சொல்லப்பட்டிருக்கின்றது.— வசினிமுதல் எண்மரும்-முன்கூறப்பட்டனர்.—நித்ததேவதைகள் பதினறுவராவார்-திரிபுரசுந்தரி, காமேஸ்வரி, நித்தியாநித்தியை, பகமாலினி, நித்தியக்கிலின்ன, பேருண்டை, வன்னிவாசினி, மகாவிதத்யேஸ்வரி, ரௌத்திரி, த்வரிதை, குலசுந்தரி, நித்தியாநிலபதாகை, விசயை, சர்வமங்களை; சுவாலாமாலினிகை, சித்திரை. என இவர்கள்.—யோகினிகள் பன்னிருவராவார்-வித்தியாயோகினி, ரேசிகாயோகினி, மோசிகாயோகினி, அமிர்தாயோகினி, தீபிகாயோகினிவிஞ்ஞானயோகினி, ஆப்பியாயோகினி, வியாப்பினியோகினி, மேயாயோகினி, வியோமரூபாயோகினி, சித்தரூபாயோகினி; இலட்சுமியோகினி, என இவர்கள்.—ஆகருஷிணிகள் நால்வராவார்- கந்தாகருஷிணி-ரூபாகருஷிணி, ரசாகருஷிணி, பரிசாகருஷிணி. என இவர்கள். — உருத்திரயாமளம் என்னும் நூலின்னுள் இச்சக்கரம் தேவர் கந்தருவர் இயக்கர் இராக்கதர் அசுரர் இவர்களாலே உபாசிக்கப்பட்டதென்றும், நான்குவருணத்துக்கும் நான்காசிரமத்து

க்கும் உபாசிக்கத்தகுமென்றும், உபாசிக்கில் வாழ்நாளும் புகழும் நன்மக்களும் செல்வமும் வசியமும் சுவர்க்கமும் என இவைமுதலாயின நன்மைகளைத் தருமென்றும் கூறப்பட்டிருக்கின்றது.- இவற்றின்விரிவெல்லாம் அந்நூல்களிற்காண்க. [இது தேவியினுடைய வித்தைவந்தவாறுகூறியது.](௩௰)

அரியதாகுஞ்சிவஞ்சத்திமதனவனிபின்பா
தித்தன்மதிமதனவேள், பெருகுவா னிந்திர
ன்பின்புபராமதனன்மால் பேதின்முக்கண்
டமடையவே, யுரியதாமந்தத்தின்யாவையுமு
முறையமைத்துறுமெழுத்தடையவுணர்வா
ற், றெரியினுமத்தினெடும்முனதுறுப்பாமெ
ன்றுசெப்புநான்மறைகளுமையே. *

(இ-ள்.) உமையே. அரியபொருளாய் இருக்கின்ற சிவத்தினுடைய எழுத்தும் சத்தியினுடைய எழுத்தும் மன்மதனுடையஎழுத்தும் பூமியினுடைய எழுத்தும் பின்பு சூரியனுடைய எழுத்தும் சந்திரனுடைய எழுத்தும் காமனுடைய எழுத்தும் ஆகாயத்தினுடைய எழுத்தும் இந்திரனுடைய எழுத்தும் பின்பு பராசத்தியினுடைய எழுத்தும் காமனுடைய எழுத்தும் திருமாலுடைய எழுத்தும் ஆகிய இவற்றைவிளங்க உ

ணாய்பின், இங்ஙனங்கூறிய மூன்றுகண்டமு
ம் உரியதாகப்பெறும் இறுதியின்கண் அ
டைவே மாயையினுடைய எழுத்தொன்றை
யும் மும்முறையாக அமைத்து இப்படிப்
பதினைந்தாகப் பொருந்துகின்ற எழுத்துக்
கள் அடைய உணர்வினால் தெரியுமிடத்து
உன்னுடைய நாமத்துடன் அங்கமாய் இரு
க்கும் என்று நான்குவேதங்களும் செப்புகி
ன்றன. எ-று. ✽ இதனால் இம்மூலமந்தி
ரங்கொண்டு அரியபலன்களைப் பெறலாம்
என்பது பெற்றாம்.—எழுத்தென்பதனை-எ
ல்லாவற்றோடும் கூட்டுக.—கண்டங்களை அ
றியும்படிக்குப் பின்பு பின்பு-என்றார்.—க
டைக்கண்டம் மூன்றெழுத்தும் முதற்கண்
டம் நான்கெழுத்தும் இடைக்கண்டம் ஐந்
தெழுத்துமாகக் கண்டந்தோறும் இறுதியி
ன் மாயையினெழுத்தைப் பொருந்தி இரு
ப்பதனால் தேவிக்குப் பஞ்சதசாக்ஷரி-என்
னும் பெயர்பொருந்திற்று.—முதற்கண்ட
த்தும் கடைக்கண்டத்தும் சத்தியின் எழுத்
தும் மூன்றுகண்டத்தும் காமன் எழுத்து
ம் வருதல் பயன்கருதிய முறைமை. இம்மந்
திரத்தினுடைய மூன்றுகண்டங்களானவை
முச்சுடரும் முச்சத்தியும் மூன்றவத்தையும்

மூக்குணமுமாயிருக்கும். இதன்விரிவு எல்லாம் உபதேசமுறைமையால் உணர்க. [இது தேவியினுடைய மூலமந்திரங்கூறியது.]

மோகபோகவிழைவினுநன் மூலவித்தை தன்னின்முன், ஞகமாரன்யோனியோன் னணங்கமைத்துநெய்யினல், யோகமார்சிவத் தழற்குளோமமுற்றுவிமலையே, த்யாகமாமணிக்கொடக்கவலயமுட்செவிப்பரே. *

(இ-ள்.) விமலையே மோகத்தைச்செய்யும்போகங்களை விரும்பினோர் மேற்கூறிய உன்னுடைய மூலமந்திரத்தாதியிலே மாரனுடைய எழுத்தும் சத்தியினுடைய எழுத்தும் திருமகளுடைய எழுத்தும் முறையே அமைத்து இப்பதினெட்டு அக்கரமாக நின்ற மந்திரத்தைச் சமித்துக்கள் முதலிய எல்லாங்கூடி நிறைந்த சிவரூபமாய் இருக்கின்ற அக்கினியிலே காமதேனுவினுடைய நெய்யினல் ஓமஞ்செய்து தியாகத்தையுடைய பெரியசிந்தாமணிகளைக் கைக்கொண்டு அக்கவலயமாக அதனுட்செவிப்பர். எ-று. ஃ மந்திரத்தைச்செவிப்பர் எனக்கூட்டுக.—போகம்-சுவர்க்காதிபோகம்.—செபமாலைசிந்தாமணியெனச்சொல்லவே, நெய் காமதேனுவினுடையதென்பது வருவிக்கப்பட்டது.

சிந்தாமணியும் காமதேனுவினுடைய நெய்யும் இடைத்தற்கு உரியர் அல்லாதார் தாமரைமணியும் பசுவினெய்யும் கொள்வர். தாமரைமணியிற்செபித்தால் இச்சித்ததெல்லாம் கொடுக்குமென்று நூல்களிற் சொல்லப்படுகையால், பொதுப்படத் தியாகயாமணி என்றார். [இது முன்கூறியமந்திரத்தினுடன் எழுத்துக்கள்கூட்டிச் செபிக்கும்முறைமை கூறியது.] (௩௨)

இருசுடர்முலைத் துணைச் சிவன்வடிவுநீயதனையானுநவமாகநினைவேன், இருவுநிறை தன்னிலளவொத்தபரமானந்தமுடையபர னொடுபனையுமாய், மருவுமினிதாமுங்கள் கூட்டமதுசேடமுமறுத்ததனையுடையதுவயா, யருகிவிருவர்க்கு மொருபொதுவாகி நிற்குங் கொலமிவற்றஞானமுதலே. *

(இ-ள்.) அழிவில்லாத ஞானவொளியாயிருப்பவளே. சந்திரசூரியனொன்னும் இரண்டு சுடராகிய இரண்டுமுலையையுடைய நீ சிவன் வடிவுதானே. அச்சிவன்வடிவினை ஒன்பது கூறுபாடாக யானும்நினைவேன். ஆகலால் இவ்விருவருடைய வடிவும் நிறுத்தாலும் நிறைதன்னில் அளவொத்த பரமானந்தத்தை யுடைய பரமசிவனுடனே பரமானந்தத்தை

யுடைய பராசத்தியாகி இனிதாகமருவும் உங்கள் கூட்டமானது சேடமுமாய் அதனைமறுத்து அச்சேடத்தை யுடையதுவுமாய் இருவருக்கும் அருகில் ஒருபொதுவாகிநிற்கும். எ-று. ※ இதனால் நீயே மெய்ப்பொருள் என்பதுபெற்றாம்.—அளவொத்த கூட்டம் எனக்கூட்டுக.— கூட்டம்என்னுந் தொழிற்பெயரொழுவாய்-நிற்கும் என்னும் வினைமுற்றுப் பயனிலைகொண்டுமுடிந்தது.— இருசுடர் மூலத்துணை நீ எனவே-புவனரூபமெல்லாஞ் சத்திரூபமெனவும், அதனையானும் நவமாகநினைவேன்எனவே-மீண்டும் அப்புவனரூபமெல்லாம் சிவரூபமெனவும், ஆகலால்; சத்திரூபமே சிவரூபம் சிவரூபமே சத்திரூபமெனவாயிற்று.-சத்தி சிவன் வடிவென்றுங்கால், சத்தியானவள் சேடமாகவும் சிவனானவன் சேடத்தை யுடையவனாகவும் சொல்லப்படும். சிவன் சத்திவடிவென்னுங்கால், சிவனானவன் சேடமாகவும் சத்தியானவள் சேடத்தை யுடையவளாகவும், சொல்லப்படும். அதனால் இருவருடைய கூட்டமும் இருவர்க்கும் பொதுவாகலால், உங்கள் கூட்டமது சேடமுமறுத்ததனை யுடையதுவுமா யருகிலிருவர்க்குமொரு பொது

வாகி நிற்கும் என்றார்.—சிவன் ஒன்பதுவடி வாய் இருப்பன் என்பதனை அறிவில்லாதயா னும் நினைவேன் எனப் பொருள் உரைக்கின் றமையால், உம்மை - இழிவு சிறப்பு.- நவம்- நவவியூகம். அவை மூன்கூறப்பட்டன.-அ து என்றது-பகுதிப்பொருள்விகுதி.-ஆ மு ம் சொல்லும்-அசைநிலை. [இது சத்திவடிவு ம் சிவன்வடிவும் ஒன்றெனக்கூறியது.] (௩௩)

மனமுநீவெளியுநீ வளியநீகனலுநீ மறிபு னலுநீபுவியுநீ, நினையினீபரமறவளர்ந்தொ ளிபரந்துவிடினீயன்றி யொன்றுமுளதோ, வுனதுமாஞானவா னந்தவுருவைப்புவன வு ருவெனவகுத்தருளவோ, வனையுமாய் மகவு மாமாறுபோ னிசத்தி யருணவடி வாயது மையே. *

(இ-ள்.) உமையே. மனமும்நீ ஆகாயமு ம்நீ வாயுவும்நீ கனலும்நீ யறியபபட்ட புன லும்நீ பூமியும்நீ. தெளியநினையுமிடத்து நீ மேலற வளர்ந்து ஒளியாக எங்கும் பரந்து விடின் நின்னையன்றிஓர்பொருளுமுளதோ! இப்படி இருக்கின்ற உன்னுடைய பேரறி வின்பத்தையுடைய உருவைப் பின்பு புவன் ரூபமாக வகுத்து வேறுபட்டிருப்பதாக நீ தருவதற்கோ அன்னையுமாய் மகவுமா மாறு

போலநீ அருண வண்ணத்தை யுடைய சத்தி வடிவாகியது. எ-று. ❀ இதனால் உன்னை ஒழிந்து வேறொரு பொருளில்லை என்பது பெற்றாம்.- இம்முறைகூறியது தோற்றமுறைமைகருதி.- தேவிதன்னுடைய உருவத்தை அறுவகைப்பட்டிருக்கின்ற புவனரூபமாக வகுத்து வேறுபடுத்துத்தருதலாலும், அப்புவனம் இவளாய் இருத்தலாலும், அனையுமாய் மகவுமாமாறுபோல் என்றார்.-ஒகாரங்கள் இரண்டினுள்-ஒன்று-எதிர்மறை. ஒன்று-வினா.- இதனுள். உண்மைப்பொருளைப் பிறிதுபொருளாக உரைத்தமையால், பொருளவநுதி என்னும் அலங்காரங்காண்க. "நிலனும்விசும்பா நிமிர்காலாந்தீயா, மலர்கதிராம்வானோர்மதியா மலர்கொன்றை, யொண்ணறுந்தாராரொருவனுயிர்க்குயிரா, மெண்ணிறந்தாணெப்பொருளுமாம்,, இஃது அவ்வலங்காரத்துக்குப் பிறர்காட்டியபாட்டு. [இது முன்கூறியகவியில் இருசுடர் முலைத்துணைநீ எனக்குறிப்பினாற்கூறியவதனை வெளிப்படுத்திக்கூறியது.] (௧௪)

அருணனுமுனதாக்கினைத்திகிரிக்கு ளூட்பட்
டருக்கன்மதியனையவடிவாய், பருவமுதிர்
பரசின்மயத்தொடுறுபான்மையாம் பரமசி

வனைப்பணிகுவா, மொருபொழுதிலிப்பரம்
சிவனையெழுகதிர்மதிய வொளிகடந்தொளி
ருமொருபாற், பெருகுபரமானந்த விழை
வொளிநினைப்பதுகொல் பெறுமுத்தி சத்தி
யொளியே. *

(இ-ள்.) சத்தியாகிய ஒளியே. நீ இருந்து
கருணைசெய்யும் உன்னுடைய ஆக்கினைச்சக்
கரத்துக்குள்ளாக உட்பட்டுச் சூரியசந்திர
வடிவாகிப் பருவம்முதிர்ந்த பரஞானசத்
தியுடன் கூடிய முறைமையையுடைய பரம
சிவனை அவ்விடத்திற்பணிவாம்.பணிவது,இ
ப்பரமசிவனை நாடோறும் எழுகின்ற சூரிய
சந்திரகிரணங்களைக்கடந்து அனேகங்காந்
திகளை விட்டெறிக்கின்ற ஆத்மலோகமாகிய
ஓர்தலத்திற் பெருகுகின்ற மேலாகிய இன்ப
த்தை யுடைய விருப்பந்தருகின்ற ஒளியாக
ஒருபொழுது நினைப்பதுதானே பெறுமுத்
தி; அதனால்.எ-று. ※ அதனால் என்பது-எஞ்
சிநின்றது.—தோன்றா எழுவாயாக இருந்த
யாம்என்னும் பெயரைவருவித்துப், பணிகு
வாம் என்னும்வினைமுற்றுப்பயனிலைகொண்
டு முடிக்க.- சூரியசந்திரவடிவைப்; பரமசிவ
னோடுங்கூட்டுக.-ஆம்-அசை. [இது ஆக்கினை
ச் சக்கரத்தில்தரிசிக்கும் இயல்புகூறியது.]

இறைவிநின்விசுத்தித்தலத்திடை பளிங்கு நிறவெழிலொடுலகருடந்தையா,யுறையுமொருசிவனையு மவன்போலுமாரம்ப முடையவுனையும்பணிகுவா, நிறைமதியொளிச்செரத்தநெறியேகுமுமதொளியி னிலவுண்டுபசிகளைவதோர், முறைபெறுசகோரமென வுலகுபாதகவிருண்முடித்துக் களித்துறையுமே

(இ-ள்.) எல்லா உலகங்களுக்கும் இறைவியே. நின்னுடைய விசுத்தித்தலத்து நடுவே பளிங்குநிற எழிலுடன் கூடி உலகங்களை அருளிய தந்தையாய் உறையும் ஒப்பற்ற சிவனையும் அச்சிவன்போலும் முதன்மையையுடைய உன்னையும் அவ்விடத்திற்பணிவாம். பணிவது, இங்ஙனங்கூறிய நிறைமதியினுடைய ஒளியைநிகர்த்த நெறியாகச்சொல்லும் உங்களுடைய ஒளியினுல் சந்திரனுடைய நிலவை உண்டு தம்பசியைக்களைவதாகிய ஓர் முறையைப்பெற்ற சகோரப்புள்ளென உலகமானது பாதகமாகிய இருளையெல்லாங்களைந்து மகிழ்ந்துறையும்; அதனுல். எ-று.

அவன்போலுமாரம்பமுடைய வுனையும் எனவே, பளிங்குநிறவெழிலுடன் உலகங்களை அருளிய தாயாய் உறையும் ஒப்பற்ற உன்னையும் எனவாம்.- உலகு என்றது- உலகி

ன் உள்ள ஆன்மாக்களே.- இருவரொளிக்கும் சந்திரனொளிக்கும் உவமை. பாதகவிருட்கும் பசிக்கும் உவமை- சீவான்மாக்களுக்கும் சகோரப்புள்ளுக்கும் உவமைகளை தற்கும்முடித்தற்கும்உவமை. ஆதலால் இதனுட்பண்பும் வினையும் பற்றிய உவமை என்னும் அலங்காரங்காண்க. [இது விசுத்திச்சக்கரத்தில் தரிசிக்கும்இயல்புகூறியது.] (ருகூ)

முன்னைத்தபோதனர்த இதயமானதவாவிமுதுஞானமுளரிநறவார்ந், தன்னத்தின்வடமொழிப்பெயர்பெற்றுமொழிபயிலுமறு மூன்றுவிஞ்சைவிரிவாற், பன்னப்பொதிந்த தீவினைதீரினற்குணப்பால்பிரித் துண்டுகளியா, மன்னப்படுஞ்சிறைப் புள்ளிணையைநாடொறும்வழுத்துது மலர்க்கமலையே. *

(இ-ள்.) கமலத்தையுடையவளே. நாடோறும் திட்டையோடு இருந்த தபோதன்றுடைய இதயமாகிய மானதவாவியின்கண்முற்றுப்பெற்ற ஞானமாகிய கமலத்தினுள்ளே இருக்கின்ற பேரின்பமாகிய தேனை உண்ட அன்னத்திற்கு வடமொழியிற் சொல்லும் பெயரினைப்பெற்றுத் தாம் மொழியாகப்பயிலும் பதியினெட்டுவித்தையினது விரிவினால் ஆராய உலகினுள்ள ஆன்மாக்களிட

த்திற்செறிந்த தீவினையாகிய நீரிலேநின்று நல்வினையாகிய பாலைப்பிரித்து உண்டுகளித்து நிலைக்கப்படுஞ் சிறையை உடைய புள்ளிரண்டினையும் நாடோறும் வழுத்துவோம். எ-று. ❊ ஆன்மாக்களிடத்துத் தீவினையும் நல்வினையும் கலந்து இருத்தலால்-தீவினை நீரிற்குணப்பால் பிரித்துண்டு என்றும், அப்புட்கள் ஒலித்த ஒலி பதினெட்டுவித்தையாகலால்-மொழிபயிலு மறமூன்று விஞ்சை என்றும், கூறினார்.- முதுஞான முளரியிலிருப்பதனால் நறவுபேரின்பம் என்பது- பெறப்பட்டது.இது ஏகதேசவுருவகம்.- அன்னத்திற்கு வடமொழிப்பெயர்-ஹம்ஸ—.பதினெட்டுவித்தையாவன - இருக்கு, யசுஸ், சாமம், அதர்வணம்,என்னும்வேதம் நான்கும், மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம்,சோதிடம்,என்னும் அங்கம் ஆறும்; மீமாஞ்சை, நியாயசாத்திரம், புராணம், தருமசாத்திரம், ஆயுள்வேதம், தனுவேதம், காந்தருவநூல், அருத்தசாத்திரம் என்னும் எட்டும் என இவை.— இதயம்-அருசதம்.-மானாதவாவி-பிரமன்வாவி.-தப்பென்பது-சாரிஸ. அசை எனினும் அசையும்.- கமலத்தில் இருக்கும் நறவு உண்

ணுதலும் பாலோடுகலந்த நீரைப்பிரித்து அப்பாலை உண்ணுதலும் அன்னத்தின்தொழில் ஆகலான், தொழில்பற்றிய தன்மை என்னும் அலங்காரமும், இயைய உருவகஞ் செய்தமையால்-இயைபுருவகம் என்னும் அலங்காரமும், இதனுட்காண்க. [இது சிவனையும் தேவியையும் இரண்டன்னங்களாக அநாகத சக்கரத்தில் தரிசிக்கும் இயல்புகூறியது.] (௬௭)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விரித்தவிருள்விழுங்குசத்தி மின்னொடும் பன்மணியிந்த்ரவில்லினோடுந், தரித்தமறை பரவுசிவதபனகதி ரெறிப்பவஞ்சிற் றழன்றுதீயிற், புரித்துலகங்குளிரவொளிதழைத்தொளிரப்பொழியமுத தாரைமாரி, பரித்தமணிபூரகத்துன் பச்சைமுகில்பணிவனருள் பழுத்தகொம்பே. *

(இ-ள்.) அருளேபழமாகப்பழுத்த கொம்புபோன்றவளே. விரிந்த இருளை விழுங்குகின்ற சத்தியாகிய ஓர் மின்னுடனும் அணிந்திருக்கும் பன்மணிதாழ்வடமாகிய இந்திர வில்லுடனுங்கூடி எல்லா விதியையுந் தரித்த வேதங்கள்பரவுகின்ற சிவனாகிய சூரியகிரணங்கள் பிரளயகாலத்தில் எறிப்ப அ

திலேதழன்று கருகில் அவ்வுலகங்கள் பழையபடியே பின்பு குளிரும்படிக்கு ஒளியானது தழைத்தொளிரப்பொழிகின்ற தாரையையுடைய மாரியைச்சுமந்த உன்கணவனாகிய பச்சைமுகிலை மணிபூரகத்திற் பணிவேன். எ-று. ❋ இதனால் நீ அருளைச் செய்வாய் என்பது பெற்றாம்.—மின்னுடனும் வில்லுடனுங் கூடி மாரியைச்சுமந்த பச்சைமுகில் எனக்கூட்டுக.—புரித்த உலகம்-புரித்துலகம் எனக் கடைக்குறை விகாரமாயிற்று. “புகழ்புரிந்தில்லிலோர்க் கில்லையிகழ்வார்முன்” என மேலோர்கூறிய பாட்டினுள்ளும் உணர்க.- விரித்தபுரித்த இவை-வலித்தல்விகாரம்.- இருளைவிழுங்குதல்- இருளைநீக்குதல்.- இதனுள்-மின்னும் இந்திரவில்லும் மாரியும் முகிலும் தம்முட்பொருத்த முடையவாக உருவகஞ்செய்தமையால், இயைபுருவகம் என்னும் அலங்காரம் காண்க. [மணிபூரகசக்கரத்தில் தரிசிக்கும் இயல்புகூறியது.]

நிலைபெறுசுவாதிட்டான நின்சிவனைநீ
யு—மிலகியதன்மைநெஞ்சத் திறைஞ்சுவமு
ளைக்கமாட்டே—முலகமப்பார்வைசெந்தீக்
குருகினின் கருணைபொங்கி—யலையெறியமு
தப்பார்வையளித்தின்றருளுமம்மே. ❋

(௰௨)

இ-ள். தாயே, அக்கினிநிலை பெற்றிருக்கின்ற சுவாதிட்டானத்திலே நின்னுடைய சிவனாகிய அனலும் நீயும் இருந்து ஒளிவிடப்பட்ட சொரூபத்தை வாக்கினால் உரைக்கமாட்டேம். நெஞ்சத்தினால்ஒருவண்ணம் இறைஞ்சுவம். அச்சிவனுடைய பார்வையில் புறப்படுகின்ற சிவந்த தீக்கு உலகங்களெல்லாம்கிடந்து உருகுமிடத்துக்,கருணைபொங்கி அலையெறிகின்ற அமுதத்தையுடைய நின்கடைக்கண்பார்வையானது- அவ்வுலகங்களைக் காத்து இனிதாகிய சைத்தியகுண வுபசாரத்தைச்செய்யும்; அதனால்-எ-று. ※ அம்மையென்னும் பெயரின் ஈற்றைகாரம் விளியுருபின்கண் எகாரமாயுந்திரியும். "அன்னே நின்னையல்லால் யானை நினைக்கேன்,, என்றார் மேலோரும். [இது சுவாதிட்டானசக்கரத்தில் தரிசிக்கும் இயல்புகூறியது.] (௩௯)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நீநந்துமூலவாதாரத்திலானந்தநிர்த்தமிடுமிறைவிநின்னோ, டானந்ததாண்டவம் வினோத்துநவவடிவபெறுமாதிசிவனைப்பரவுவாம், வானந்தெடுத்துலகமடையப்படைத்திடு மிவ்வகையின்டனர்ச்சியலவோ, ஞானங்கொடனைதந்தையெனவுலகுதெளிவுற நடத்துவதுஞானவொளியே. ※

இ-ள். ஞானஒளியாய் இருக்கின்றவளே. ஆக்கமபெற்றிருக்கின்ற மூலாதாரத்தில் நீ ஆனந்தநிருத்தம் இடுகின்றஇறைவி. நின்னுடன்ஆனந்தத்தாண்டவத்தைவருவித்து நவரதவடிவுபெறுநின்ற எப்பொருட்கும்ஆதியாகிய சிவனைப்பரவுவாம். பரவுவது, ஆகாயமுதற்கொடுத்து உலகங்களை அடையப்படைத்திடுகின்ற இவ்வகைப்பட்ட புணர்ச்சியினல் அல்லவோ உலகத்திலுள்ள ஆன்மாக்கள்அறிவுகொண்டு உங்களைத்தெளிவுறத் தாயும் தந்தையும்என நடத்துகின்றது. அதனால் எ-று.

உலகு-என்றது-இங்கேஆன்மாக்களை.—உலகத்தில் தாய்தந்தைஎன நடப்பதும் இது பற்றி.—இருவரும் ஆனந்தநிருத்தஞ்செய்தற்கு இடமாய் இருத்தலால், நீநந்து மூலவாதாரம் என்றார்.—நவரதமாவன - இனிமேல் அரனிடத்திற்பேரின்பம் என்னுங்கவிடட்காட்டப்படும், எண்வகைச்சுவையுடன் சாந்தமென்னுங்சுவைகூட்டப்படுவன. அவைநிருத்தத்திற்கே பெரும்பான்மையும் உரிய.—இன் - சாரியை.— ஒகாரம்-எதிர்மறை. [இது மூலாதார சக்கரத்தில் தரிசிக்கும் இடல்பு கூறியது.] (சW)

ஆனந்தலகரி-முற்றுப்பெற்றது.

சௌந்தரியலகரி.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அந்தர மணித்தபனர் பலமணியின் வடி வெடுத்தமருமுனதம்பொன்முடிமே, லிந் துகலைநவமணியினெழுகுபலநிறமடைந் திலகுமதிசயவடிவினாற், சந்த்ரகலை நன்று நன் றென்பர்சிலரன்றன்று சந்த்ரகலை யிந்தநிற மோ, விந்த்ரசிலையிந்த்ரசிலையென்பர்சில ராதலால் யாதெனவழுத்தவுமையே. *

இ-ள். உமையே விண்மணிஎன்னும்ஆதி த்தர் பன்னிருவரும் பலநிறங்களையுடைய மணியின்உருவம் எடுத்துப் பொருந்துகின்ற உனது அழகிய பொன்முடிமேலேஇருக்கிற விந்துவின் கலையாகிய இளம்பிறையானது அவ்வொன்பதுவகைப்பட்டமணியிற் புறப் படும் பலநிறங்களைஅடைந்து ஒளிரும் அதி சயத்தைத்தருகின்றவடிவினால்; சிலர்சந்திர கலை இவ்வண்ணம்பெற்றது நன்றுநன்றென் ப°.சிலர் அன்றன்றுசந்திரகலைஇந்தநிறத்தை உடையதோ இஃது சந்திரசிலை இந்திரசிலை என்றுசொல்வர். ஆதலால் இந்திரகலை இந் திரசிலை என்னும் இரண்டினுள் யாதென்று சொல்லிப்புகழ்வேன்.எ-று. ❋ வழுத்தஎன் னுஞ்செயவென்னெச்சத்தைத்தன்மையொ ருமை வினைமுற்றாகக்கொள்க.—ஆதித்தர்ப ன்னிருவருக்கு ஏற்பப் பன்னிருமணி என்ற

து நவமணிஎன்றது உலகத்து இனப்பட்ட துபற்றி—ஓகாரம் - எதிர்மறை.—இதனுள் சந்திரகலையானது கார்ப்போர்வியப்பத் தன்னிறம்வேற்றுமைப்பட்டதனுலும், இந்திர சிலை எனத் தோன்றுதலாலும், திரிபதிசயம் என்னும் அலங்காரங்காண்க. துணியாமையால், ஐயவதிசயம்என்னும் அலங்காரமெனினும், அமையும். (சக)

அலர்ந்தகருநெய்தலங்காடெனக்கடைகுழன்றறநெய்த்திருண்டுசெறிவோ, டிலங்குறுமியற்கைமணமெண்டிசையளப்பவதிலிதழ்மூழ்குநறைவிழைவீனுற், பொலன்கொண்முடியாகண்டலேசர்பொற் றுணர்விரி பொதும்பர்மதுமலர்படிவதோர், சிலம்பளி பரந்தவுனதோதியென்மனத்திருட் செறிவுதெறவருள் கடலையே. *

இ-ள். கமலையே- அலர்ந்த கரியநெய்தற்காடென்னும்படி கடைமயிர்க்குழைவுபெற்று மிகநெய்த்து இருண்டு செறிவுடனேகூடிவிளங்கவீசும் இயற்கைமணம் எட்டுத்திக்கையும் இவ்வளவென்று அளப்ப அந்நாற்றம் தேருகைளவுநாறுதலால், அதனுட்சென்று தன்னிதழ்முழுகவேண்டும் மணவிருப்பத்தோடு பொன்னுலாகிய முடியைச்சூடிய இந்திரனுடையகற்பகவனத்திற் பொன்னி

றமாய்இருக்கும் கொத்துக்களில் விரிகின்ற தேனையுடையமலர்வந்து படிவதாகிய ஆரவாரஞ்செய்யும் வண்டுகள்பரந்த உனது ஒப்பற்ற கூந்தலானது என்மனத்திலுள்ள இருட்செறிவைநீக்க, அருள்வாய். எ-று. * பணை விருப்பத்தோடு மலர்வந்துபடிவதாகிய கூந்தலெனக்கூட்டுக.— நெய்த்தல்-சருச்சரையில்லாமல்இருத்தல்.—இதனுள் தொழிலதிசயம்என்னும் அலங்காரங்காண்க. (சஉ)

மோதியவெங்கதிர்மீளவெருண்டிருண் மூடவொதுங்கியவாறேயோ, சோதிமுகங்கவினெறிவழிந்தனசோரவிடுங்கவர்காலேயோ, வோதிபிணைந்துபின் வீழவகிர்ந்ததனூடெழுதும்பிரபையாதேயோ, கோதறுசிந்தூரரேகைவளம்பிறர்கூறுவதன்றிதுமாதாவே *

இ-ள். மாதாவே உனதுகூந்தல் பின்னலாகப்பிணைந்து முதுகில்வீழவகிர்ந்து அதன் நடுவே நெடியதாகஎழுதப்படும்பிரபையானது-உலகத்தில் உள்ள இருளெல்லாம் அஞ்சமுன் மோதிப்புறப்பட்ட வெய்யகதிரையுடைய சூரியன் இருளெல்லாம் திரண்டு இருபுறமும்வந்துமூடப் பின்புஅஞ்சி நடுவே ஒதுங்கியவாறு. அஃதன்றி உன்னுடைய சோதிபொருந்தியமுகமாகிய குளத்தினிடத்து அழகாகிய நீர்நிரம்பிப் பின்பு அதுகொ

ள்ளாமல் எறிவழிந்தன கழிந்துபோகவிடப்படுங்கலிங்கோ. அஃதன்றி யாதோ. எனக்கறியப்படுவதல்ல. ஆகலால் இப்பிரபையைக் குற்றமற்றசிந்தூரரேகையின்வளமென்றுபிறர்கூறுவதொன்றும் என்னெஞ்சத்திற்குப் பொருத்தமன்று- எ-று. ※ அழகின்திறம்-சிவப்பு —ஓவியன் படத்தில் எழுதிய ஓர்சித்திரத்தைக்கண்டு இது குளமோயாறோ கடலோ என்று ஐயுற்று வினவுவதுபோல வினவுதலால், எழுதும்பிரபையென்று உட்கொண்டும் ஐயந்தோன்றக்கூறியது குற்றமாகாதென்க.—எறிவழிந்தனகழிந்துபோகவிடுங்கலிங்கோ என்பதனால், முகத்தைக்குளமாகவும் கவினைநீராகவும் உருவகஞ்செய்துகொள்க.—எகாரங்கள்-இசைநிறை. ஓகாரங்கள் - வினா. "ஈசனையொப்பவர் தேவர்கணத்திடையாரோ யோ," என்றார் பிறரும்.—வெங்கதிர் - பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.—சிந்தூரம்-சிந்துரம்எனக்குறுகியது.—இதனுள் ஐயவதிசயம் என்னும் அலங்காரமும் அவநுதி என்னும் அலங்காரமும் காண்க.—[கேசாதிபாதவர்ணனையாகத் தேவியுடைய உறுப்புக்களைப்பாடியவதனால் இம்மூன்றுகவியுங்கேசவர்ணனைகூறின.](௪௯)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கூரெயிற்றின கவிதழுங்கொண்கர்விழிவரி
வண்டுங்குழற்படிந்தமதுகரத்தின்குழாமுங்
கூடிப், பேரியற்கைமணம்பொதிந்து புன்
மூரன்முகையவிழப்பிறழுமுண தருணமுக
கமலமென்று, வோரியற்கைவாடிதழ்பொ
றிவண்டேபடிவதுமற் றோரியற்கை செயற்
கைமணம்போதுசெய்பு, நீரியற்கைமலர்க்க
மலமிதற்குடைந்துபங்கமுற னீதியென்ப தி
யாரறியார் திகரின்மாதே *

இ-ள். ஒப்பில்லாதமாதே. கூரிய எயிறு கிய உள்ளிதழையும் உன்னுடையகணவர்கண்ணாகியவரியையுடையவண்டையும் குழலிலே படிந்தவண்டினதுகூட்டத்தையும் பொருந்தி இயற்கையாகிய மிகுந்தமணத்தையும் உடைத்தாய்ப்புன்சிரிப்பாகிய முகை அவிழ ஒளிரும் உனதுசிவப்பையுடையமுகமாகியகமலம் என்று யாவருஞ்சொல்லலாயிருக்க, ஓரியற்கைதன்னிதழ்முழுதும்வாடும். பிறிதோரியற்கைபொறிவண்டே மேற்படியப்பெறாவாது - தனதுமணமுஞ் செயற்கைமணமே. அதுவுமன்றிப் போதாகியே விரியாநிற்கும். இவ்வியல்பினையுடைய நீரின்கண் இயற்கையாக இருக்கின்ற கமலமலர் இம்முககமலத்திற்கு உடைந்து தாழ்வுபடுதல் நீதி என்று

சொல்வதுடையவர் அறியார்- எல்லாரும் அறிவார். எ-று. ✻ பங்கமுறல் என்பதனால், சேற்றினிடத்துஉறுதலெனஅதன்றன்மைத்தொழிில் கூறியவாறுங்காண்க.—முககமலத்தினுடைய எயிறாகிய இதழ் ஒருக்காலும் வாடாது என்பதுபற்றி-அதற்கு மாறுபாடாக நீரின்கண் இருக்கும் கமலவிதழ்வாடும்-என்றும், முககமலத்திற்பொருந்திய கணவர்கண்ணாகியவண்டிற்கும் குழற்படிந்த வண்டிற்கும் பொறியின்மைபற்றி- அதற்கு மாறுபாடாக நீரின்கண் இருக்கும் கமலத்தில் பொறிவண்டேபடிவதுஎன்றும், முககமலத்தின் மணம் இயற்கைஎன்றதுபற்றி- அதற்குமாறுபாடாக நீரின்கண் இருக்கும் கமலத்தின்மணம்செயற்கைஎன்றும், முககமலம் எப்பொழுதும் குவியாமல் புன்சிரிப்பாகிய முகை அவிழாநிற்கும் என்பதுபற்றி-அதற்குமாறுபாடாக நீரின்கண் இருக்குங்கமலம் போதாகியே விரியுமென்றும், கூறினார்.—கணவர்கண்ணாகிய வண்டுபொருந்தல் - இடைவிடாமல்பார்த்தல்.—குழற்படிந்தவண்டு - பொன்னந்தும்பி. அதுதாமரையிற்செல்லாது. குழற்படிந்தவண்டு முகத்திற்குப் பொருத்தமாகக் கூறியது-மயிர்க்கற்றை முகத்துடன்கூடி ஒற்றுமை நயம்பற்றி இருத்தலால் என்க.—தீரி.

ன்கண் இருக்கும்கமலமலர்வாடுதல் - பழம்பூவாகஉதிர்தல். —மதுகரத்தின்குழாம் என்பது ஆறனுருபு தொகைப்பட்டு ஒன்றன்கூட்டத்தற்கிழமைகொண்டது.— போதுசெய்தல்-பக்குவமாய் முறுக்கவிழ்தல். "காலையரும்பிப்பகலெல்லாம் போதாகி,மாலைமலருமிந்நோய்" என்றார் மேலோரும். —முககமலத்தின்மணம்இயற்கைஎன்றது- வாயில் இயல்பாகத்தோன்றும்மணத்தினை. அன்றியும் முகமும் தாமரைமணம்போல் இயல்பாக மணக்கும் எனினும் பொருந்தும்.— நீரின்கண் இருக்குங்கமலத்தின்மணம் செயற்கைஎன்றது- நீரினாலும் பருவத்தினாலும்உண்டாதலால்.——எயிற்றினை கவிதழ் என்பதனுள் இன் -அல்வழிக்கண்வந்தசாரியை- 'காய்சின வேலன்னமின்னியல் கண்ணின் வலைகலந்து வீசினபோதுள்ளமீனிழந்தார்" என்றார் மேலோரும்-——இதனுள் நீரில் இருக்கும் கமலம்போன்றிருத்தலால் முகத்தைக்கமலமாக உருவகஞ்செய்து வைத்துப் பின்பு அதற்கும் இதற்கும்வேற்றுமைசெய்தமையின், வேற்றுமையுருவகம்என்னும் அலங்காரங்காண்க [இது முகவர்ணனை கூறியது.] (௪௪)

கலிவிருத்தம்.

கோதைநீண்முடி கொண்டொளிர்திங்கள்

சேர், பாதிவாணுதலென்றுபடிந்ததோ, வீ ருகூடியிரண்டுநிறைந்ததோ, சீதபூரணத்தி ங்கள்சிறந்ததே. ❋

இ-ள். கோதாய்.உன்னுடையநீண்டமுடி மேற்கொண்டு ஒளிர்கின்ற நிறைந்ததிங்களி ன்மேலாகச்சேர்ந்திருந்தபாதியும் ஒளிமைய யுடைய உனது நுதலாகவந்து இழிந்துபடி ந்ததோ.அதுவுமல்லாமல் உவாவிற்குளிர்ச்சி யோடுநிரம்பிவட்டங்கொண்டதிங்களாகச்சி றந்த துஇந்நுதலாகவந்திழிந்துபடிந்தபாதி மதியும் முடிமேல் இருக்கின்றபாதிமதியுமா கிய இரண்டுங்கூடி நிறைந்ததோ. எனக்கறி யப்படுவதாய்இருந்ததல்ல,நீசொல்வாயாக எ-று. ❋ ஒகாரங்கள்-விஞ.—இதனுள் மு டிமேற்சூடிய திங்களிற்பாதிவந்து இந்நுத லாகப்படிந்ததோ என்றும் இவையிரண்டும் கூடி உவாமதியாகி ஆகாயத்தின்கண் நிறைந் ததோஎன்றும் இயல்பாக நிகழுந் தன்மை ஒழியக்கவிகருதியவதன்மேல் ஏற்றிக்கூறிய வதனால், தற்குறிப்பேற்றம்என்னும் அலங் காரங்காண்க.[இது நுதல்வர்ணனைகூறியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கருவிழிச்சுருப்புநாணுன் கண்மலரம்பு கன்னற், புருவவினடுவொழித்தல் போன்ற துவளைத்துப் போர்மேல், வருமதன்பிடித்

நகைக்குண்மறைந்ததுபோலுமென்றுற்,றி
ருமகள்பரவுமம்மேசிலையிதுபுருவமன்றே*
இ-ள். திருமகள்பரவாநின்றதாயே. உன
து கருவிழியாகியவண்டுநாணையும்கண்ணாகி
ய மலரம்பினையும் உடைய புருவமாகிய கரு
ப்புவில்லினுள் இடைவிட்டிருப்பதுபோல
த்தோன்றியது-வலக்கையால் நாணைவாங்கி
அதனைவளைத்துப் போர்மேல் வருங் கா
மன் இடக்கையினூற்பிடித்தபிடிக்குள்மறை
ந்ததுபோலும் என்றுயாவரும் சொல்லலா
ல்; உன்னுடைய நெற்றியில் இருக்கும் இஃ
து அக்காமனுடைய வில்லே. புருவமன்று.
எ-று. கண்ணென்றது-வெள்ளிய விழியு
டன் இமையை.—இதனுள் புருவம், என்னு
ம் உண்மைப்பொருளைமறுத்துச்சிலைஎன்னு
ம் ஒப்புமைப்பொருளை உடன்பட்டு உருவ
கஞ்செய்தமையால், அவநுதியுருவகம் என்
னும் அலங்காரங்காண்க. [இது புருவவர்ண
னைகூறியது] (சசா)

கொச்சகக்கலிப்பா.

ஒருமலர்க்கணிரவிவலத் துதித்தருளுநன்
பகலு,மொருமலர்க்கண்மதியமிடத் துதித்
தருளும்பேரிரவுந், திருநுதற்கட்பொற் கம
லச்செந்திறத்தீவிளைத்தருளும், விரவுசெக்க
ர்மாலைபுமுன் விளைவுகளாவிழுப்பொருளே.

இ-ள். விழுமிய பொருள்போல்பவளே. உன்னுடையமலர் போலும் ஓர்கண்ணாகிய இரவிமுகத்தின்வலப்புறத்தில் உதித்துத்தருகின்றநன்பகற்பொழுதும் மற்றோர்மலர்போலுங் கண்ணாகிய மதியம் இடப்புறத்தில்உதித்துத்தருகின்ற நெடியஇராப்பொழுதும் திருநுதலிலே இருக்கின்ற பொற்சமலம்போலும் கண்ணாகியசிவந்தநிறத்தையுடைய தீதருகின்ற விரவியசெக்கர் மாலைப்பொழுதும் உன்மனமகிழ்ச்சியைநீங்கா-எ-று. ※ நீங்காவெனவே உனக்கு அழிவில்லையென்பதும் கண்களால் ஆயிற்று.—விரவுதல்- பகலும் இரவுஞ்சந்தித்தல்.—இதனுள் மூன்றுகாலங்களுங் கண்களால் தோன்றப்படுவதாக்கிக் கூறியவதனால், துணிவதிசயம்என்னும் அலங்காரம் காண்க. (௬௭)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கோலநகர்விசாலையாய் நிரந்தரகல்
யாணியாய்க் குவலயத்தா லயோத்தியாய்க்
குலமதுரை தானாய்ச், சாலவொளிர்போக
வதி யாயமுத தாரையாய்த் தண்ணளியால
வந்தியாய்ச் சகவிசயையெனலாய், நீல வி
ழிபுடையரந்து நெடுநகரப்பெயர்களேந்து
நீண்டுசேந் தரியரந்து நிகரொழிக்குமென்
றூ, லாலவிடமமுதெனக்கொண் டருந்திய

வுன் மத்தர்புரமதனிலொருபுறங்கவர்த லதி சயமோதாயே. *

இ-ள். தாயே. விசாலத்தையுடைத்தாய் இருப்பதனால் அனேகநகரங்களுள் அழகை யுடையநகராகியவிசாலையாய், நாடோறும் மங்கலத்தோடுகூடி இருத்தலால் கல்யாணி யாய், நீலமலரால் வெல்லப்படாமல்இருத்த லால் அயோத்தியாய், அடியார்கண்களுக்கு மதுரமாய்இருத்தலால் குலமதுரை தானாய் மிக ஒளிருகின்ற போகந்தங்கும் இடமாய் இருத்தலால் போகவதியாய், அமுதத்தைத் தரித்தலால் அமுததாரையாய், தண்ணளியி னால் அளிப்பதாய் இருத்தலால் அவந்தி யாய், இவ்வேழுநகரங்களேயன்றி உலகத் திலுள்ள நகரங்களையும் வெற்றிகொள்வதெ ன்றுசொல்லலாய்ப், புடைபரந்துஇங்ஙனங் கூறிய நெடியநகரங்களினதுபேரைக்காரண த்தால்கவர்ந்துமிகநீண்டுசிவந்து அரிபரப்பி உன்னுடைய நீலநிற விழியே தனக்கொப் பொழிக்கும் என்று யாவரும் சொல்லலாய் இருக்க; பாம்பினதுவிடத்தை அமுதமென உட்கொண்டு அருந்திய உன்மத்தராகிய நா யகருடையவடிவமதனில் ஒருபுறத்தைநீகவ ர்தல்அதிசயமோ. இஃதுஅதிசயமல்ல-எ-று.

* கண்களுக்குமதுரமாய்இருத்தல்-கண்க

ருக்கு இன்பந்தருதல்.—நகரிற்கும் உடம்பிற்கும்பொதுப்படக்கொள்ளவேண்டி உடம்பைப்புரமென்றார்.—ஓகாரம்-எதிர்மறை இதனால் தொழிலதிசயமென்னும் அலங்காரங்காண்க. (சஅ)

கொச்சகக்கலிப்பா.

இருசெவியுண்பலகவிதை யிணரொழுகு பசுந்தேனிற், பெருகுநவ ரதமருந்திப் பிறழ்ந்திடுமுன்பிணைவிழியாங், கருநிறவண் டிணைகளிப்பக் கண்டுபொறு தென்னேயோ, வரிநுதற்கணவிசிவந்த வளம்பாராய் மலர்க்கொடியே. *

இ-ள். மலையையுடைய கொடிபோல்பவளே. உன்னுடைய இரண்டுசெவியும் உண்ணப்பட்ட கலைமகள் முதலாயினோர் புகழ்ந்து பாடும் பலகவிதையாகிய பூங்கொத்தினின்றும் ஒழுகுகின்றபசுந்தேனிலே மிகுந்தபுதியசுவையையுண்டு உகளாநிற்கும் உன்னுடைய இருவிழியாகிய கரியநிறத்தையுடைய இரண்டுவண்டுங்களிப்பக்கண்டு, மனம்பொறுமல் செவ்வரியையுடைய நுதற்கண்ணாகியவண்டு சிவந்தவளத்தை - ஆடியிருப்பாராய். எ-று. ஆடிஎன்பது அருத்தாபத்தியினும் பெறப்பட்டது.—நவரதமென்பதற்கு ஒன்பதுவகைப்பட்டசுவையெனினும், பொருந்து

ம்.—சடைக்கண்காதலாவும் எல்லாமுதலால் - பெருகுநவரசமருந்திட்பிறழ்ந்திடுமூன் பிளைவிழியாள்கருதிறவண்டெனன்றும், சிவப்புச்சிளைத்தினுல் வருமென்பதாக்கருதி-வரிநுதற்கணாளிசிவந்தவளம்பாராயென்றும், கூறினர்.—செயயினும் வினையினும் பின்முன் னேரிடத்தொன்றும் பலவும்மைத்தொன்றுவதிமைடச்சொல்; என்பதுகொண்டு என்னும் எயும் ஓவும் இடைச்சொல்லெனக்கொள்க.—இதனுள் தற்குறிப்பேற்றம்என்னும் அலங்காரங்காண்க. (௫௬)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அரனிடத்திற்பேரின்ப மருளுமவனல்லாரிபாலருவருக்குமவன்முடிமேலணிநதியைச்சீறும், பரவுநுதல்விழியமூன்முன்பார்த்திலபோலசிசயிக்கும்பணியாய பணிமெவருளப்பயந்தனபோ லொதுங்கும், விரைமுளரிப்பகைதடிந்து வீரதம்படைக்கும் விளைவுசூளைச்செடியர்க்குவிருத்து நகைவிளைக்கு, மிரவுபகலடிபரவுமெளியனைக்கண் டருள்புரியுமித்தனையோபடித்தனவுன் னிளைவிழிகடாமே. *

இ-ள்- தாயே உன்னுடையகணவராகிய அரனிடத்திற் பெரியஇன்பத்தைக்கொடுக்கும். அவனல்லாதவிடத்து அருவருப்போடு

கூடிஇருக்கும். அவன்முடிமேல்இருக்கின்ற அழகையுடையகங்கையாற்றைச்சீறும். யாவரும்பரவுகின்றசிவனுடைய நுதல்விழியனலை முன்பு ஒருக்காலும் பார்த்ததில்லைப்போல அதிசயப்படும். அவனுடைய ஆபரணமாகியபாம்புகள்வெருள அவற்றிற்குப் பயந்தனபோலே ஒடுங்கும். நறுநாற்றத்தையுடைய தாமரையாகிய பகையைப் புறங்கண்டு வீரதத்தைப்படைக்கும். உசாத்துணையாய் இருக்கின்ற சேடியர்க்கு நல்விருந்தாக நகையைச்செய்யும். இரவும் பகலும் நின்னடியைப்பரவும் எளியனைக்கண்டு அருள்புரியாநிற்கும். ஆகலால் உனதுவிழிகள் இரண்டும் இத்தனை எல்லாம் படித்தனவோ. எ-று. ❁ விருத்து-விகாரம்.—ஒகாரம்-வினா.—இதனுள் காமம் இழிப்பு உருத்திரம் வியப்பு அச்சம் வீரம் நகை கருணை என்னும் எண்வகைச்சுவையும் புலப்படக் கூறியவதனால், சுவை என்னும் அலங்காரங்காண்க. சாந்தமென்னுஞ்சுவை விகாரமின்மையில், கூத்தர் நூலின்படிஎட்டேவேண்டினார்(௫௰)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

இகல்பொரக்குழையைமுட்டி மிமைமயி
ரொழுங்கிற்றூவ, னிகாறுநித்தர்யோக நீக்
கிவெம்போகநல்குஞ்,சிகரவெற்பரசன்பெரு

ல்லத்திருமர பென்னுந்தெய்வ, மகுடமா
மணிநின்கண்கள் வயமதன்வாளிதானே *

இ-ள். சிகரத்தோடுகூடிய வெற்பரசனு
டைய பழைய திருமரபென்று சொல்லப்ப
டுந் தெய்வமகுடத்தில் அழுத்திய மாணிக்க
ம்போன்றவளே. பகையைப்பொரும்படிக்
குக் காதளவுவாங்கினதுபோலக் குழையை
முட்டியிருக்கின்ற இமைமயிராகிய ஒழுங்
கினையுடைய அம்பினிறகு நிகரற்ற நித்தரு
டைய யோகப்பயிற்சியாகிய சாந்தத்தைநீ
க்கி வெய்தாயிருக்கின்ற போகத்தைக்கொ
டுக்கும். அதனால் நின்னுடையகண்கள் வலி
யையுடைய மன்மதனம்புதான். எ-று. ※
வாளிகொல்லோ என்று பாடமாயின், அம்
போ என்று பொருளுணர்த்து ஓகாரத்தை
வினவாக்கிக் கொல்லென்பதனை அசையா
க்குக.—இதனுள் தற்குறிப்பேற்றம் என்னு
ம் அலங்காரங்காண்க. (ருக)

வரிவிழிச்செம்மைவெண்மை வனப்புறு
கருமைமூன்று, மெரிதெறுகற்பகாலத் திற
ந்தமுப்பொருளுந்தோன்றுங், கருவெனக்
குணங்கண்மூன்றின்காரண மென்னப்பெற்
று, லருமறைப்பொருளேயுன்றனருளலாது
லகமுண்டோ. *

இ-ள். அரிய வேதத்தினது பொருளாய்

இருக்கின்றவளே. உன்னுடைய வரிபரந்த விழியில் இருக்கின்ற அழகுற்ற சிவப்பு வெளுப்புக்கறுப்பாகிய மூன்றுநிறமும் ஊழித்தீமுதலாயின தெறுகின்ற பிரளயகாலத்தில் இறந்த மும்மூர்த்திகளாகிய முப்பொருளுந்தோன்றுங் கருவெனவும் அவர்பெறும் முக்குணங்களின் காரணமெனவும் பெற்றால், உனது அருளையன்றி உலகமென ஒன்று உண்டோ. அஃதில்லை. எ-று. இராசதம் சாத்துவிகம் தாமதம் என்னும் முக்குணமும் முறையே சிவப்பு வெளுப்புக் கறுப்பாகலால், முக்குணத்தையுந் தரும் காரணம் எனக்கூறினார்.—ஒகாரம்-எதிர்மறை.—இதனுள் ஆதாரவேது என்னும் அலங்காரங்காண்க. (௫௨)

அம்மைநின்கருணைபொங்கியலையெறி நயனவேலை, மும்மணிகெழுமூன்றென்டார் மும்மலங்களையழிக்கச், செம்மைநன்சோணையாறுதெளிகங்கையமுனைமூன்றுந், தம்மயத்தொடும்வந்துற்ற தன்மையீதென்பார் மிக்கோர். *

இ-ள். தாயே. கருணைபொங்கி அலை எறிகின்ற நின்னுடைய நயனமாகிய கடலினிடத்து இருக்கின்ற செம்மணி வெண்மணி கருமணி என்னும் மூன்றையும்-உன்னை

அடையும் உன்ருெண்டரானவர் காமம் வெகுளி மயக்கம் என்னும் மும்மலங்களையும் களையும்படி மூழ்கச் சிவப்பையுடைய நல்ல சோணையாறும் வெண்மையாய்த் தெளிந்த கங்கையாறும் கறுத்த யமுனையாறும் தத்தம் நிறத்தோடும் வந்து கூடியதன்மை என்று சொல்வர் மிக்கோர். எ-று. ❋ காமம் வெகுளி மயக்கம்-என்னும் மும்மலமும் முறையே வெளுப்புச் சிவப்புக்கறுப்பாகலால் அவற்றை அவ்வவ நிறத்தையுடைய யாறுகள் கழுவும்படிக்கு வந்துகூடிறுற்போன்றிருத்தலால், மும்மணியையும் திரிவேணிசங்கமென்பர் எனக்கூறினர்.—கண்ணில் இருக்கும் மூன்று நிறத்திற்கும் மணியென்றேபெயர். "கருமணியிற்பாவாய் நீ போதாயாம்வீழுந்,திருநுதற்கில்லையிடம்," என்றார் மேலோரும்.—ஈதுஎன்பது-இடைச்சொல்.—இதனுள்-தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரங்காண்க. (௫௩)

இடம்படர்கொடியேநின்க ணிருசெவிக்குழைப்பதேதென், றடர்ந்தெழுகயலின் கண்களடைப்பிலபயப்பட்டம்மா, கடும்பகற்கமலவீடுங்குல்வாய்நெய்தல்வீடு,மடைந்தனள்கமலையொன்றேன் றடைப்பனகண்டிகண்டாய். ❋

இ-ள். சிவனுடைய இடப்பாகத்தில் படர்ந்த கொடிபோல்வாளே. நின்னுடைய கண்வந்து உன்றிருச்செவிக்கு மந்திரமாக உரைப்பது யாதுகாரணம் என்று யாற்றுநீர் முதலாயின நீரிலே நெருங்கி எழுகின்ற மீன்கள் தாம்கண்போல் இருத்தலால் நம்மை அபாயஞ்செய்ய உரைக்கின்றதோ என்று அஞ்சித் தங்கண்கள் ஒருபொழுதும் இமைப்பதில்லை. அதுவுமன்றிக் கமலமும் நெய்தலும் கண்போன்றிருத்தலால் அவற்றின் நிறத்தைக் கவருதற்கு உரைக்கின்றதோ என்றஞ்சி இராப்பொழுது கமலமலரும் பகற்பொழுது நெய்தன்மலரும் இதழாகிய கதவை அடைப்பனவாகச்செய்து பகற்பொழுது கமலமலராகிய வீட்டினிடத்தும் இராப்பொழுது நெய்தன்மலராகிய வீட்டினிடத்தும் மாறிமாறிப்போய் இருந்தாள் கமலை. எ-று. ✽ கண்காதளவுசென்று இருப்பதனைநோக்கிக் கமலையானவள் கமலமும் நெய்தலும் தனக்கு வீடாகலால் பகற்பொழுதெல்லாம் கமலத்தைக் காத்தும் புறப்படும்பொழுது அக்கமலத்தை இதழாகிய கதவால் அடைக்கச்செய்து நெய்தலிடத்தும்வந்து அதன் இதழாகிய கதவைத் திறக்கச்செய்து அதனை இராப்பொழுதெ

ல்லாம் காத்தும் புறப்படும்பொழுது அந்
நெய்தலை அடைக்கச்செய்து கமலத்தின் இ
டத்துவந்து அதனைத்திறக்கச்செய்தும் இ
துவேதொழிலாகத் திரிகின்றனென்ன வே
ண்டிக் - கடும்பகற்கமலவீடுங் கங்குல்வாய்
நெய்தல்வீடு மடைந்தனள் கமலையென்
றென் றடைப்பன கண்டு என்றும், மீனின்
கண்ணுக்குஇமை இல்லைஎன்பது ஒருதலை எ
ன்றெண்ணிக்-கயலின்கண்க ளிமைப்பில ப
யப்பட்டு என்றும், கூறினர்.—பயப்பட்டு
என்பதனால்-நீரின்கட்பட்டு என அதன்றன்
மைத்தொழில் கூறியவாறுங் கொள்க.—
பகலென்பது-தன்வெம்மையினால் கடும்ப
கலென அடையடுத்து நின்றது.—கமலத்
தையும் நெய்தலையும் சாதிபற்றி ஒன்றென்
று எனப் பட்டது.—கண்டு என்பது-கண்டு
ச்செய்தென்னும் தொழிலாய் நின்றது.—
அம்மா என்பதும் கண்டாய் என்பதும்-மு
ன்னிலையசை.—இதனுள்-மேற்கூறியகவி அ
லங்காரமேகாண்க. (௫௪)

இணைவிழியிமையாநாட்ட மெய்தியதலர்
த்தோன்றும், பணைநெடும்புவனமிந்தப்பா
ர்வைசற்றிமைக்குமாயிற், றுணையிழந்தழி
வதென்னணித்துணிந்ததின்கருணையென்றாற்,
கணையினுங்கொடியதென்னக் கடவதோகட

வுண்டாதே. *

இ-ள். தெய்வமாதே. உன்னுடைய கண்ணலர்வது காரணமாகத்தோற்றும் பெரிய நெடியபுவனம் இக்கண்பார்த்த பார்வை சிறிதுபொழுது இமைக்குமாயின் அப்பார்வையாகிய துணையையிழந்து அழிந்து விடுவதனைக் கருதித் துணிந்த நின்கருணையினால் உன்னிருவிழியும் இமையாநாட்டமாக இருந்ததென்று யாவருஞ் சொல்லலாயிருக்க, இவ்வருளையுடைய அதனை அம்பினுங் கொடியதென்று சிலர் சொல்லக்கடவதோ. கடவதல்ல. எ-று. * மூன்றும்வேற்றுமை விகாரத்தாற் றொக்கது.—சற்று என்பது-சிறிதென்பது. "உற்றவாய்மை சற்றுந்தருகிலிர்,, என்றார்பிறரும்.—ஒகாரம்-எதிர்மறை. இதனுள் பொருளேது என்னும் அலங்காரமும் தன்மை என்னும் அலங்காரமும் காண்க. (௫௫)

நெடியகட்கரியநெய்தனிறையருட் சலதியெய்தாக், கொடியனேன் பிறவித்துன்பக் குரைகடல்கடந்துமூழ்க, விடிவனதிற்குறைவனுண்டோ டெய்த்தவர்க் கொழிந்துருதோ, கடிநகர்நிலவுகாட்டிற்காயுமேகருணை வாழ்வே. *

இ-ள். கருணைச்செல்வமாயிருப்பவளே.

உன்றுடைய நெடியகண்ணுகிய கரியநெய்
தற்பூவின் நிறைந்த கருணைக்கடலை அடைந்
திடாத கொடியனேனது பிறவியாகிய து
ன்பம்பொருந்திய குளைகடலைக்கடந்து யா
ன்மூழ்கும்படி நீயேகருதி அக்கருணைக்கட
லிலிடத்து என்னைவிடில் அதிற் குறைந்து
போவதுண்டோ. அப்படிவிடினும் மெய்த்
தவத்தையுடையவர்க் கொழிந்து என்னைமூ
ழ்கச்செய்யாதோ- மாடகூடங்களோடு கூ
டிய காவலையுடைய நகரில் எறிக்கும்நிலவு
விடர்களோடுகூடிய கரிந்த காட்டினும் எ
றிக்குமே. அதனால் என்னையும் முழுகச்செ
ய்பும். எ-று. ❈ நகர்க்கு மாடகூடமும் கா
ட்டிற்கு விடரும் கரிதலும் வருவித்தது
நகரின் உயர்வும் காட்டின் இழிவும்பற்றி.—
குளை-கடலென்பதற்கு அடையாகநின்றது.
ஏகாரம்-தேற்றம். ஓகாரங்கள் - எதிர்மறை.
விடுவெனினும்; அமையும்.—இதனுள்-தவ
த்தோரன்றி என்னையும் மூழ்கச்செய்யும் எ
ன்னும் பிறிதொன்றனைப் பெறப்படுதலால்,
ஒட்டு என்னும் அலங்காரங்காண்க. (௫௬)

கருங்குழலுநற்பிட்பின்னற் கவின்கடை
க்கபோலந்தாழ்ந்த, வருங்குழைகடந்தகண்
ணினயிற் கடையணங்கசாப, நெருங்குறத்
தொடுத்தவேவினிமிர்தலை யேய்க்குமென்று

ண், மருங்கில்பொற்றிருவேயாருண் மதர்வி
ழிபரவவல்லார். *

இ-ள். மருங்குலில்லாத பொன்னிறத்தை
யுடைய அழகுபொருந்தினவளே. உன்னு
டைய நுதலின்மேற் பின்னிய கரியகுழற்
பின்னலின் கடைபொருந்திய கபோலத்
தில்தங்கிய அரிய குழையைக்கடந்த உ
ன்கண்ணினது கூரியகடையினது பகையை
நெருக்கும்படிக்கு நிறையவாங்கிய கா
மன்வில்லில்தொடுத்த அம்பினுடைய நிமி
ர்ந்ததலையைஒக்குமென்று எல்லாருஞ்சொல்
லால், யாவர் உன்னுடைய மதர்த்த விழி
யைத்துதிக்க வல்லார். எ-று ※ கடை.- க
வினென்னும் அடையடுத்து நின்றது.—
மேற்காதில் இடப்பட்டு விற்போல்வளைந்து
குழைவுபெற்றிருக்கின்றவதனால் - அவ்வணி
யைக்குழை என்றும், அதுதங்கி இருக்கு
ம் இடம் எவ்விடமோ என்று ஐயுறாமல் அ
றியும்படிக்கு - கருங்குழனுதற்கட்பின்னற்
கவின்கடைக்கபோலந்தாழ்ந்தவருங்குழை
என்றும், கூறினர்.—மருங்கு- கடைக்குறை
விகாரம்.—மருங்கில்பொற்றிரு எனவே அ
ம் மருங்குல் மிகச்சிறிது என்பதாயிற்று.
இதனுள் பல உவமை வந்தும் அவ்வுவமை
தோறும் உவமைபுருபு புணராது முடிவின்

கண் ஓரிடத்துப் புணர்த்தியவதனால், ஒருவயிற்பொலியுவமை என்னும் அலங்காரங்காண்க. [இப்பதினொருகவியும் கண்ணின்வர்ணனைகூறின.] (௫௭)

தோகைநின்கபோலஞ்சார்ந்த துணைநிழற்சுவடுந்தோடு, மாகவிவ்வுருளை நான்கினான விரதம் வாய்த்தோ, வேகநன் புடவிவட்டத் திருசுடராழித் திண்டேர்ப், பாகனைப் பொருதுமாரன்பழம்பகை தீரப்பெற்றான்.

இ-ள். மயில்போன்றவளே. நின்னுடைய ரெண்டு கபோலத்திற் சார்ந்த தோட்டினால் லுதான்றிய நிழற்சுவடும் அத்தோடுமாக இவ் இனங்கூறிய உருளை நான்கினையுடைய உனதுமுகமாகியதேர் கிடைத்தபடியினாலோ-சந்திர சூரியர் என்னும் இருசுடராகிய இரண்டு உருளையைப்பூண்ட ஒன்றுபட்டிருக்கின்ற நல்லபூமி வட்டமாகிய திண்ணிய தேரையுடையபாகனென்னுஞ் சங்கரனை இக்காலத்தில் பொருது மன்மதன் தன்னை நெற்றிக்கண்ணால் எரித்த பழையபகையைத் தீரப்பெற்றான்-எ-று. ❖ சங்கரர்திரிபுரத்தை எரிக்கப் போம்பொழுது இருசுடரை உருளையாகப் பூட்டிப்பூமியைத்தேராகப்பண்ணி நடத்தலால்-ஏகநன்புடவி வட்டத்திருசுடராழித் திண்டேர்ப்பாகர் என்றும், கபோலங் கண்ணா

டிபோலிருந்து தோட்டிணிழலைக் காட்டலால்-கபோலஞ்சார்ந்த துணை நிழற் சுவடு என்றும்,கூறினர்.—இதனுள் தோடும் தோட்டிணிழலும் முகமும் முகமேற்கவித்தமுடியும் தேர்போலிருத்தலின் அதனைத்தேராக உருவகஞ்செய்து அதனை ஏதுவாகஎடுத்து உரைத்தமையால், உருவகவேது என்னும் அலங்காரங்காண்க. (௫௮)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வேரிநாண்மலர்க்குள் வாணிவிலையில் பாடலமுதெலாஞ், சேரமாமடந்தை நின்செவிக்குணவருத்தவே, யாரமாலை மூடியசைப்பவாடியெற்றுகுண்டலம்,பூணாபூணா யென்றசொற்பொலிந்தவோசைபெற்றதே. *

இ-ள். பெருமையோடும்கூடியமடந்தைப்பருவத்தையுடையவளே. நறுநாற்றத்தையுடைய நாட்கொண்டவிழ்ந்த தாமரைமலரின்கணுள்ளகலைமகளானவள் தன்னுடைய விலையில்லாத பாடலாகிய அமுதமெல்லாம் ஒருமிக்க நின்செவிக்கு உணவாக ஊட்ட அதனால் முத்துமாலையையுடைய உன்முடி அசைப்ப அதனால் ஒன்றோடு ஒன்று தாக்கிய குண்டலங்கள் பூணாபூணாஎன்றசொற்போலப்பொலிந்த ஓசையைப் பெற்றது - எ - று.

* மாமடந்தைஎன்பதற்குமாமரத்தின்கீழ்

இருக்கும் மடந்தையென்று பொருள் உரைப்பினும், பூஹாபூஹாயென்ற சொற்பொலித்த வோசைபெற்றது என்பதற்குப் பூஹாபூஹா என்றசொல்லாகிய பொலிந்தவோசையைப்பெற்றதுஎன்று பொருளுரைப்பினும், அமையும்.—ஆரமலைகழுத்தனதாகஇருப்ப, முடியினதாகக்கூறியது-கழுத்தோடுகூடி முடியசைத்தலால்என்க.— பூஹாபூஹா என்பது-போதும்போதும்என்பதாம்.—சேர என்பது-ஒருமிக்க என்பதாம். "மறைவழியொழுகாமன்னவன்வாழும், பழிநாட்டார்ந்த பாவம்போலச், சேரமறைத்த கூரிருண்டுநாள்,, என்றார் பிறரும்.—குவ்வென்னும் நான்கனுருபை எழனுருபாகக் கொள்க.—இதனுள் தற்குறிப்பேற்றம்என்னும்அலங்காரம் காண்க. [இவ்விரண்டுகவியும் காதின்வர்ணனைகூறின] (ருக)

இமயமன்னன்மரபில்வெற்றியிடுபதாகையனையவென், னமலையுன்றன்வதன துண்டவணிசிறந்த மணியையோ, விமலமன்று கவிஞர்முத்தைவெற்பில்வல்லியலர்வதோர், கமலமன்று குமிழளித்தல் கண்டதல்லவென்பதே. *

இ-ள். இமயமலையரசனுடைய மரபில்வெற்றி எழுதியகொடிபோன்ற என்னுடையஅ

மலையே. உன்னுடையமுகத்திலேதோன்றிய மூக்கிலே அணியாகச்சிறந்த மணிமுத்தானது-மனத்தில் அழுக்கின்மையுடையபெரியோர்கள் மலையில்இருக்கின்ற வல்லி அலர்வதாகிய ஓர்கமலமலரிடத்து நிலைபெற்ற குமிழம்பூவானது முத்தினை ஈனுதல் உலகத்தில்கண்டதல்லஎன்று சொல்வது - எ - று. ※முகத்தையும் முகத்தின்மேல் இருக்கின்ற மூக்கையும் கமலமலரும் கமலமலர்மேல்இருக்கின்றகுமிழம்பூவுமாகக்கூறினார்.—ஒகாரம்-வினா.—இதனுள் பொருளதிசயம் என்னும் அலங்காரங்காண்க. [இது மூக்கின்வர்ணனைகூறியது] (௬௰)

இறைவி நின்னிதழ்ச்சி வப்பியற்கை யித்தொடிணைசொலு, மிறைகொள்கொவ்வையிற்றிறத்தி னீழல்பெற்று விம்பமா, யுறைதல்கொண்டுநானுபற்றொரு ருவமையில்லை யுண்டெனு வறைகடற்று கிர்ப்பழுக்கி னன்று சொல்வனவியனே. ※

இ-ள். உலகுக்கெல்லாம்இறைவியே நின்னுடையவாயிதழினுடையசிவப்பு இயற்கையாதலினால் இவ்விதமுடன்பருவத்தினால்வரும் சிவப்பைச் செயற்கையாயுடைய கொவ்வைப்பழத்தை ஒப்பாகச்சொன்னால், முதிர்ச்சியைக்கொண்ட அக்கொவ்வையானது இ

வ்விதழினுடையநிறத்தின் ஒளிபெற்று விம்பமென்னும்பெயரையுடைத்தாய்த்தான் உறைதலை உட்கொண்டு நாளும். அஃது அப்படியாகலால் உலகினிடத்து வேறொரு உவமை அதற்கு இல்லை. திரை ஒன்றோடொன்று அறைகின்ற கடலினிடத்துள்ள பவளமானது பழங்களைப் பழுக்கில், அன்றைக்கு உவமை உண்டென்றுசொல்வேன் அலியன்-எ-று. ✻ உறைதல்கண்டுநாளும் என்றுபாடம் உரைப்பாரும் உளர் —ஓர்பொருளினதுகாந்தி ஓர்பொருளில்வந்து பத்திபாய்தலை விம்பமென்பர் அதனால்-விம்பமாய்என்றும், கொவ்வைப்பழம் தலைகீழிட்டிருத்தலால் நாணும் என்றும், கூறினர்.—பவளம் பழுப்பதின்மையால், உவமை எக்காலத்தும் இல்லை என்பதுபெறப்பட்டது.—இதனுள் பழுக்குஞ்செயலில்லாத பவளக்கொடி ஒருகாலத்திற் பழுக்குமாயின் அப்பழத்தை அப்பொழுது ஒப்பாகச்சொல்வேன் என்றமையால், அற்புதவுவமை என்னும் அலங்காரம் காண்க. [இது இதழின்வர்ணனைகூறியது]

அன்புமுற்றிவடிவாயவம்மைதினதானனத்துமதிநகைநிலா, நன்புறத்தமுத மொழுகுமாமதுரநறைகொள்சீதளமயின்றவா, யின்புளிப்பலது வட்டுறுதினிய னத்தெவிட்

டியசகோரம்வான், முன்பரப்புநிலவுண்ணு
மாலுனதுமூரலுக்குநிகர்மூரலே. *

இ-ள். அன்பானது முதிர்ந்து ஓர்வடிவா
கியதாயே. உனது முகமாகிய மதியின்கண்
இருக்கின்ற நகையிலேபிறந்தநிலாவினிடத்
து ஒழுகாநின்ற அமுதத்திலே மிக்க மதுர
த்தையும் மணத்தையும் உட்கொண்டசீதள
த்தையும் உண்ட நம்முடையவாய் இனிஇன்
புளிப்பை உண்டாலல்லது உவட்டாதெனத்
தெவிட்டும்படி சகோரப்புட்கள் வானில்
இருந்து முன்னுகப் பரப்புகின்ற சந்திரனு
டைய நிலவை உண்ணும். அதனால் உன்னு
டையமூரலுக்கு வேறொன்றும் ஒப்பின்மை
யால் அம்மூரலேநிகர்-எ-று- ☼ தெவிட்டி
ய என்பது-செய்யிய என்னும் வினையெச்ச
ம்.—நன் என்பது-புறத்துக்கு அடையாக நி
ன்றது.— நகைநிலவை உண்டசகோரப்புட்க
ளுக்கு வானிடத்து மதிநிலவானது தித்தித்த
புளிப்பாய் இருத்தலால், தெவிட்டும்படி ச
கோரம் வான்முன்பரப்புநிலவுண்ணும் என்
றார்.— இதனுள் முகமதியில் இருக்கின்ற ந
கைநிலாவாகியபொருள் வான்மதியில்இருக்
கும் நிலவினும்மேம்பட்டதென்று உவமை
கூறி மறுத்து அப்பொருடனையேஉவமை
யாக உரைத்தமையால், பொதுநீங்குவமை

என்னும் அலங்காரம் காண்க. [இது நகை யின் வர்ணனை கூறியது.] (சுஉ)

வின்னநாவுறை யெழுந்தொறுந்தலைவர் வீ ரமும்புகழுமழகுமே, சொன்னபாடன்மது ரம்பழுத்தனைய செய்யகேழொளி வனப்பி னு, லன்னமாமலரை விட்டுவாணியுன தரு ணநாவுறையவெள்ளையா, யுள்ளமேனியுமெ னம்மைநீயருள வுன்னிறம்பெறுவ தொத்த தே. *

இ-ள். என்னுடைய தாயே. மொழிக ளை மொழியும்படிக்கு உன்னுடைய நா உ றையெழுந்தோறும் உன்தலைவராகிய சங்க ரருடைய வீரமும் புகழும் அழகுமே சொல்லும் பாடலினது மதுரம்பழுத்தா ற்போன்ற சிவந்த நிறத்தின் ஒளிவனப்பி னாலே சேற்றிற்பிறந்த பெரிய வெண்டாம ரைமலரைவிட்டுக் கலைமகளானவள் உன்னு டைய சிவந்த நாவின்கண் உறைய அவளு டைய வெள்ளையாயுள்ளமேனியும் நீ அருளு தலினாலே உன்னுடையமெய்யின் நிறத்தைப் பெறுவதாகிய மாணிக்க நிறத்தை ஒத்தது-எ-று. * சொன்னதல்-ஈண்டுச்சொல்லுதல் என நின்றது —பாடலினது வனப்பினால் எ னக்கூட்டுக.—நாவினுடைய சிவப்பு நிறம் வெள்ளையேனியிற் பரத்தலால், உன்னிறம்

பெ்றுவதொத்ததுஎன்றார்.—ஏகாரம்- தேற்றம்.—இதனுள் அதிசயவுவமைஎன்னும் அலங்காரங்காண்க. (௯௩)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அற்றையருட்சிவசேடஞ்சண்டனுண வதுபொருதாவறீரக், கற்றைமலர்க்குழலுமைநின்கருப்பூரசகலமதிச்சகலம்போல, வுற்றதிருத்தம்பலத்தி னொருசகலமேனு மினி துண்டுவாழப், பெற்றிலரோலமரனொனும்பெயர்பெறவு மிருந்தனரோ பிழைப்பில் விண்ணோர் *

இ-ள்- கற்றையாகஇருக்கின்ற மலர்பொருந்தியகுழலையுடைய உமையே - அருளையுடைய சிவன் நாடோறும் உண்டு மிகுந்தசேடத்தைச்சண்டேசுரன்உண்ண; அதனைமனத்தில்பொருத ஆவல் தீரும்படிக்கு- மதித்துண்டம்போலக்கருப்பூரத்துண்டமுற்ற அழகையுடைய உனதுதம்பலத்தில் பொருந்திய ஒருதுண்டமாயினும் இனிதாக உண்டுவாழப்பெற்றிலராகல், அமரனென்றுசொல்லும் பெயரைப்பெறவும் இருந்தனரோ- இக்காலத்திற் சாதல் இல்லாத விண்ணோர் - எ-று-

இக்காலத்தில் சாதல்இல்லாதவிண்ணோர் எனவே முற்காலத்திற் சாதலையுடைய விண்ணோர் எனவாயிற்று.—அமரனென்னும்பெ

யர்பெறவு மிருந்தனரோ வென்பதனால் அக்காலமென்பது வருவிக்கப்பட்டது.— கற்றைஎன்பதனை மலருக்கு அடையாகக்கொள்ளாமல் குழலுக்கு அடையாகக்கொள்க.— தாம்பூலமென்னும்வடமொழி - தமிழ்மொழியாய்த் தம்பலமெனத் திரிந்தது. " ஊருணிமையாத்தபொதுவாய்த்தம்பலம்,, என்றார் பிறரும்.—மரிப்பில்லாதவர்க்கு அமரரென்னும்பெயராகலால்,அமரரென்னும்பெயர்பெறவுமிருந்தனரோ என்றார். —சகலம்-துண்டம்.— அன்றுஎன்பது-பதப்புணர்ச்சியின்கண் அற்றைஎனலாய்ஈண்டுநாடோறும்என்று பொருள்கொள நின்றது.— பொருத ஆவல்-பொருதாவலெனக்கடைக்குறை விகாரமாயிற்று.—உம்மைகள் இரண்டும்-சிறப்பு. ஓகாரம்-எதிர்மறை.— இதனுள் பண்புவமை என்னும் அலங்காரமும் பொருளேது என்னும் அலங்காரமும்காண்க. (௬௬)

பசுத்தமலர்க் கொடிகருணை பழுத்தனைய
கொம்பேநின்பரமர்பொற்றேன், விசைத்
தொழிலைக்கலைவாணி தனிற்பாடிப் பாடியவ
ண்மெலிவதல்லா, லசைத்திலர்பொன்முடியு
ணதுமதுரமொழிக்கசைத்தனரொன் றதற்கு
நாணி, யிசைத்தொழிலைக்கைவிட்டாளெழி
ல்வீணையுறையிலிட்டாளேதுசெய்வாள் *

இ-ள். மலையரையனுடையபசுமைபெற்றகொடிபோல்பவளே. கருணையைப்பழமாகப் பழுத்ததுபோன்றகொம்புபோல்பவளே - திண்பரமருடையபொலிவுபெற்ற தோள்செய்தவிசயத்தொழிலைக் கலைகளையுடைய வாணியானவள்தன்னிலேபாடிப்பாடிஅங்குமெலிவதேயல்லாமல், பொன்முடியைஒருக்காலும் அசைத்திலர்.அவ்வாறுபாடினதும்அன்றுநினதுமதுரமொழிக்கேஅசைத்தனரொன்று அதற்குஅவள் நாணத்தைஅடைந்து இசைத்தொழிலைமெல்லக்கழியவிட்டாள். எழிலையுடைய வீணையைக் கழற்றியிருந்த உறையில் இட்டாள். இதற்கு ஏதுசெய்வாள் - எ-று.

மதுரமொழியாவது-வாணிபாடும்பாட்டைக்கேட்டு நன்றுயிற்று என்னும்மொழி. பழுத்த அனையளென்பது பழுத்தனையளெனக் கடைக்குறைந்துநின்றது.—“ஐயுங்கண்ணுமல்லாப்பொருள்வயின், மெய்யுருபு தொகாவிறுதியான,, என்பதுகொண்டு முடி என்னும் இறுதியின்கண் இரண்டாம் வேற்றுமையாகலால் தொகைப்பட்டு நின்றது.—இதனுள் துணிவதிசயம்என்னும்அலங்காரம் காண்க. [இம்மூன்றுகவியும் வாயின்வர்ணனைகூறின.] (௫௰)

<u>மகவாசை யாலிமய மலையரையன் மலர்க்</u>

கைதொடமனத்துளன்பு, புகவாசை யாலி
றைவன்கரத்தேந்தப்பொலிவுறுநின்சிபுகம்
போற்றின், முகவாசியரன்படிமக் கலம்பார்
க்கவிட்டமுகிழ்க்காம்புபோலுஞ், சகவாழ்
வையிகழ்ந்திதயந் தனித்தவர்தந் தவக்கொ
ழுந்துதழைத்தகொம்பே. *

இ-ள். உலகவாழ்வைநிந்தித்து ஒருமித்த மனத்தையுடையவர்செய்யும்தவமாகியகொழுந்துபடர்ந்து தழைத்த கொம்புபோன்றவளே. மகவாசையினாலே முத்தங்கொள்ளும்படிக்கு இமயமலையரசன் மலர்போலுந் தன்கையால்தொட-உன்மேல்வைத்த அன்பு தம்முடையமனத்துட்புக அதரபானஞ்செய்யவேண்டும் ஆசையினால் இறைவராகிய பரமர்கரத்தால்ஏந்தப்- பொலிவுறுகின்ற நின்சிபுகத்தைப்புகழ்ந்துசொல்லின், அப்பரமர் தமது முகச்செவ்வியைக் கண்ணாடியிற் பார்க்கும்படி அதற்கு முகிழாக இட்டகாம்புபோலும்-எ-று. ※ மலையரசன்மலைபருவமாகஇருக்கவே கைவருவித்துச் சொல்லவேண்டியதனால், கைக்குமலர் உவமையாய்நின்றது. “திகழ்மணிக்கோபுரந் திங்கள்வாண்முகம்” என்றார்பிறரும்.— தவஞ்செய்தற்கு இடையூறுவாராமல்காத்து நிறைவேற்றலால், சகவாழ்வையிகழ்ந்திதயந்தனித்தவர்தந்

தவக்கொழுந்துதழைத்தகொம்பேஎன்றார். இதனுள் ஒருவயிற்போலியுவமை என்னும் அலங்காரம்காண்க. [இது சிபுகவர்ணனை கூறியது.] (௬௬)

வயங்குறுநின் றாளவடமான்மதச்சேற ளையமதுமத்தர்மேனி, முயங்குதொறுமெழுபுளகமுட்பொதிந்த பசுங்கழுத்துமுகமுங்கண்டா, லியங்குபுனற் கருஞ்சேற்றி னெழும்வலயமுள்ளரைத்தாளின்றகஞ்சம், பயம்புகுதல் கடனன்றோ மாற்றிலாப் பசுமையொளிபழுத்தபொன்னே. ※

இ-ள். மாற்றுஇத்துணையென்னும்அளவில்லாதபசுமையொளியைப் பழமாகப்பழுத்தபொன்போன்றவளே. ஒளிர்கின்ற நின்னுடையமுத்துவடமானது கழுத்தினும் முலையினும், பூசிய மான்மதமாகிய சேற்றிலேபுரள மதுமத்தராகிய உன்கணவருடையமெய்யைமுயங்கும்தோறும் எழாநின்ற புளகத்தினால் உரோமச்சிலிர்ப்பாகிய முட்செறிந்த பச்சென்றகழுத்தும் அதன்மேல் இருக்கின்றமுகமும் கண்டால்,இயங்கும் புனலோடுங்கூடிய கரியசேற்றிலேபுரண்டெழும் வெள்ளிய வலயத்தையும் முள்ளை அரையிலேயுடையதாளையும் ஈன்றதாமரையானது - அச்சத்தை அடைதல் கடனன்றோ. கடனும்-

எ-று. ஃஃ முத்துவடமும் மான்மதச்சேறு
ம் உரோமச்சிலிர்ப்பும் கழுத்தும் முகமும்
என்பனவற்றிற்குமாறுபாடாக, முறையே வ
லயமும் கருஞ்சேறும் முள்ளும் தாளும் பூ
வும் வருவித்துக்கூறினர்.— பயம்புகுதல்
என்பதனால் நீரின்கட்புகுதல்என அதன்றன்
மைத்தொழில் கூறியவாறுங் கொள்க.—ஓ
காரம்-எதிர்மறை.—இதனுள் தாமரையைச்
சிறுமைப்படுத்தித் தாமரைக்கு ஒப்புடைத்
தாகிய முகத்தைச் சாதியினற் பெருமைப்ப
டுத்திக்கூறியதனால், சாதிவேற்றுமைஎன்னு
ம் அலங்காரம்காண்க. (௬௭)

செந்திருநின் றிருமணத்திற் சேர்ந்தசர
மூன்றழுந்தித்திகழ்வதென்கோ, மந்தரமத்
திமதாரமூவகைநாதமுமெல்லை வகுத்ததெ
ன்கோ, கொந்திரையுந் துணர்ப்பூகங் கொ
ழுத்தபசுங்கழுத்தின்வரைக்குறிகண்மூன்று,
மிந்திரையுஞ்சயமகளுங்கலைமாதும் புகழ்வ
தல்லால் யானென்சொல்வேன். ※

இ-ள். சிவந்த அழகினையுடையவளே. ம
ணத்தினல் வண்டுவந்து ஆரவாரஞ்செய்யும்
பூம்பாளையையுடைய கமுகுபோலுங் கொ
ழுத்தபச்சென்றகழுத்தினிடத்திரேகையாகி
யகுறிகள் மூன்றையும்-உன்னுடைய திரும
ணத்தில் ஒன்றோடொன்றுசேர்ந்த பொற்ச

ரழுன்றும் அழுந்தப்பட்டுத் திகழ்வதென்று சொல்வேனே. அஃதொழிந்து மந்தரம் மத்திமம் தாரம் என்னும் மூவகை ஓசைக்கும் எல்லைவகுத்ததென்று சொல்வேனே. அவற்றை அறிந்து திருமகளும் சயமகளும் கலைமகளும் இன்னதென்று புகழ்வதல்லாமல் யான் ஏதென்றுசொல்வேன்-எ-று. ❁ உத்தரபூமியிலே மணஞ்செய்யும்பொழுது மூன்றுபொற்கயிற்றிலுல்செய்த ஓரணி கழுத்திற்பூட்டுவார்கள். அதுபற்றித்- திருமணத்திற்சேர்ந்தசரழுன்றழுந்தித்திகழ்வதென்கோ என்றும், தேவி சங்கீதவித்தையிலே வல்லவள் ஆதலால் அது எல்லாம் இம்மூன்றிசையிலே நடப்பதுசருதி - மந்தர மத்திம தார மூவகை நாதமுமெல்லை வகுத்ததென்கோ என்றும், கூறினர்.—ஓகாரங்கள்-வினா. இதனுள் தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரங்காண்க-[இவ்விரண்டுகவியும் கழுத்தின்வர்ணனை கூறின.] (௬அ)

முன்னமொருதலைசினவுன் முதல்வரா விழந்தவயன்முகங்களுன்கா, லுன்னமழகுக்கேற்றபசுங்கழைமணித்தோளொருநான்கும் வழுத்துகின்ற, ன்னமொருசீற்றமெழுந் தரிதலையை யெனினு மிவட்டமென்றேளேச், சொன்னதலைக் கழிவிலையென் றதிர்றுணிந்த துணிவன்றே சுருதியாழ்வே ❋

இ-ள். சுருதியில்வாழ்கின்றவளே. உன்னுடையமுதல்வரிடத்து இன்னும் ஒருக்கால் சினமெழுந்து அரிந்து விடுதலையை என்று சொல்லினும் இவளுடைய பெரியமெலலிய தோளைப்புகழ்ந்துசொன்னதலைக்கு அழிவில்லையென்று அப்பயத்தினின்றுந் துணிந்த துணிவினால்,தன் மேலேசினந்தஅம்முதல்வராலேமுற்காலத்தில் ஒருதலையைஇழந்தஅயனானவன்-தன்னுடைய முகங்கள் நான்கினும் உன்னுடைய அழகுக்குஎற்றபசுங்கழைபோலும் அழகையுடைய தோள் ஒருநான்கும் வழுத்துகின்றான்-எ-று. ※ பிறஉறுப்புக்கள் எல்லாம்இருக்கத் தோள்களை வழுத்துவது அபயத்தைத்தருவதனால்.— மூன்றாம்வேற்றுமை - விகாரத்தாற்றொக்கது.—உம்மை-எதிர்மறை —அன்றும் ஓவும்-அசை.—இதனுள் குணவேதுஎன்னும் அலங்காரம் காண்க. [இதுதோளின்வர்ணனைகூறியது.](௬௯)

திருமகடன்சீறடியாற் றுவண்டுமதிற்செம்பஞ்சாற்செங்கேழ்பெற்று, மருமுளரியெழில்படைத்ததிதுவோநம்பியற்கையெதிர்மலர்வதென்றே, யிருகரமுநகைத்தநகையொளியையுனதெழிலுமொன்றிறைஞ்சிநாளு, மருமறைகள் வழுத்துகின்ற ததிசயமோ பேதைமையோவன்போவம்மே. ※

இ-ள். தாயே. திருமகளுடையசிறியஅடியினால் துவண்டும் அவ்வடியில்சூட்டிய செம்பஞ்சினால் சிவந்தநிறத்தைப்பெற்றும் இக்காரணங்கொண்டு மணத்தையுடைய தாமரை அழகு படைத்தது இதுவோ நம்மியற்கை அழகெதிரோநின்று மலர்வதென்றுநோக்கி உன்னுடையஇரண்டுகைகளும் நகைத்த நகையைஉன்று அழகிய நகமென்றுவணங்கி நாடோறும் அரியவேதங்கள் வழுத்துகின்ற அதிசயத்தினாலோ பேதைமையினாலோ அன்பினாலோ எனக்கு அறியப்படுவதில்லை நீ சொல்வாயாக. எ-று. ※ இதுவோவென்பதனுள் ஓகாரம்-மந்தாரமலர் பாரிசாதமலர் முதலாகியமலரினின்றும்பிரிக்கப்பட்டு இழிவுதோன்றநின்றதனால், பிரிநிலை—ஒழிந்த ஓகாரங்கள்-வினா.—இதனால் நகங்கள் விளங்குதலாகிய இயல்பினையொழித்து அவைநகைத்த நகைஎன்றுகவிகருதிய அதன்மேல் ஏற்றிக்கூறுதலானும், நகமல்ல என்று உண்மைமையைமறுத்தலானும், தற்குறிப்பேற்ற வவநுதி என்னும் அலங்காரங்காண்க. [இது கையின்வர்ணனைகூறியது.] (௭௰)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நித்தரொருபக்கமயி னிற்களிறுன்வட்ட
முலை நிற்குமெழிலிற்றனதுசீர், மத்தகமெ

ணத்தனில யிர்த்தொருக ரத்தைமுடி வைத்
துறவுறத்தடவுமான், முத்தமுலை செப்புவ
தெனக்களிறு பிற்குமரன் முற்புதல்வர் து
ய்த்தவமுதா, லத்தலைமை பெற்றனர திற்றி
வலைகிட்டினுமெனற்பவுயிர்முத்திபெறுமே.

இ-ள். நித்தருடைய ஓர்பக்கத்தில் இருக்கின்றமயில்போன்றவளே. உன்னுடையவைமந்தனாகிய களிற்றுமுகத்தையுடையவன் நின்னுடையவட்டமுலை இறுமாந்துநிற்கும் அழகினாலே தனதுஅழகிய மத்தகம் உன்மார்பிலேவந்ததோஎன்று தன்னிலேஐயுற்று ஒப்பற்ற புழைக்கையைத் தன்முடிமேலேவைத்து உறவுறத்தடவும்அதனால் முத்துவடத்தையுடைய முலை எழுச்சியை ஒருவர் புகழ்ந்து எவ்வாறுமுடிவது அக்களிற்றுமுகனும் பின்பிறந்த குமரனுமாகிய புதல்வர் முற்காலத்திலே உண்ட அமுதமயமாய் இருக்கின்றபாலினாலே எக்காலமும் பிள்ளையார்என்றுசொல்லும் அத்தலைமையைப்பெற்றனர். அதிலே ஓர்திவலைகிட்டினும் என்சிறிய உயிர் முத்தியைப்பெறும்-எ-று. ஃ உம்மை-சிறப்பு.—ஆல் - அசை.—இதனுள் திரிபதிசயம் என்னும் அலங்காரங்காண்க. (எக)

முக்கணிறை வற்குமயன் முற்றவெழின்
மூற்றுமுலைமுட்டியசுரப்பொழுகுபான், ம

க்கவிருவர்க்கருளவக்களிறுமிக்குகனு மட்டி
ளமைமுற்றாகிலரா, லக்கடலுதித்தவமு தத்
தினையெடுத்ததிலடைத்திருகண் முத்திரையி
ன்வாழ், செக்கர்மணி மெய்க்கலச மத்தனை
யுன்வட்டமுலைசெப்பலமலைப்புதல்வியே. *

இ-ள். மலையரசன்புதல்வியே. மூன்றுகண்ணினையுடையஇறைவனுக்கு ஆசை மயக்கம் முதிர அழகு முதிரும் உன்னுடைய முலையினிடத்துநிறைந்த சுரப்பின்றும் ஒழுகா நின்ற பாலை மக்களாகிய இருவர்க்கும் கொடுக்க, அக்களிற்றுமுகனும் இக்குகனும் மட்டுப்பட்ட இளமைநீங்கி முற்றாகிலர். அதனால் பாற்கடல் உதித்த அமுதத்தினை எடுத்து அதனுள்ளே அடைத்து இருகண்ணாகிய முத்திரையினால் அழியாமல்வாழப்பட்ட சிவப்பையுடைய மாணிக்கக்கலசமுமூதும் உன்னுடையவட்டமுலை. அதனை யாவரும்செப்பென்றுசொல்வதன்று-எ-று. * மெய்-கலசத்துக்குஅடையாய்நின்றது.—உம்மை எஞ்சிநின்றது.— அகர இகரச் சுட்டுக்கண் முறையே முற்பிறப்பையும் பிற்பிறப்பையும் உணர்த்தின.—மற்று ஓரகரச்சுட்டு-உவர்க்கடலை ஒழிக்கநின்றது.—முலையின் கண்ணிருப்பதுகருதி-இருகண்முத்திரையில்வாழ் செக்கர்மணி மெய்க்கலசம்என்றும்,குழ

ந்தைப்பருவநீக்கவேண்டி - மட்டிளமைஎன்றும், கூறினர் — இதனுள் தற்குறிப்பேற்ற வவநுதிஎன்னும அலங்காரம் தோன்றுகின்றது. (எஉ)

கொற்றவாரணமுகம கன்பொரு குஞ்சரானனநிருதஞெ, ரிற்றகோடுதி ராரமாலிகையிதழ்மணிப்ரபை தழையவே, பெற்றபாகபிஞகபாணிப்ரதாபமோடணைபுகழெஞ, வுற்றதாயினு முனதுபொற்றன முளைபடாநிறைசெல்வியே. *

இ-ள். நிறைந்த செல்வத்தை யுடையவளே- கொற்றத்தையுடைய யானைமுகஞகிய உன்னுடையமகன்சென்று நெருக்கிப் பொரப்பட்ட கயமுகாசுரனுடைய ஒடியப்பட்ட கோடானது உதிர்த்த முத்திஞல்செய்த உனதுமார்பில்தங்கும் மாலையினிடத்து வாயின்இதழாகிய மாணிக்கஒளிவந்து தழையவே, அச்சிவப்பும் வெளுப்பும் உன்னைப்பாகத்திலேபெற்ற பிஞகபாணியினுடைய பிரதாபமுடன் புகழென உற்றதஞல் இத்தன்மையையுடையதென்று சொல்வதாயினும் உனது பொலிவுபெற்ற முலையின் வளமை சொல்லமுடியாது-எ-று. ※ கயமுகாசுரனுடைய கோடு ஒடியும்படி போர்செய்து அக்கோடு உதிர்த்த முத்திஞல் மாலைசெய்

நூவிநாயகனாற் றரப்பட்டுப் புனைந்த மாலை என்க.—பிரதாபம் சிவப்பு புகழ் வெளுப் பென்பதனால்-பிரதாபமோடணைபுகழென வுற்றது என்றார்.—உம்மை - சிறப்பு.—இத னுள் தற்குறிப்பேற்றமென்னும் அலங்கார ம் காண்க. (எ௩)

தருணமங்கலையுன்றுசிந்தை தழைந்தபா லமுதூறிநு, லருணகொங்கை யிலது பெரு ங்கவி யலைநெடுங்கடலாகுமே, வருணநன் குறுகவுணியன்சிறுமதலையம்புயல்பருகியே பொருணயம்பெறு கவிதையென்றொரு பு னிதமாரிபொழிந்ததே. *

இ-ள். இளமையாகிய மங்கலத்தை யுடை யவளே. சாதிநன்மைஉற்ற கவுணியகோத்தி ரத்தையுடைய சம்பந்தனென்று சொல்லப் பட்ட சிறியமதலையாகிய அழகியமேகம் உ ண்டு பொருணயம்பெற்ற கவிதையென்று ஒப்பற்றதூய்மைபொருந்திய மாரியை உல கத்தின்கட்பொழிந்தது அதனால்நின்னுடை யசிந்தையினிடத்து நிரம்பியபாலாகிய அமு துவந்தூறில், சிவப்பையுடைய உன் கொங் கையினிடத்தே அது பெருங்கவியாகிய அ லையையுடைய கடலாமோ. நீசொல்வாயாக. எ-று- * புயல்பருகுவது கடலினிடத்தாக லால்-கடலாமோஎன்றும், தேவாரமென்னு

ம்பாட்டையாவரும்கற்கலுதியவதனால்-பொருணயம்பெறு கவிதையென்றொரு புனித மாரி பொழிந்ததுஎன்றும், கூறினர்.—ஓகாரம்-வினா.—இதனுள் அதிசயம்பற்றிய சிறப்புருவக மென்னும் அலங்காரம் காண்க. [இந்நான்குகவியும் மூலையின் வர்ணனை கூறின.] (எச)

மூலமே மதின் மகிழ்நர் கோப மூதுகனந் பொருதுமேவன், கோலநாபி மடுவினிற்கு ளிப்பவந்தவெம்மையான், மேலவாவுதூமரே கை வேறெழுங்கொழுந்தையோ, நீலரோம ரேகையென்று நீணிலங்குறிப்பதே- *

இ-ள். எல்லாப்பொருட்கும் ஆதியாய் இருக்கின்றவனே. நின்னுடையகணவரதுகோபமாகிய பெரியகனலைப் பொறுக்கமாட்டாமல்-காமனெனவன் உன்னுடைய அழகுபொருந்தியநாபியாகிய மடுவில்விழுந்து குளிப்ப அப்பொழுது வெதும்பியவெம்மையினால் மேற்கொள்ளுந் தூமரேகையினது வேருன்றி எழுங்கொழுந்தைத்தானே நீநிறத்தை உடைய உரோமரேகைஎன்று நீண்டநிலத்திலுள்ளார் குறித்துச்சொல்வது. எ-று. * மேலஎன்பதனுள் அகாரம் சாரியை.—ஓகாரம்-வினா.—இதனுள் தற்குறிப்பேற்றவவுதியென்னும் அலங்காரம்காண்க. (எரு)

முளரிமாதுன் முலையிரேேடு முலைநெருக்கவிடையில்வான், வெளியினீலமோடியந்தி வியன்முழைக்குணுழையவே, தெளியநீரில் யமுனைநீவுசிறுதரங்கமனையபே,ரொளியின் ஞானமருளுமீதுரோமரோகை யென்னவே

இ-ள். தாமரையில்இருக்கின்றமாதே உன்னுடைய முலையினுேமுலைநெருக்கு நெருக்குண்டு அவற்றிற்கு நடுவேநின்ற ஆகாயமானது வெளியின்வழியே நீலநிறமாக ஓடி உனது உந்தியாகியவிரிவையுடைய முழையிலிடத்து உள்ளாக நுழைந்து மறைய யமுனையாற்றில் தெளிந்தநீரிலே நீவுகின்ற நேரியதரங்கம்போன்ற அதனுடைய பெரிய ஒளியினுல் உலகம் உரோமரோகைஎன்று மருளும்-எ-று. ஞாலமென்பது - ஆகுபெயராய ஞாலத்துவாழும் உயிரெனவாம்.— நெருக்குண்டபடியினுல் ஆகாயம் நீலநிறமாயிற்று.— நான்கனுருபை எழனுருபாகக் கொள்க.—இதனுள் மேற்கவியுள் தோன்றிய அலங்காரமேகாண்க. [இவ்விரண்டுபாட்டும் உரோமரோகையின் வர்ணனைகூறின.

தூயகங்கைநிலைபடைத்த சுழிதனத்துமுகையினு, லாயதுங்கரோமவல்லியாலவாலமிரகவே, யெருரும்புமோமகுண்டமிறைவர் செக்கண்விடா, மேயகஞ்சமடுவுனுந்

திவேறுரைத்தென் விமலையே. ✻

இ-ள். விமலையே. உன்னுடைய உந்தியானது தூயகங்கையாறு ஒருபொழுதுநீங்காமல் நிலையாகப்படைத்தசுழி - அதுவுமன்றி முலையாகியமுகையைத்தாங்க வேண்டுவதனால் பிறந்த உரோமமாகிய வல்லிவளரும் பாத்தி- அதுவுமன்றி எல்லார்க்கும்விரகத்தைத் தரும் காமனுடைய தீ அரும்பும் ஓமகுண்டம். அதுவுமன்றி நின்னிறைவராகிய சங்கரருடையசிவந்தகண்ணாகியதாமரை இடைவிடாதுமேவியமடு இவையன்றி வேறென்றாக உரைத்தால், யாது ஒப்புடையது - எ - று. ❁ விரகவேடையரும்பு மோமகுண்டம் என வே-காமன் எல்லாரையும் வெல்வதற்கு ஆகுதிபண்ணும் ஓமகுண்டமாயிற்று.—செய்து என்னும் வாய்பாட்டுவிடாது என்னும் எதிர்மறைவினையெச்சம்விடாஎனக்கடைக்குறைவிகாரமாயது-ஆலவாலம்- பாத்தி.—அத்துச்சாரியை-அல்வழிக்கண் வந்தது.—இதனுள் உருவகதீவகம்என்னும் அலங்காரங்காண்க- [இது உந்திவர்ணனைகூறியது.] (௭௭).

தரைமடந்தைபரவுமங்கைதனதடம்பொருதுநின், திருமருங்குலறவளைந்துசிறுகிமுவிரேகையாய், வரைபிளந்தொரிடிகளைக் குள்வாழ்மரத்தொடொத்ததா, லுரைகடந்

துவிடுமுன்மற்றொருறுதிதேடவெண்ணுமே.

இ-ள். நிலமடந்தையானவள் பரவுகின்ற மங்கைப்பருவத்தை யுடையவளே. உன்னுடையகொங்கையைப் பொறுக்கமாட்டாமல் உனது அழகிய மருங்குலானது மிகவளைந்துசிறுகி மூவிரேகைபோல வரைவரையாய்விட்டு ஓர் இடியும் ஆற்றில் கரையின்கண் உள்வாழ்கின்றமரத்தோடு ஒத்ததனல் உனக்கு அழிவில்லை என்னும் உரை இறந்துவிடுமுன் பிறிதோர் உறுதிதேட அஃதெண்ணும்-எ-று. ※ மூவிரேகை-உந்தியின்கீழ் இருக்கும்வரை.—ஓர் கொம்பானது ஒடியவளையுமளவில் அதன் அரையிலே இரேகைஇரேகையாகவிடும் அதனல், மூவிரேகையாய் வரைபிளந்து என்றார்.—நான்கனுருடை எழனுருபாகக்கொள்க.—இதனுள்உவமைத்தற்குறிப்பேற்றம்என்னும்அலங்காரம் காண்க.

வம்பைத் தொலைத்துதறி யிறுகிக்கனத்திளகிவருபுடை நெருக்கி வளர்மாக், கும்பக்கடாக்களிற்றிணையணைய வுனதுமுலைகொடிது கொடிதென்றுவெருவா, வம்பொற்றலிக்கமலவிறைபொறாதிடையெனவழுத்துபூணெணமுனிவரோ, டும்பர்க்குமுளமருள வொளிகெழுமிரேகைமூன் றுலகமோ தெளிவதுமையே. ※

இ-ள். உமையே. இறுகிஅடிகனத்துமேற்கட்டப்பட்டிருக்கின்ற கச்சைத்தொலைத்து அதனை உதறி இளகி அசையும் பக்கங்களைநெருக்கிவளர்கின்ற பெரிய மத்தகத்தையும் மதத்தையுமுடைய களிற்றைப்போன்ற உனதுமுலையைக் கொடியதுகொடியதென்றுவெருவி அழகிய பொன்னிறத்தையுடைய ஒப்பற்றகமலத்தில் இருக்கின்ற இறைபாகிய நான்முகன் இம்முலையை இடைபொறுக்கமாட்டாது என்று அழுத்திய பூணென்றுமுனிவருடன் தேவருக்கும் உள்ள மருட்சியைத்தர ஒளிபொருந்திய மூன்று இரேகையை உலகத்தில் உள்ளாரோ இன்னதென்றுதெளிவது தெளியமாட்டார்-எ-று. ※ அம்பொற்றனிக்கமலையிறைபொறுதிடையென அழுத்துபூண் என்று பாடமாயின், திருமகளானவள் சிறிதுபொழுதும் இடைபொறுது என்று அழுத்திய பூண்என்றுபொருளுரைக்க.- களிறு-தோற்றப்பொலிவினுல்முலைக்கு உவமையாயிற்று. அன்றியும் கும்பக்கடாக்களிற்றினையனையவுனதுமுலைஎன்பதற்குக் கடகளிற்றின்கும்பத்தினையனைய உனதுமுலை என்று மொழிமாற்றிப் பொருளுரைப்பினும் பொருந்தும்.—உம்மை-சிறப்பு.—ஏகாரம் எதிர்மறை.—இதனுள் தொழிலதிசயம் என்

னும் அலங்காரமும் திரிபதிசயம் என்னும் அலங்காரமும் காண்க. [இவ்விரண்டுபாட்டும் இடையின்வர்ணனைகூறின.] (எகூ)

கொத்துவிரி யலர்சோலை யிமயவெற்பரசன்மெய்க்குலமலைப் பக்கமெனவா, ழுத்தனை விரிந்தவகலத்தொடு பெரும்பாரமடையவுனி தம்பவிடையே, யெத்தனைபெரும்புவனமிற்றாலுமழிவிலையிதற்கெனச் சேமநிதிபோல், வைத்ததுபரந்திடங் கொண்டுலகையிடமறவருத்தவோமதுரவமுதே. *

இ-ள். மதுரத்தையுடையஅமுதம்போன்றவளே. கொத்தின்கண்விரிகின்ற அலரைப்பொருந்திய சோலையையுடைய இமயமலையரசனுடம்பாகிய குலமலையினதுபக்கமெனவாழ்கின்ற அவ்வளவுவிரிந்த விரிவுடனேபெரியபாரமுழுதும் உன்னுடைய நிதப்பத்திடத்தே எத்தனைபெரியபுவனங்கள் இற்றழியினும் இதற்குஅழிவில்லைஎன்று சொல்லும்படிக்குச் சேமநிதிபோல வைத்தது - பின்புபரந்து இடங்கொண்டு உலகை இடமற விரிவினாலும் கனத்தினாலும் வருத்துப்படிக்கோ-எ-று. * உம்மை-சிறப்பு.— ஒகாரம்-வினா.—இதனுள் பொருளதிசயம் என்னும் அலங்காரம் காண்க. [இது நிதம்ப வர்ணனைகூறியது.] (அ0)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொற்கதலிபுறங்காட்டுங்குறங்கால் வேழ
ப்புழைக்கைதடிந் துஞ்சிவனைப்பணிந் துதே
ய்ந்த, வற்கடினமுழந்தாளிற் கும்பஞ்சாய்த்
து மணிமருப்பைக்கனதனத்தால் வளைத்து
மம்மே, நிற்கடின கோபமம ராமைகண்
டோ நித்தரதன் றொக்குரித்த துடுத்தநேய
ம், பிற்கருதி யிவளுறுப்போ டுவமை வீறு
பெற்றதிது வென்னுமிந்தப் பெருமைகண்
டோ. *

இ-ள். தாயே. மேருவினிடத்துப் பொ
ன்மயமாய் இருக்கின்ற வாழைஅஞ்சிப் புற
ங்கர்ட்டப்படும் குறங்கினால் யானையினது பு
ழைக்கையைத் தடிந்தும் நின்கணவனாகிய
சிவனைப்பணிந்து தேய்ந்தகடினத்தையுடை
ய வலியமுழந்தாளினால் அதனுடைய மத்த
கத்தைச்சாயச்செய்தும் அடிகனத்தமுலையி
னால் மணியையுடைய அதனமருப்பை வண
ங்கச்செய்தும் அதன்மேல் நின்னுடையகடி
னமாகிய சினம் அமராதிருத்தல்கண்டோ-
நித்தர் அவ்வியானையின்தோலை உரித்துப்பி
ன்கருதி அதன்தோலை மேற்போர்வையாகச்
சூழ்ந்துகொண்டநேயம் இவளுடைய உறு
ப்புடன் தன்னுடைய உறுப்பை உவமையா

உவமிக்கப்படும் உயர்ச்சிபெற்றது இது வென்று பிறர்சொல்லும் இப்பெருமையை க் கண்டோ. எ-று. ❀ பொற்கதலி என்ப தற்குப் பொன்னாற்செய்த கதலி என்று பொருள் உரைப்பினும், அமையும். —உத் தமிகட்கு இயல்பு நித்தமுந் தங்கணவரை ப்பணிதலாதலால்-சிவனைப்பணிந்து என் றும், யானையினதுமத்தகம் கடினமாய் இரு த்தலால் அதனைத்தள்ளி நிற்பதற்கு அதனி னுங்கடினமாய் இருப்பது வேண்டித்- தே யீர்த்தவர்கடின முழந்தாளிற் கும்பஞ்சாய் த்து என்றும், கூறினர் —மதம் மத்தகத் துளிருந்து புறப்படுதலில் - கும்பஞ்சாய்த் து என்றும், மருப்பு வளைந்திருப்பதினால் - வளைத்து என்றும், அவற்றின் றன்மை தமிதா ழிலுங் கூறப்பட்டன.—உடுத்தல்- சூழ்ந்து கொள்ளுதல். “ கருநீர்க்குண்டகமுடுத்த, பெருநீராழித்தொல்லுலகுழிக்கே,, என்று ம்பிறரும்.—ஒகாரங்கள் - வினா.—கேசாதி பாதவர்ணனையாக முறையே கூறுகின்றவர் முலையை ஈண்டெடுத்துக்கூறியது- தேவியு டைய உறுப்புக்கு உவமைப்பட்டிருந்தயா னையினுடைய உறுப்பெல்லாம் சிறுமைப்ப டுத்தவேண்டி.—இதனால் தற்குறிப்பேற்ற ம் என்னும் அலங்காரம்காண்க. [இது கு

றங்கின்வர்ணனையும் முழந்தாள்வர்ணனையும்
கூறியது.] (அக)

உம்பர்தொழுந் தொறுமகுடச் சாணைதீ
ட்டியொளிருநக நுனைக்கணையோ ரைந்து
மைந்துஞ், செம்பொன்மணிக்கணைக்காலா
மிணைப்பொற்றூணி சேர்த்தன்றே சிவன்ப
கைவேடூருகின்ற, னம்பொருபதி தளித்த
னையின்றன்றுபோல வைங்கணைதொட்டழி
யிலதுபழுதென்றன்றே, வம்பமருங்கனத
னப்பொற்றிருவேயுன்றன் மனவிரக்கிஞ்செய
லொருவர்மதிப்பதன்றே. *

இ-ள் கச்சுப்பொருந்துங்கனத்தமுலையை
யும் பொலிவுபெற்ற அழகினையும் உடையா
ளே. தேவர்வந்து தொழுந்தோறும் அவரு
டையமகுடமாகிய சாணையிலேதீட்டி ஒளிரு
கின்ற நகமாகிய நுனையையுடைய அம்புகள்
ஓரைந்தும் ஐந்தும் செம்பொன்போலும்
நிறத்தையுடைய அழகுபொருந்திய உன்க
ணைக்காலாகிய பொன்னாற்செய்த இரண்டு
தூணியின்கண் முறையே சேர்த்துச் சிவ
னிடத்தில் உள்ள பகையைக் காமனுனவன்
றீர அக்காலத்தில் ஐந்தம்பினைத்தொடுத்து
நெற்றிக்கண்ணினுல் அழிந்ததுபோல இக்
காலத்தில் ஐந்தம்பினைத்தொடுத்து அழிவி
ல் அது பழுதென்று பத்தம்பினைக் கொடுத்

தணையாகலால்; உன்னுடைய மனத்திற் கோசரிக்கும் நின்னவின்செயலை ஒருவர் இவ்வளவு என்று மதிப்பதன்று. எ-று. ❁ செம்பொன்மணி-கிண்கிணி - எனினும், அமையும்.—திருகின்றான் என்னும் வினைமுற்றை-வினையெச்சமாக்குக.—இரண்டிடத்தும் அன்றும் ஒவும்-அசை.—இதனுள் இயைபுருவகம் என்னும் அலங்காரமும் மேற்கூறிய கவியினுள்ளேதோன்றிய அலங்காரமும்காண்க. [இதுசணைக்கால்வர்ணனை கூறியது.]

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உளமகிழ்மகிழ்நர்சென்னியுறுநதிவிளக்கமாயோன், கிளர்முடிப்பதுமராகக் கேழொளி செம்பஞ்சேய்க்கு, மளிநின்பதங்கள்வேதமுடியுறப்பதித்ததவ்வாறெளியவென்றலைமேல்வைக்கவிரங்குவதென்றுதாயே.

இ-ள். தாயே. மிக்ககாமத்தை விளைவிக்கவேண்டி நீ ஊடுதலால் உன்மேல் மனமகிழ்ந்திறைஞ்சும் நின்கணவருடைய முடியில் உற்ற கங்கையாறனது கழுவி விளக்க நீ கொடுக்கும் பயன்களினால் இறைஞ்சும் திருமாலுடைய அடுக்கடுக்காகக் கிளர்ந்த முடியில் அழுத்திய மாணிக்க ஒளி நிறமானது ஊட்டிய செம்பஞ்சுக்குழம்பு நிகர்க்கப்படுந் தாமரைபோலும் நின்னுடைய பா

தத்தை வேதம் தனது அந்தத்திலே நீங்கா
மல் பதித்தபடி பதிக்கப்படும் அதனை அவ்
வாறு எளிய என்றலைமேல் வைக்க நீ இரங்
குவது எப்பொழுது. எ-று. ※ இதனுள்
பண்புவமை என்னும் அலங்காரங்காண்க.

அரியமென்காவினீபுக்கசோகினிற் பாத
மேற்ற, வுரியநம்பதத்தையிதோ வுறுமெ
னப்பொருதுபெம்மா, னெரியுற மரத்தை
நோக்கு மியல்பினைக்கேட்டும்யானும், வ
ரிமலர்ப்பாதம்போற்றும் வளமினி தினிது
மாதே. ※

இ-ள். மாதே. கிடைத்தற்கு அரிய மெ
ல்லிய தளிர்களையுடைய உனதுகாவிலேநீபு
குந்து ஓர் அசோகமரத்தின்மேல் உன்பா
தத்தைவைக்க, யான் பெறுதற்கு உரிய பத
த்தை இவ்வசோகமரமோ பெறுமென்று
அதனை மனத்திற்பொறாமல் சிவனானவன் க
ண்ணால் எரியுற அம்மரத்தை நோக்கும் மு
றைமையினைக்கேட்டிருந்தும், யான் வண்
டுகள்பரந்த மலர்போலும் உன்னுடையபா
தத்தைப்புகழும் வளம் இனியது இனியது.
எ-று. ※ இனிதினிது என்பது குறிப்புமொ
ழியாகலால், அது கைப்பது கைப்பதென
வாம்.—வண்டுகள் சிலம்பில் அழுத்திய நீல
மணிக்கு உவமை.—பாதிமுதலாகியபத்து

மரங்களுள் அசோகமரம் நன்மகளிர்பாதம் வைகக மலரோடுகூடிக் கொம்புதாழ்ந்து நிற்றலால், அசோகினிற் பாதமேற்ற என்றார் "நித்திலமுலைபிணர்த நெடுங்கண்ணி னோக்கப்பெற்றுங், கைத்தலந் தீண்டப்பெற்றுங் கனிந்தனமலர்கள்காண, வைத்தவர்கொய்ய த்தாழ்ந்தமரமுயிரில்லையென்பார், பித்தவராயிற்பேய்கமேளன்றலாற்பேசலாமே,, என்றார்பிறரும்.—ஒகாரப்-பிரிநிலை.—உம்மை-சிறப்பு.— இதனுள் தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரம் தோன்றுகின்றது (அசு)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மறுமடந்தையைமொழிய நின்பதமலர்வெகுண்டரனுதலிலோர், முறையறைந்திடவிழியினும்பட முதுபழம்பகை கருதியே, னிறையை வென்றனன் விழியை வென்றனனெனமுழங்கிய குரலென, தறைசிலம்பெழுமரவமென்பதெனருணமங்கல கமலையே.

இ-ள். அருணநிறத்தையும் மங்கலத்தையும் உடையகமலையே. உன்னுடைய கணவனாகிய சிவன் தன்னுடன்நீ ஊடவேண்டி மறு மடந்தையாகிய கங்கையைப்பார்த்துச் சாதமொழியாகமொழிய, அப்பொழுது நின்னுடைய பாததாமரை வெகுளுதலோடு கூடி உனதுஊடலைத் தீர்க்கப்பணிந்து கிட

க்கின்ற அச்சிவனுதலிலே ஓர்முறைஉதைந்தி ட அஃது அந்நெற்றியினுமன்றி அதனில் இருக்கும் கண்ணினும்பட அக்கண்ணினால் எரியுண்டபெரியபழம்பகையைக்கருதி உன் பாதத்தைப்பற்றிஇருக்கின்ற காமனானவன் என்னைவெகுண்டஇறைவனைவென்றேன் என் னை எரித்தவிழியைவென்றேன்என்று முழங் கியகுரலென்றுசொல்லாமல்-பாதத்தில்அடி படும் சிலம்பினின்றும்எழும் ஆரவாரமென் றுயாவரும்சொல்வது-யாதினைக்கருதி-எ-று. ※ உம்மை - இறந்ததுதழீஇயஎச்சவும்மை. இதனுள் தற்குறிப்பேற்ற வணுதி என்னும் அலங்காரம்காண்க. (அரு)

இமநெடுங்கிரியுலவியுங்கவினெழுநிரந்த ரமருமே, லமர்பெருந்திரு வருளுநின்பத வருணமுண்டகமனையதோர், கமலமென்ப துபனியில்வெந்திதழ்கரியகங்குலின் முகுள மாய், விமலபந்திருமனையெனும்பெயர் வி ளைவதொன்றலமுதல்வியே. *

இ-ள். முதல்வியே. நின்னுடைய பாத மாகியசிவப்பையுடையதாமரையானது மே லெங்கும்பரந்துகிடக்கின்றபனித்திவலைகளை யுடைய நெடியகிரியினிடத்து உலவியும், அ ழகுமிகப்படும். அதுவுமன்றி எப்பொழுது ம் அலர்ந்திருக்கும். தன்மேல் அமர்ந்திருக்

கின்றபெரியதிருவை அடியார்க்குக்கொடுக்கும். பாததாமரைக்கு நிகரொன்று இருப்பதாகிய கமலமென்றுசொல்லப்படுவது-பனிபடுவதனால்இதழ்வெந்துகரியஇராப்பொழுது முகுளமாய்த் திருவினுடையமனையென்று சொல்லும்பெயரைத்தரப்படுதலினால், இதுவும்அதுவும் ஒன்றல்ல.வேறுபாடாம்-எ-று.
❁ பாததாமரைதிருவைக்கொடுக்கும் இது திருவைக்கொடாது தன்னிடத்தேவைத்திருக்கும்என்பதுகருதி வியலையந் திருமனையெனும்பெயர் விளைவது என்றார்.— உம்மை-இழிவுசிறப்பு.—இதனுள் வேற்றுமையுருவகம்என்னும் அலங்காரங்காண்க. (அகூ)

பஞ்சமுத்தினும் வாடுநின்பத பங்கயத்திணையொப்பெனு, விஞ்சைகற்றவர் வன்புறக்கமடத்தைவீணில்வியப்பரா,மஞ்சனப்புயறங்கைநின்வரரம்பிமீதிலும்வைப்பராம், வஞ்சகக்கொடுநெஞ்சரத்தனை வல்லரல்லர்நினைக்கினே. *

இ-ள். கறுப்பையுடையபுயல்போன்றதிருமாலுடைய தங்காய். செம்பஞ்சுஊட்டினும் அதுபொறுமல்வாடும் நின்னுடையபாததாமரைஇரண்டிற்கும் ஒப்பென்று அறிவுண்டாதற்கு ஏதுவாகிய வித்தையைக்கற்றவர் வலியமுதுகையுடைய ஆமையை வீணி

லேவியந்துசொல்லுவர். அதுவுமன்றி நின்னுடையகணவராகியசங்கரர் உன்னை மணஞ்செய்தபொழுது அப்டாகதாமனாயைவலிய அம்மிமேலும் எடுத்துவைப்பர். அதனால் ஆராயுமிடத்து இவர்கள் வஞ்சகத்தையுடையகொடியநெஞ்சினர். அதன்மென்மைத்தன்மை அறியும் அவ்வளவு வல்லரல்லர்-எ-று.

❁ அஞ்சனப்புயல்- இரண்டாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.—விரித்தல் விகாரத்தால் வஞ்சம் வஞ்சகமெனவாயிற்று.— உம்மைகள் - இழிவுசிறப்பு.—ஆமென்பன- அசை.— இதனுள் குணவதிசயம்என்னும் அலங்காரம்காண்க.

அற்றவர்க்கருள்செய்யுமம்மைநினற்பு தப்பதமம்பொனு, மற்றவர்க்கருள்பொற்றருத்தரவூடறிந்திலமென்னவே, முற்றுபொற்பரமாதர்கைத்தலமூண்டகங்குவி வெண்ணிலா, நற்றிறத்தொடுநாடிநாடிநகைக்கவாகுகிறொன்பமோ. ❋

இ-ள். எல்லாப்பற்றையும் ஒருங்கே அற்றவர்க்குஅருளைச்செய்யும்தாயே. கொடுக்கும் தொழிலைச்செய்யும் பொன்னிறத்தையுடைய கற்பகதருவானது அழகிய பொன்னாட்டை உற்ற தேவர்க்குத் தன்னாற்கொடுக்கப்படுவனவற்றைக்கொடுக்க,அதுகண்டு நமக்

கு எதிராக இது கொடுப்பதனை உட்புகுந்து அறிந்திலேமென்று புகழ்பெற்றஅழகையுடைய தெய்வமகளிரது கைத்தலமாகியதாமரைகுவியச்செய்யும் வெள்ளிய நிலாப்புறப்பட அக்கற்பகதருவைச் சிறுமைப்படுத்துகின்ற நல்லதிறத்துடன் நின்னுடையஅதிசயந்தரும்பாதங்களானவை நோக்கிநோக்கி நகைசெய்ய, அதனை அப்பாதங்கள் நகைக்கப்படுமென்றுசொல்லாமல் யாவரும் ஒளியையுடைய நகமென்றுசொல்வார்-அஃது யாதினைக்கருதி எ-று. ※ யாதினைக்கருதி என்பது எஞ்சிநின்றது.—அற்றவர் என்பதற்குப்பொருளற்றவரென்று பொருளுரைப்பினும் பொருந்தும்.—இதனுள் தற்குறிப்பேற்றவணி என்னும் அலங்காரங்காண்க.

செய்யபஞ்சுகுழம்பெழும் புனல்செல்வி நின்பதநல்லவே, துய்யபங்கயவாணிதப்பல ஆறறுத்தசொல்வாணர்போன், மையனைஞ்சுறுமெய்யருங்கவிவாணராகி மலிந்ததான், பெய்ய்டங்கலு மெய்குருன்கவிவீறு நாவிலடங்குமோ. *

இ-ள். செல்வத்தையுடையவளே. செய்யபஞ்சுகுழம்பக்கரைத்து எழும்புனலை நின்னுடைய பாதமானது வாயினால் உண்ணும்படிகொடுக்க வெள்ளியதாமரையில்இருக்கி

ன்ற கலைமகளுடைய தம்பல ஊறலை உண்ட சொல்வாணர்போல மயக்கத்தை நெஞ்சிலே உற்ற ஊமரானவரும் கவிவாணராகி மிகுந்தவதனல், உனது மெய்யடங்கலும் நிறைந்திருக்கும் உன்கவியின்மிகை ஒருவர் நாவில் அடங்குமோ அடங்காது எ-று. ☼ வீறெனுவிட லடங்குமோ என்று பாடமோதுவாருமுளர்.— பாதசலத்தினல் ஊமருங்கவிவாணராதலால் உடம்பெங்கும் நிறைந்தகவி ஒருவர் நாவில் அடங்காவெனக்கொள்க.- குழம்ப எழும்புனல் குழம்பெழும்புனல் எனக் கடைக்குறை விகாரமாயிற்று.— உம்மை-இழிவுசிறப்பு.—ஓகாரம் - எதிர்மறை. இதனுள் தொழிலதிசயம்என்னும் அலங்காரமும், கருமவேதுஎன்னும் அலங்காரமும், காண்க. (அக)

கலி விருத்தம்.

நாடியுனதற்புதநடைத்தொழில்படிக்கும்,பெடைமடவன்னமொழிபேதநடைகூறு, மாடகமணிப்பரிபுரத்தரவமம்மே, யேடவிழ்மலர்ப்பதமினாக்குமறைபோலும் *

இ-ள். தாயே. அதிசயத்தைத் தருகின்ற உனது நடைத்தொழிலைக்கருதி அதன் இலக்கணத்தைக்கற்கும்பேடையாகிய மட அன்னங்களோடு நடையின்பேதத்தை இப்படி

என்றுகூறுநிற்கும் பொன்னாலும் மணியாலும்செய்த பரிபுரத்தினுடைய ஓசையானது-தோடவிழ்ந்தமலர்போலும் நினதுபாதம் அவ்வன்னங்களுக்கு உறுதிப்பட அதிர்த்துச்சொல்லுஞ்சொற்போலும்-எ-று. ❋ இதனுள் தற்குறிப்பேற்றம்என்னும் அலங்காரம் காண்க. (கூ௰)

தோகைநின்மலர்ப்பத சுடர்க்குடையும் வெய்யோ, னாகமணிசெய்வதொர் கண்ணாடிவடிவாகு, மோகமதி தானுமது வாகியுனமுகஞ்சேர், கோகனத மென்னிதய கோகனத மென்னும். ❋

இ-ள். மயில்போன்றவளே. நின்னுடைய மலர்போலும் பாதத்தினது சிவந்தசுடருக்கு அஞ்சுகின்றசூரியன்-உன்னுடைய வடிவத்தினது சிவப்புநிறத்தைப்பெற்றுத் தன்னுடையவடிவத்தை அழகுசெய்வதற்கு ஓர் கண்ணாடியின்வடிவாகும். அதுவுமன்றி உன்பாதத்தினது கொடைக்கு அஞ்சிஅதனால் மோகத்தையுடைய சந்திரன்றானும் அக்கண்ணாடியின்வடிவாகித் தன்னிடத்து நிழலிடச்சேர்ந்த உன்னுடையமுகமாகியதாமரையை என்னிதயமாகிய தாமரைஎன்றுசொல்லும்-எ-று. ❋ பாதத்தினதுகொடைக்கு அஞ்சுதல்-அருத்தாபத்தியால்பெறப்படும். இ

தற்குக்காரணம் முகம்வேறுபடாது இருத்தலென்பதனால் தேவி முகமலர்ந்து ஈதலை எண்ணிப் பாதத்தினது கொடைக்கு அஞ்சிய சந்திரன்றன் கொடையினால் பாதத்துக்கு ஒப்புடையதாக வேண்டிக் கண்ணாடி வடிவு எடுத்து முகதாமரை தன்னிடத்து நிழலிட எதிரே நின்று அதனைத் தன்னிதய தாமரை என்றுசொல்லுமெனக்கொள்க.—சிவந்தகாந்தியினால் சூரியனும் கொடையினால் சந்திரனும் உயர்ச்சியையடையர் என்பது கருதி இவ்வாறுகூறினார். "வாரிபுடைசூழ்ந்தவையகத்திற்கில்லைபாற்,சூரியனேபோலுஞ்சுடர்" என்றும்.—"மண்ணகமனைத்து நிறைந்த பல்லுயிர்கட்காயாயமுதமீதலானும்" என்றும் கூறினார்பிறரும்.— இதனுள் தற்குறிப்பேற்றம்என்னும் அலங்காரம்காண்க. (௬௧)

அன்பினரிரப்பதி னிரட்டியருள் செய்யு,
தின்பதத ருத்துணர் நிறைந்தொளிர்வ னப்ப,
மின்பமுறுதேன்முழுகு மென்னிதயவண்டின், றன்புளக மெய்க்களி தழைக்கவருடாயே. *

இ-ள். தாயே. உன்னிடத்து அன்புடையார் இரப்பதின் இரட்டையாக ஈதலைச்செய்யும் நின்னுடைய பாதமாகிய கற்பகதருவின் பூங்கொத்திலேநிறைந்து ஒளிர்கின்ற

அழகாகிய இன்பத்தைத்தருந்தேனிற்சென்றுமுழுகும் என்னிதயமாகியவண்டினது புளகமுங்கெடாதகளிப்பும் மேன்மேல்அதிகப்பட,அருள்வாயாக-எ-று. ※ தன்னென்பது-சாரியை.—இதனுள் இயைபுருவகம் என்னும் அலங்காரமும் ஆர்வமொழி என்னும் அலங்காரமும்காண்க [இப்பத்துக்கவியும் பாதவர்ணனைகூறின.] (கூஉ)

ஒதியிருண் மூரலொளியுற்றகுழை வாக,
மோதுமுலை யற்பவிடை மூற்றுமுனிதம்ப,
மாதிபரனின்னருடிரண்டருணமாகு, மாது
நின்மலர்ப்பதமனத்தெழுதிவைத்தேன் ※

இ-ள். எப்பொருட்கும்ஆதியாகியபரமனுடைய இனியஅருள் ஒன்றாய்த்திரண்டு அருணவடிவாகும் மாதே. முன்கூறப்படும் உண்ணுடைய இருள்பொருந்தியகுழலையும் ஒளிபொருந்திய நகையினையும் குழைவுற்ற மெய்யினையும் ஒன்றோடொன்று நெருங்கும் முலையினையும் சிறிதாகியஇடையினையும் பெருத்தநிதம்பத்தினையும் மலர்போலும் பாதத்தினையும் - மறந்துவிடாமல்என்மனத்தின்கண் எழுதிவைத்தேன். அதனால் நீ காத்தருள்-எ-று. ※ நீ காத்தருள்என்பது-எஞ்சிநின்றது.—இதனுள் ஆர்வமொழிஎன்னும் அலங்காரம் காண்க. [இதுஉறுப்புக்களின்மே

னுண்டாகிய உள்ளன்புகூறியது.]   (கூரு)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தூயமதிமரகதச்செப் பொளிர்கலையுங்களங்கமுநேர் சொல்லுங்காலைக், காயுமதிதவளகருப்பூரசகலத்தொடுகத்தூரிபோலு,நீபருந்தவருந்தவவைகுறைதொறுமவ் விரண்டுமயனிறைத்தல்போலுந், தேயுமதுவளருமதுதிங்களெளிதோவுனதுசெல்வமம்மே *

இ-ள். தாயே. தூயமதியாகிய மரகதச்செப்பிலே ஒளிர்கின்ற சோடசகலையும் அதன் நடுவே இருக்கின்ற களங்கமும் அடைவே இவற்றைச்சொல்லுமிடத்து,ஒளிராநின்றமிக்கவெளுப்பையுடைய கருப்பூரத்துண்டத்துடன் கத்தூரிபோலும். அதுவன்றி அத்திங்களினிடைத்தேயும் அக்கலை பின்பு வளர்வது நீபழுக்காய் வெற்றிலையுடன்அருந்தஅருந்த அவை குறையுந்தோறும் கருப்பூரத்துண்டமும் கத்தூரியும் நான்முகன் கொடுவந்து நிரப்புதல்போலும்.அதனால்எளியதோஉனதுசெல்வம்-எ-று. * திங்களினிறுதியில் எழனுருபாகலால்,அதுதொகைகட்டுநின்றது.—கலையும் களங்கமும் ஒற்றுமைப்பட்டு இருப்பதனால், அதுவென ஒருமைப்படக்கூறினார்.—தூயமதி-கலைகளை விட்டு நீங்கிவட்டங்கொண்டிருப்பது. — செப்பென்ப

து-காண்டம்.—ஒகாரம்-எதிர்மறை.—இதனுள் பலவயிற்பொலியுவமைஎன்னும் அலங்காரமும் உதாத்தம்என்னும் அலங்காரமும் காண்க. (௯௪)

கலிநிலைத்துறை.

தேவியுனில்லஞ் சிவனுறையந்தப் புரமானல், யாவருனைக்கண் டெய்துவரிமையோர் முதலானோ, ராவல்கொடெய்த்துன் வாயிலி லணிமாதிகளாலே, மேவியசித்திப்பேறொடு மீள்வாரானோ. *

இ-ள். தேவி. உனது இல்லம் சிவன்உறைகின்றஅந்தப்புரமாதலால், யாவர் உன்னைக்கண்டுகிட்டுவர். இமையோர் முதலானோர்வந்து உன்னைக்காணவேண்டும் விருப்பங்கொண்டுநெடுநாள்இருந்து இளைத்துஉன்வாயிலிற்காத்திருக்கும் அணிமாதிசித்திகளாலே மனத்திற்கருதிய சித்தியைப்பெறுதலுடன் மீள்வாரானர்-எ-று ❊ அதனால் யான்உன்னைக்காண்பதற்கு மிக்கதவஞ்செய்தேன் என்பதுபெறப்படும்.—இதனுள் உதாத்தம்என்னும் அலங்காரமும் கருத்தாவேதுஎன்னும் அலங்காரமும்காண்க. [இவ்விரண்டுகவியும் தேவியுடையசெல்வத்துயர்ச்சிகூறின.] ௯௫

மூவர்மகேசன்முடிகொளுமஞ்சத் தொழிலாயு, மேவியபடிகத் தனமொளிவெளிகு

ழ்திரையாயு, மோவறுசெங்கேழ் விம்பமதி
ன்பத் துருவாயும், பாவைநினகலா விறை
யொடுநின்னைப்பணிவாமே. *

இ-ள். தெய்வத்தசசன் செய்யும் பாவை
போன்றவளே. அயன் அரி அரன் என்னும்
மூவரும் மகேசனும்-கட்டிலுடைய நான்கு
முடியினால் தாங்கப்படும் மஞ்சத்தின் வடி
வாகவும், அதன்மீது மேவிய படிக நிறம்
போலும் தனது ஒளி-அதன் வெளிசூழ்ந்த
திரையாகவும், அத்திரைமேல் ஒழிவற்ற நின்
னுடைய சிவந்தநிறம்பத்திபாய்ந்தநிழல்-இ
ருவரும் அனுபவிக்கும் இன்பத்தின்வடிவா
கவும், யாம்கருதி உன்னைவிட்டுப்பிரியாத உ
ன்னிறைவனாகிய சதாசிவனுடன்உன்னைப்ப
ணிவாம்-எ-று. ※ தன்தொளிஎன்றது-சதா
சிவனுடையஒளியை.—ஆயும் என்னும் ஆக்
கவும்மையொடுகூடியசெய்தென்னும் வினை
யெச்சங்களைச் செயவென் னெச்சமாகக்
கொள்க.—இன்பத்திநிறம் சிவப்பாதலால்,
சதாசிவனுடைய வெள்ளியநிறமாகிய திரை
மேனிழலிட்டதேவியினது சிவப்புநிறம் இ
வ்விருவரின்பமும் மிகுந்து உருவமெடுத்த
தாகக்கூறினார்.—அதுவென்பது - பகுதிப்
பொருள்விகுதி. [இது நாடோறும் பணி
யுங்காலநினைக்குமாறுகூறியது.] (௬௬)

கலிவிருத்தம்.

கலைமகளும்பொதுமடந்தை கமலையுமற் றவளே, மலைமகணீ கற்புடைய வனிதையெ னப்பகருங், குலமறைகளெதிர்கொடு நின் குரவிணையுமணையா, முலைகுழையப் புணர்வ துநின்முதல்வரலதிலையால். *

இ-ள். மலையரையனுடைய மகளே. கல் விக்கு உரியாரிடத்து இருத்தலால், கலைமக ளும் பொதுமடந்தை அதுவன்றிச் செல்வ த்துக்கு உரியாரிடத்திருத்தலால், திருமகளு ம் பொதுமடந்தைதானே. நின்னுடையகா லில்இருக்கும் குராமரத்திணையும் எதிர்கொ ண்டு அணையாத உன்முலை குழையும்படி பு ணர்வது நின்முதல்வர்மெய்யன்றி வேறோர் மெய்யில்லை. அதனால் நின்னைக் குலமறைக ள் கற்புடையவனிதையென்று சொலனும்- எ-று. * நீ கற்புடையவனிதையெனவே, உல கமனைத்திற்கும் தாயென்றவாறுமாயிற்று. பாதிரிமுதலாகிய பத்துமரங்களுள் குராம ரம் நன்மகளிர் அணையமலரோடுகூடிக்கொ ம்புதாழ்ந்து நிற்றலால், சிறப்புமை தோ ன்றக் குரவிணையு மணையாமுலை என்றார். — ஏகாரம்-தேற்றம். — மற்றும்ஆலும்-அசை. [இது கற்புடைமைகூறியது.] (௯௭)

வேதியர்க ளயனாவில் விஞ்சைமக ளென்றுஞ், சீதரன்றன் மணிமார்பிற் செழுங்கமலையென்று, நாதரிடத் தரிவையென்று நாட்டு வரொண்ணடங்கா, வாதிபரன் மூலபரையாமளையுன் மயக்கால். *

இ-ள். அறிவிற்கு அடங்காத ஆதிபரனுடைய ஆதிபராசத்தியாகியயாமளையே. உன்னுடைய மாயையினால்-வேதியர்கள்-அயனுடைய நாவிலேகலைமகளென்றும், திருமாலுடையமணிமார்பிலே செழுமையையுடைய திருமகளென்றும், சங்கரருடைய இடப்பாகத்தில் உமையென்றும், சொல்வர் - எ - று. ※ மாயையினால்சொல்வரெனவே, அம்மயக்கத்தைநீங்கி ஆராய்ந்து தெளிவாராயின், உன்னையன்றி வேறொருவருமில்லையென்பார் என்றவாறாயிற்று. [இது சத்திவடிவெல்லாம் தேவிவடிவேயெனக்கூறியது.] (௯௮)

கொச்சகக்கலிப்பா.

அம்மேநின்மெய்ப்பிரிவாமணிமாதிதொழுமழியா, விம்மேனிதம்மேனி யெனத்தெளிந்துபாவிப்பார், செம்மேனி யரன்வாழ்வுஞ்சிதைவதெனப்புறக்கணித்து, வெம்மேனியூழியனற்றீபமிடவிளங்குவார். *

இ-ள்- தாயே. நின்மெய்யினின்றும்பிரிதலைப்பெறும் அணிமாதி சித்திகள் நின்று

தொழாநின்ற எக்காலமும் அழியாத உன்னு டையதாகிய இம்மேனியினைத் தம்முடைய மேனியெனத் தெளிவுபெற்று மனத்தால் பாவிப்பவர்-சிவந்தமேனியையுடைய உருத் திரன் வாழ்வும் மகாப்பிரளயகாலத்தில் சி தைவதாமென்று அதனைநிந்தித்து, வெய்ய மேனியையுடைய பிரளயகாலாக்கினியந்து தீபமாகநிற்க அக்காலததும் அழிவுபடாம ல்விளங்குவார்-எ-று. உம்மை-சிறப்பு. (௯௯)

தாமாகவுனைநினைவோர் தவமிறுகத் தன மிறுகி, மாமோகப்புன்முறுவன் மனங்கவர க்கடைவிழியாற், காமாதிபலருதிப்பக் கடம் பலர்க்கே முறச்சிவனீ, யாமாமென் றயிர் ப்பமயலளிப்பராமரும்பொருளே. *

இ-ள். அரியபொருளாய்இருக்கின்றவளே உன்னைத்தாமாக நினைவோர்-நினையும் அத்த வம் முற்றுப்பெறத், தம்முடையமுலை முற் றுப்பெற்று, மிக்க மோகத்தைத்தரும் புன் சிரிப்புச் சிவனுடைய மனத்தைக்கவரக், க டைக்கண்ணாற் காமன்முதலாகியபலரும் உ திப்ப, மெய்கடம்பலர்ம்பாலும்நிறமுறச், சி வனனவன் தனித்தனியே தம்மை நீதானே யென்றுஐயமுற, அவனுக்கு ஆசையால்வரு ம் மயக்கத்தைக்கொடுப்பார்-எ-று. ※ இத னால் உன்னிடத்தே சாயுச்சியம் அடைவார்

கள்என்றவாறாயிற்று.— காமாதியல்ருதிப்ப என்றதனானே, நமனும் நமன்றூதரும் உதிப்பதுகொள்க. — அளிப்பவொன்பதன்கணின்றஆமென்பது-அசை. [இவ்விரண்டு கவியும் தியானிப்போர் அடையுந் தன்மை கூறின.] (௱)

சுந்தரிநின் றொண்டர்தமைத் தோய்வதற்குநாமகளு, மிந்திரையுமலராயன்மாலிடருழப்பவிரதியின்க, ணந்தமில்பே ரழகொடுகற் பழித்து நெடுநாள்கழியச், சிந்தையுறுபாசம்போய்ச் சிவமயத்தைச்சேர்குவரால்.

இ-ள். திரிபுரசுந்தரி. நின்னுடைய அடியாரானவர்-தம்மைக் கல்வியைக்குறித்துஞ் செல்வத்தைக்குறித்தும் முறையே நாமகளும் திருமகளும் வந்து தோய்வதற்கு முறையே மலரின்மேல் இருக்கின்ற அயனும் மாலும் இடருழப்ப, முடிவில்லாத பெரிய அழகுடனேகூடி இரதியினிடத்துக் கற்பைக்காமன்மெலிய அழித்து, இன்பத்தைநுகர்ந்து, நெடுநாள் கழியப் பின்பு சிந்தையில் உற்றமயக்கமெல்லாம்போகச்சிவரூபத்தை அடைகுவர்-எ-று. ❁ மலரயன்மாலிடருழப்பஎன்பதனால்,காமன்மெலியஎன்பது வருவிக்கப்பட்டது. [இது அடியார்பெறும் இம்மைமறுமைப்பயன் கூறியது.] (௱௧)

சேமநிதியே யமுதே தேனே நற் குணக்
கடலே, யாமளையே யன்பர்மனத் திருந் துமு
ரைக் கடங்காத, கோமளமே யம்மே நின்
கோகனதத் தாள்வழுத்து, மாமறைபோ
லென்பாடல்வண்டமிழுங்கொள்வாயால். ※

இ-ள். சேமத்தில்இருக்கும் நிதிபோல்ப வளே. அமுதம்போல்பவளே. தேன்போல் பவளே. நற்குணமாகியகடலையுடையவளே. யாமளையே. அன்பருடைய மனத்தின்கண் இருந்தும் அவர் உரைக்கு அடங்காத கோமளத்தையுடையவளே. தாயே. நின்னுடைய தாமரைபோலும் தாளை வழுத்தாநின்ற மாமறைபோல், என்னுடையபாடலாகிய வளவியதமிழுங்கொள்வாயாக-எ-று. ※ கோமளம் இளமைச்செவ்வி.— ஒரும்மை - சிறப்பு.— ஒரும்மை-எச்சம்.— இதனுள் உவமையைப்புகழ்ந்து உவமித்தவதனால், புகழுவமை என்னும் அலங்காரம் காண்க. (௱உ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆதவனுக் கவன்கிரணத் தங்கியைக்கொ
ண்டாலாத்தி சுழற்றலென்கோ, சிதமதிக்கவ
னிலவினொழுகுகலைப்புனல்கொடுப சரிப்ப
லென்கோ, மோதியமைக்கடல்வேந்தையவ
ன்புனலான் முழுக்காட்டு முறைமையென்

கோ, நீதருசொற் கவிகொடுனைப் பாடியு
னதருள்பெறுமென்னிதியம்மே. *

இ-ள். தாயே- நீதந்தசொல்லாற் றொடுக்குங்கவிகொண்டு உன்னைப்புகழ்ந்துபாடி உனது அருளைப்பெறும் என்னிதியைச்-சூரியனுக்கு அவன்கிரணமாகிய அனலைக்கொண்டு தீபாலாத்திசுழற்றுதலென்றுசொல்வேனோ. குளிர்ச்சியையுடைய மதியை அவன் நிலவினால் ஒழுகுஞ் சந்திரகாந்தப்புனல்கொண்டு உபசரிப்பதென்றுசொல்வேனோ. திரைஒன்றோடொன்றுமோதியகறுப்பையுடைய கடல்வேந்தனாகியவருணனை அவனுடைய புனலின்முழுகச்செய்புடமுறைமைஎன்று சொல்வேனோ. நீ சொல்வாயாக-எ-று. ☼ நான்கனுருபை- இரண்டனுருபாகக்கொள்க.- முழுகவாட்டுமென்பது - முழுக்காட்டுமெனக் கடைக்குறைவிகாரம். — ஒகாரங்கள்- வினா.—இதனுள் நின்கவியால் உன்னைப்பாடுதென முன்னொன்று தொடங்கி அதனை முடித்தற்கு வேறுவேறாக மூன்றுவகைப் பொருளெடுத்துக் கூறியவதனால், வேற்றுப்பொருள் வைப்பு என்னும் அலங்காரம் காண்க. [இவ்விரண்டுகவியும் இப்பனுவலை எடுப்பிக்கும்வண்ணங்கூறின-] (௱௩)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வேதநுண்பொரு ளாதிசுந்தரி யீறடங்க
லுமாயமே, யீதறிந் துவி டாதொ லுங்கவி
ராசபண்டிதன் யீனாயா, னுதரஞ்சகி தாள்
பெறுந்திருநாமமொன்ப து நூறுமே,யோ
தினன்பல போகமுஞ்சிவ லோகமும்பெறு
வார்களே.... ....*

இதன்பொருள் - வெளிப்படை.

சௌந்தரியலகரி
முற்றுப்பெற்றது.

சரவணோற்பவகுரு சரணமேசரணம்.

உரையாசிரியர்பெயர்.

பிறைபுனைந்தருளுஞ்சிவன்றன துவகைப்
பெருக்கெனவடமொழிமுனிவ, னறைசவுந்
தரியலகரியைத்தமிழாலருள்கவிராசபண்டி.
தன்ற, னிறைமனங்கருதித்தாழைமா நகரினி
லைபெற வாழ்கவி யெல்லை, னிறையளவெனி
னுத்தவறிலா துரைதேர்ந் தெழுதினனெழில்
விளக்கெனவே.......... ....*



சிவமயம்.

சௌந்தரியலகரிச் செய்யுண் முதற்குறிப்பகராதி.

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
அந்தரபணி ...	௯௨	ஆனமின்	௫௭
அம்மெநின் ..	௱௫௮	இகல்பொர	௱௫
அம்மைநின் ..	௱௭	இடம்படர்	௱௮
அரணிடத்	௱௪	இணைவிழி	௱௰
அரன்கயி...	௮	இத்தனை	௫
அரியதா	௭௭	இந்து	௫௰
அரியமென்...	௱௪௪	இமநெடு.....	௱௪௯
அருளுமுன	௮௯	இமய	௱௰௯
அலர்ந்த	௯௯	இருசுடர்	௮௰
அறக்கிழ	௪௧	இருசெவி.... ..	௱௯
அறிவிலர்...	௰௭	இறைவிநின்விசு	௮௫
அற்றவர்	௱௪௮	இறைவிநின்னி-	௱௰௭
அற்றையரு ...	௱௨௧	இன்னதன்	௯௯
அன்பின	௱௫௨	உம்பர்..... ...	௱௪௨
அன்புமுற் ..	௱௰௮	உள்மகிழ்... ...	௱௪௯
ஆடலம்	௫௫	உனதுசர	௪௯
ஆதவனு	௱௯௧	உனதுநிற	௫௨
ஆதிசங்	௯௰	ஒருமலர்	௱
ஆதிசுந்	௯௯	ஓதுயிரு	௱௫௯
ஆதிமுன்ன	௯௨	கருங்குழ	௱௰௨
ஆதிவிந்	௫௯	கருவிழி..... ..	௯௯
ஆரமுகின்	௨௭		

செய்யுள்	பக்கம்	சட்யுள்	பக்கம்
கலைமக	௱௩௰	நடினை	௱௫௰
கூரியி	௯௬	நித்தமொரு...	௱௨௯
கொத்துவிரி ...	௱௩௯	நிலைபெறு	௮௯
கொற்றவா ...	௱௩௨	நீநந்து	௯௰
கோதை	௯௮	நெடிய	௱௰௧
கோலநகர் ...	௱௧	பகுத்த	௱௨௨
சிடகோண	௩௫	பசுபதி	௭௨
சிவமெனும் ...	௰௩	பஞ்சமூ	௱௪௭
சுந்தரி	௱௬௰	பணைபார்	௪௩
செந்திரு... ...	௱௨௬	பாததா	௰௫
செய்யப ...	௱௪௯	பிரமலி	௬௯
சேமநிதி	௱௬௧	பேருறு	௫௯
தருண	௱௩௩	பொருமலர்	௱
தளைம	௱௩௬	பொற்கத	௱௪௰
தாமாக	௱௫௯	மகவா	௱௨௩
தாளிணை	௩௩	மறுபட	௱௪௫
திருமக	௱௨௮	மனமூநீ	௮௨
தூயகந்	௱௩௫	மாயன்	௨௩
தூய்மதி... ...	௱௫௪	முக்கணி... ...	௱௩௰
தேவியு	௱௫௫	முதுமறை	௭௰
தேவென	௰௯	மூளரிமா	௱௩௫
தொடுகர	௨௰	முன்னமொ...	௱௨௭
தோகைநின்க-	௱௰௪	முன்னைத்.....	௮௬
தோகைநின்ம-	௱௫௧	மூலமணி	௨௮

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
மூலமே......	௱௩௪	வம்மை	௱௩௭
மூவருக்கு.. ..	௬௪	வயங்குறு ...	௱௨௫
மூவர்ம... ...	௱௫௫	வரிவிழி...	௱௬
மேகலை	௨௫	வாரின்ப... ...	௪௮
மொழிந்த........	௩	விரித்த... ...	௮௮
மொழிவதுன்	௬௭	விள்ளநா......	௱௨௰
மோக.... ..	௭௯	வேதநுண் ...	௱௬௩
மோதிய....... ..	௯௪	வேதரஞ்ச	௬௫
யாமளை......	௬௭	வேதியர் ...	௱௫௮
வடமொழி........	௰	வேரிநாண் ...	௱௰௫

அகராதி-மூற்றிற்று.

☞ இந்தப்புத்தகம்வாங்கவேண்டியவர்கள் சென்னபட்டணத்திலே பெத்துநாய்க்கன்பேட்டையில் சந்திரப்பமுதலியார்வீதியில்-சதுரங்கபட்டணம் - சாமிமுதலியார் குமாரர் அண்ணாமலைமுதலியாரது சரஸ்வதிவிலாசவச்சுக்கூடத்திலும், யாழ்ப்பாணத்திலே-வண்ணைநகரில் வைத்தீசுரன்கோயின் மடத்திலே தில்லைநாத வுபாத்தியாயரிடத்திலும்,விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

இஃது
வீ-கோவிந்தநாயகரால்- அச்சடிக்கிப்பதிப்பிக்கப்பட்டது.